www.padippakam.com


# தொழிலாளர் பாதை

DM 1,50

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

★ இதழ் எண் 23 ★ மே—ஜூன், 1989 ★



சமூக அறிவியல் மன்றம் : சொற்பொழிவு

**சீனாவில் நடப்பது என்ன?**

பேச்சாளர்: அருண்குமார்
நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகம்

இடம்: தேவ நேயப் பாவணர் நூலகக் கட்டிடம் (L.L.A. BUILDING) அண்ணாசாலை, TVS ஸ்டாப்பிங்

காலம்: ஜூன் 18, 1989, மாலை 5 மணி

நுழைவுக்கட்டணம்: ரூ 1/, வேலையற்றோர் மாணவர் 0-50 காசு


# எதிர்ப்புரட்சி ஸ்டாலினிச அதிகாரத்துவத்தைத் தோற்கடி !

# சீனத் தொழிலாளர்களின் அரசியல் புரட்சியின் வெற்றிக்குப் போராடு!

**தொழிலாளர் பாதை ஆசிரியர் குழுவின் அறிக்கை**

ஊழல் நிறைந்த சலுகைகள் மிக்க ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்குஎதிராக பெய்ஜிங் நகரை ஸ்தம்பிக்கச் செய்த சீனத் தொழிலாள வர்க்கத்தின், மாணவர்களின் பிரமாண்டமான அரசியல் புரட்சி இயக்கத்தை ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்ததானது மீண்டும் ஒரு முறை உலகத் தொழிலாள வர்க்கத்தின் கண்களின் முன்னால் ஸ்டாலினிசத்தின் கோர எதிர்ப்புரட்சித் தலைமையை அம்பலப்படுத்தியுள்ளது.

தொழிலாளர்களையும், மாணவர்களையும், வயோதிகர்களையும், சிறுவர்களையும் கொண்ட பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினர் மீது சுடத்தயங்கிய ராணுவத்தினர் மீது ராணுவ கவச வாகனங்கள் ஏற்றப்பட்டு தானியங்கி துப்பாக்கிகளினால் சரமாரியாக குண்டுகளை பொழிந்து பல்லாயிரக்கணக்கானோரை கொன்று குவிதத வண்ணம் பெய்ஜிங்கிலுள்ள டியானென்மென் சதுக்கத்தை நோக்கி ஜூலை 4 அதிகாலையில் ராணுவ கவச வாகனங்கள் விரைந்தன.

'உயிரிழந்த ஆயிரக்கணக்கான மக்களில் பெரும்பாலோர் அப்பாவிகள் என்று அசாதாரணமான முறையில் சீன வானொலி முதலில் ஒலி பரப்பி ஆங்கிலச்செய்தி கூறியது. மக்கள் கூட்டத்தை உடைத்துக்கொண்டு அணி அணியாக முன்னேறியராணுவத்தினர் தெருக்களில் நின்ற மக்களை கண்மூடித்தனமாக சுட்டுத் தள்ளியதாக அது கூறியது',

"இந்த அரசாங்கம் நமது வரலாற்றில் முன்பிருந்த எல்லா அரசாங்கத்தையும் விட மோசமானதாகும்" என்று ஒரு தொழிலாளி மக்கள் படுகொலையை பற்றி கண்டனம் செய்தார், டியானென்மென் சதுக்கத்தை சுற்றியுள்ள சுவர்களில் 'லீபெங் (சீனப் பிரதமர்) நீ ஒரு பொழுதும் அமைதியுடன் வாழமாட்டாய்'' என இரத்தத்தினால் எழுதப்பட்டிருந்தது.

பி.பி.சி. செய்தச்சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு உறுப்பினரும் பெய்ஜிங் சமூக விஞ்ஞான அகடமியில் பணிபுரியும் பேராசிரியர் யாங் சியான்யி சீன ஆட்சியாளர்களை "சீன வரலாற்றில் மோசமான கிரிமினல்கள்" என்றும் இதற்கான பொறுப்பு "மிக மோசமான கிரிமினல்களான டெங் சியாவோபிங்கும் (ராணுவக் கமிஷனின் தலைவரும), யாங் சாங்குன்னும் (ஜனாதிபதி) லீ பெங்கும் (பிரதம மந்திரி) ஆவார்" என்றார். மேலும் "அவர்கள் சீன வரலாற்றில் மிக மோசமான கிரிமினல்கள் என்ற வரிசையில் போவார்கள் இதுவே சீனாவின் நவீன வரலாற்றில் நடைபெற்ற மிக இகழ்ச்சியான சம்பவமாகும். அப்பாவிமக்களை இப்படியாக படுகொலை செய்த பொறுப்பு முன்னைய எந்த ஒரு அரசாங்கத்திற்கும் இருக்க முடியவில்லை" என்றும அவர் கூறினார்.

இப்படியான கருத்துக்களை வெளியிடுவதற்காக தவரை பேராபயத்திற்கு உள்ளாக்க வில்லையா என கேட்டதற்கு "இது [illegible] அல்ல. இது கிரிமினல்களின் [illegible] செய்வதும் [illegible] ஏற்கனவே மிக அதிகமான மக்களை கொன்றுவிட்டனர் அந்தப் பட்டியலில் அவர்கள் என்னையும் போடலாம். ஆனால் நாம் கோடிக்கணக்கான மக்கள், நம் எல்லோரையும் அவர்களால் கொல்ல முடியாது.', என்று யாங் கூறினார்.

இரத்தச் சிந்தல் மேலும் தொடராது தடுக்கும் பொருட்டு, சதுக்கத்தை விட்டு வெளியேற மாணவர்கள் தீர்மானித்து, வெளியேறும்போது உலகப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசிய கீதத்தைபாடிய வண்ணமும், V என்று வெற்றிச் சைகையையும் செய்தவாறு சென்றனர். அவ்வாறு சதுக்கத்திலிருந்து வெளியேறிச் சென்ற மாணவர்கள் மீது ராணுவ கவச வாகனம் ஏற்றப்பட்டு பல மாணவர்கள் நசுக்கிக் கொல்லப்பட்டனர்.

சீன ராணுவத்தின் படுகொலைகளை எதிர்த்து சீனா முழுவதும் தொழிலாளர்கள மாணவர்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர். பெய்ஜிங் நகரை முழுமையாக தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தத்தின் மூலம் ஸ்தம்பிக்கச்செய்தனர்.

## முதலாளித்துவ எதிர்ப்பு போராட்டம்

அமெரிக்காவிலுள்ள, இந்தியாவிலுள்ள முதலாளித்துவ பததிரிகைகள் பரப்புகின்ற பொய்களுக்கு நேர்மாறாக, சீனத் தொழிலாளர்களும் மாணவர்களும அமெரிக்க மாதிரியிலான முதலாளித்துவ "ஜனநாயகத்தை" அதாவது பெரும் முதலாளிகளின் சர்வாதிகாரத்தை அரசியலமைப்பு சாதனத்தினூடாக மூடிமறைப்பது போன்றதை ஸ்தாபிப்பதற்காக போராடவில்லை, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் டியானென்மென் சதுக்கத்திலும, சீனாமுழுவதும் ஊர்வலங்கள் நடத்தியது முதலாளித்துவ உற்பத்தி அமைப்பையும் அது 1949 சீனப்புரட்சிக்கு முன்பு கொண்டிருந்த கோரநிலையும் மீண்டும் கொண்டுவருவதற்காக

(2-ம் பக்கம் பார்க்க

# நேபாளத்திற்கு எதிரான பொருளாதார தடையை அகற்றப் போராடு ! காங்கிரஸ் ஆட்சியை வெளியேற்று !

ராஜிவ் காந்தியின் பிற்போக்கு அரசாங்கத்தினால் சிறிய அண்டை நாடான நேபாளத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையையும் பேரினவாதத்தையும் இந்தியாவிலுள்ள தொழிலாள வர்க்கம் பிடிவாதமாக எதிர்த்துகண்டனம்செய்ய வேண்டும். பொருளாதாரத்தடையை உடனடியாக நீக்கும்படி தொழிலாள வர்க்கம் தமது தொழிற்துறை பலத்தை அணி திரட்டிப் போராட வேண்டும். அதே சமயம் நேபாளத்திலுள்ள தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் நேபாளத்தின் பிரேந்திரா மன்னர் தலைமையிலான பிற்போக்கு அரசாங்கத்தின் தேசியவாத பிரச்சாரத்திலிருந்து வேறுபட்டு நிற்க வேண்டும், அவர்கள், குடிபெயர்ந்த இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்டிருக்கும் பாகுபாடுகளை உடனடியாக அகற்றும்படி போராட வேண்டும்.

நேபாளத்திலும் இந்தியாவிலும் உள்ள தொழிலாளர்கள் இந்த இரு ஏகாதிபத்திய சார்பு அரசாங்கங்களும் பாட்டாளி வர்க்கமானது ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி தனது புரட்சிகர கடமையை நிறைவேற்ற போராடுவதிலிருந்து திசைதிருப்பும் நோக்கத்துடன் எழுப்பும் மோதல் கொள்கைகளை நிராகரித்து இரு அரசாங்கங்களையும் தூக்கி வீசி, உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியாக இந்திய உபகண்டத்தில் ஒரு ஐக்கிய சோசலிச குடியரசுகள் அமைக்கப் போராட வேண்டும் என நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகம் அழைக்கிறது,

நேபாளத்தின் வர்த்தகத்திலும் பொருளாதாரத்திலும் இந்திய முதலாளிகளுக்குள்ள சிறப்பு சலுகைகளை தொடருவதற்கு மறுக்கும் நேபாள அரசாங்கத்தை அச்சுறுத்தும் நோக்கத்துடன் இந்திய முதலாளித்துவ அரசாங்கம் மார்ச் 23 இலிருந்து வர்த்தகத்தடை போட்டுள்ளது. உலக முதலாளித்துவ நெருக்கடியின் மத்தியில் காங்கிரஸ் ஆட்சியாளர்களின் இந்த நிலைப்பாடானது இப் பிராந்தியத்தில் உள்ள சிறிய பலவீனமான நாடுகளை அரசியல், பொருளாதார ரீதியாக நெரித்து மூச்சுத் திணறச்செய்து, இந்திய முதலாளித்துவ வர்க்கம் லாபம் சம்பாதிப்பதை அடிப்படையாகக் கொண்டதாகும்,

நேபாளத்திற்கு பெற்றோலிய உற்பத்திகள் செய்வதை இந்தியா நிறுத்தியுள்ளது. நேபாளததில் பெற்றோலிய சேமிப்பு ஒன்றரை மாதங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. தொழிற்துறைகளுக்கும், வீட்டுப் பாவனைக்கும் பெற்றோலிய பற்றுக்குறை மிகப் பெரும் கஷ்டங்களை உண்டுபண்ணியுள்ளது. நேபாளத்திற்கு மருந்துப் பொருட்களும்உப்பும் செல்வ[illegible] கூட நிறுத்தப்பட்டுள்ளது [illegible] நேபாளியர் நிலைமை [illegible] கூறுகையில இரு நா[illegible] இடையில் யுத்த [illegible] கூட இப்படியா[illegible]

★11ம் ப[illegible]

**ஈழத்திலிருந்து மாலத்தீவிலிருந்து, இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை வாபஸ்[illegible]**
**[illegible] போராடும்படி ஸ்டாலினிச இ. பி. எம். சி. பி. ஐ. தலைமைகளை நிர்ப்ப[illegible]**

படிப்பகம்

www.padippakam.com



# எதிர்ப்புரட்சி ஸ்டாலினிச அதிகாரத்துவத்தை தோற்கடி !....

அல்ல. அதற்கு நேர்மாருக சர்வதேசிய புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் 'சர்வதேசிய' கீதம் தொடர்ந்து இசைக்கப் பட்டதும் டியானென்மென் சதுக்கத்தல் தோன்றியகடல் அலைபோன்ற செப்பதாகைகளும் ஊர்வலங்களின் கோஷங்களும் இவை அனைத்துமே உணமையான கம்யூனிச கோட்பாடுகளின் பால் சீனமக்களுக்கு உள்ள உணர்ச்சி ததும்பும் விசுவாசத்தை எடுத்துக்காட்டுகிறது

சீனத் தொழிலாளர்களின், விவசாயிகளின் மாணவர்களின் வாழ்க்கைத் தரங்கள் டெங்சியாவோபிங் தலைமையில் முதலாளித்துவ சார்பு கொள்கைகளினால் சீரழிக்கப்பட்டுள்ளது. பணவீக்கம் 30 சதமாகவும், வேலையின்மை 2 கோடியிலிருந்து 20 கோடிக்கு இடையிலும், அது பெருமளவில உயர்நத கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரிகளின் உறவினர்கள் மத்தியிலிருநது டெங்கின் கொள்கைகளினால் உருவாக்கப்பட்ட தலையெடுக்கின்ற முதலாளித்துவ வர்க்கத்தினால் ஊக்குவிக்கப்பட்ட கொள்ளை லாபம் அடைதலும், ஊழலும் அளவு கடந்துள்ள முதலாளித்துவத்தின் மிகக் காட்டுமிராண்டித் தனமானதீங்குகளான—சிறுவர் உழைப்பு, குரூரமான வேர்வை சிந்தும் சுரண்டல், விபச்சாரம், போதைப்பழக்கம் -சிறப்பாக வெளிநாட்டு மூலதனத்தை கவருவதற்காக உருவாக்கப்பட்ட அந்நிய ஆட்சியிலடங்கிய பகுதிகளை சிறப்பு பொருளாதார மண்டலங்களில் செழிப்பாக வளர்ச்சி அடைகிறது. பதது வருடங்களாக டெங்கின் கொள்கைகளை "பொருளாதார சீர்திருத்தமென புகழ்ந்த முதலாளித்துவ பத்திரிகைகள் இன்று இபபடியான கொள்கைகள் ஏன் பரந்த துன்பத்தையும், சமூக எழுச்சியையும் உருவாக்கியுள்ளன என்பதை விளக்க முயற்சிக்கவில்லை.

## டிராட்ஸ்கி எதிர்பார்த்த அரசியல் புரட்சி

மாணவர்கள் தொழிலாளர்களின் பரந்துபட்ட எழுச்சிக்கு பின்னல் இருப்பது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்துவம் முதலாளித்துவத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கான முயற்சியினால் உருவாக்கப்பட்ட நெருக்கடியாகும், இவ்வாறு சீனுவில் வளர்ச்சி அடையும் புரட்சி அதிகாரத்துவத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் எதிரானதாகும். இது 50 ஆண்டுகளுக்கு முன்பு நான்காம் அகிலத்தின் ஸ்தாபகரான லியோன் டிராட்ஸ்கி, ஒட்டுண்ணி ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கு எதிராக எதிர்பார்த்த அரசியல் புரட்சியாகும்.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினரின்கோரிக்கைகள்-பேச்சு சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் போன்ற ஜனநாயக [illegible]ம்மைகளுக்காகவும் ஊழ[illegible] சலுகைகளுக்கும் [illegible] கட்ட வேண்டும் [illegible]ரண்டுமே திட்ட[illegible] நான்காம் அகி[illegible]பன ஆவணத் [illegible]கி எழுதியது [illegible]புடையதாக

[illegible]சியனில்ஒரு [illegible]ழுச்சி ஐயத் [illegible] சமூக சமத் [illegible] அரசியல் [illegible] எதிரான [illegible] போராட்

டமாக தொடங்கும். அதிகாரத்துவததின் சலுகைகள் ஒழிக!......"

"தொழிற்சங்கங்களின் ஆலைக் குழுககளின்சுதந்திரத்திற்கான உரிமைக்கான போராட்டமும் சோவியத் ஜனநாயகத்தை புனருத்தாரணம் செய்து வளர்ச்சியுறச் செய்வதற்கான போராட்டமாக விரிவடையும்."

எந்த ஒரு பெரும் புரட்சிகர இயக்கத்தைப் போன்று சீனுவில அரசியல புரட்சி, ஜனநாயக உரிமைகளை மையமாகக்கொண்டு பரந்த மிகப் பொதுவான கோரிக்கைகளுடன் தொடங்கி உள்ளது. அது மிக அடிப்படையான சமூக பிரச்சனைகளுடன் தொடரும்: சீன சமூகத்திலிருந்து சலுகை மிகக அதிகாரத்தட்டுக்களையும், தோன்றுகின்ற சீன முதலாளிததுவ வர்க்கத்தையும் சுரண்டலாளர்களையும் களைந்து அகற்றல், சீனவின் திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தை மறுபடியும் விருத்தியடையச் செய்து அதனை தொழிலாளர்கள், விவசாயிகளின் ஜனநாயக கட்டுப்பாட்டின் கீழ் மறு ஒழுங்கமைப்பு செய்தல்.

ராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்ட அன்றைய இரவு துருப்புகளும். போலீசாரும் வேகமாக பாய்வதை தடுப்பதில் சுரங்க ரயில்வே தொழிலாளர்கள் முக்கிய பங்கு வகித்தனர், வீதித் தடைகளைச் சுற்றி சுரங்க ரயில்வே பாதை வழியாக டியானென்மன்சதுக்கத்திற்கு துருப்புகள் வரப்போகின்றன என்ற வதந்தகளை கேள்வியுற்றதும் அவர்கள் சுரங்க ரயிலுக்கான மின்சாரத்தை துண்டித்து முழு கட்டுமான அமைப்பையும் மூடச் செய்வதற்கு நான்குநாட்கள் சுரங்க ரயிலவே பாதை மூடபபட்டிருநதது ரயில்களிலும, ஸ்டேஷன்களிலும "சுரங்க ரயில் தொழிலாளர்கள் மாணவர்களுக்கு ஆதரவு" என்று கூறும் வாசகங்கள் தோன்றின,

## "தலைவர்கள் உண்மையான கம்யூனிஸ்டுகள் இல்லை"

சுதந்திர தொழிற்சங்க அமைப்பைச் சேர்ந்த கம்பளிச் சட்டை செய்யும் ஆலையில் பணிபுரியும் 30 வயது தொழிலாளி வாங் காங் கூறியதை நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டது: "கம்யூனிஸ்ட் கட்சி பொதுவாக நலலது, ஆனுல் பிரச்சனை என்னவென்ருல் அது ஒரு விரல்விட்டு எண்ணக் கூடிய லீபெங் போன்ருேராலும் அவரது கைப்பொம்மை அரசாங்கத்தாலும பொய்யாக சிருஷ்டிக்கபபடுகிறது. இந்த அரசாங்கத்தின் கீழ் எந்தஒரு சமத்துவமும் இல்லை தலைவர்கள் தாம் ஒரு தேசத்தின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறுகிருர்கள், அவர்கள் கம்யூனிசத்தை நடைமுறைப்படுத்துவதாக கூறுகிருர்கள். அவர்கள் சீனக் கொடியை தமது கொடியாக பயன்படுத்துகிருர்கள்; ஆனுல் நாட்டு மக்கள் இப்படியான தலைவர்கள் உண்மையான கம்யூனிஸ்டுகள் இல்லையென உணருகின்றனர்.

இப்படியான கருத்துக்கள் ஐயத்திற்கிடமின்றி கோடிக்கணக்கான சீனத் தொழிலாளர்களின் சிந்தனையை பிரதிபலிக்கிறது, அவர்கள் 1989 புரட்சியை [illegible]

பேணுகின்றனர், அத்துடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர், அவர்கள் சலுகை மிக்க ஸ்டாலினிச அதிகாரத்துவத்தை வெறுக்கின்றனர். இந்த அதிகாரத்துவம் அதன் அரசியல் அதிகார ஏகபோகத்தை தொழிலாள வர்க்கத்தை ஏழ்மையாக்கவும். அதிகாரத்துவத்தட்டிலிருந்து அதிகமாக வந்த ஒரு புதிதாக உருவாக்கப்பட்ட முதலாளித்துவ சுரண்டலாளர்களை வளப்படுத்தவும் முதலாளித்துவ சொத்து உறவுகளை மீண்டும் நிலை நாட்டவும் பயன்படுத்துகிறது.

## எதிர்புரட்சி படுகொலைகளுக்கு சி. பி. எம். சி. பி. ஐ. தலைமைகளின் ஆதரவு

பெய்ஜிங் தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்கும் எதிராக 'ராணுவத்தை அழைக்க ஸ்டாலினிச அதிகாரத்துவம் எடுத்த முடிவு சீனுவில் வளர்ச்சியடையும் போராட்டத்தின் சமரசம் செய்ய முடியாத தன்மையை எடுத்துக்காட்டுகிறது. இப்படியான நிலையில் சீனுவில் நடப்பது உள்நாட்டு விவகாரம் அது பற்றி எதுவும் கூறுவதற்கு இல்லைஎன சி.பி.எம்மின் பொதுச் செயலாளர் நம்பூதிரிபாட், முதலில் கூறினுர். சி.பி.எம்.இன் தமிழ் நாளிதழான தீக்கதிர் 29-5-89ல் சீன நிலைமையை பின்வருமாறு பூசி மெழுகியுள்ளது: "மாணவர் போராட்டம் ஆரம்பித்த நேரத்திலேயே ஜனநாயகம் விரிவுபடுத்தப்பட வேண்டும (?) என்பதில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியும் சீன அரசும் அக்கறையோடு உள்ளன என்பது தெளிவு படுத்தப்பட்டது. மக்களது சமூக வாழ்வினை சீர்குலைக்க வேண்டியதில்லை, மாருக பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என மாணவர்களுக்கு அரசும.... கட்சியும் அன்பழைப்பு (!) விடுத்தன"

ராணுவச் சட்டம் விதிக்சப்பட்டது—கிளர்ச்சி செய்யும மாணவர்களை சுட்டுப் பொசுக்க அல்ல மாருக குழம்பிய குட்டையிலே மீன் பிடிக்க முனையும் அந்நிய சக்திகளின ஊடுருவலைத் தடுக்க, மக்களின் அன்ருட வாழ்வைப் பாதுகாக்க அது பிரகடனப்படுத்தப்பட்டது".

எதிர்புரட்சி சீன ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினுல் மாணவர்கள் பல்லாபிரக்கணக்கில் சுட்டுப் பொசுக்கப்பட்டது மட்டுமல்லாமல் ராணுவ டாங்கிகளினுல் ஏற்றி நசுக்கவும் பட்டனர் என்ற உண்மை சி பி எம், சி.பி.ஐ. தலைமைகளின் எதிர்புரட்சி தன்மையை மேலும் அம்மணமாக்கி உள்ளது.

அதன் பின்பு வெளிவந்த சி.பி.எம. சி.பி.ஐ யின் பத்திரிக்கைகள், ராணுவப்படுகொலையை நியாயப்படுத்த சீன ஸ்டாலினிச அரசானது தொழிலாள மாணவர்களின் இயக்கம் எதிர்ப்புரட்சி இயக்கம் எனக் கரிபூசியதை ஆதரித்து எழுதியுள்ளன. அதேபோல வெங்கடயம் போன்ற மாவோவாதிகளின் பிரசுரங்களும் சீன அரசியல் புரட்சி இயக்கத்தை, முதலாளித்துவ சீரழிவுப்பாதையில செல்லும் மாணவர் இயக்கம் என கரி பூசியுள்ளனர். ஸ்டாலினின் மாவோவின் அதிகாரத்துவங்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ் லெனின் போராடிய சர்வதேசிய புரட்சி [illegible]

திராகரித்து சர்வதேசிய புரட்சி இயக்கங்களை காட்டிக்கொடுத்து தோல்விக்கு இட்டுச் சென்றதை நியாயப்படுத்தி புகழ்பாடும் இவர்கள் அனைவருமே இன்று தொழிலாளர்களின், மாணவர்களின் புரட்சி இயக்கத்தினை மாபெரும் இரத்தவெள்ளத்தில் மூழ்கடித்துக் கொண்டிருக்கும் சீன ஸ்டாலினிசத்தின் பங்காளிகள்,

பெய்ஜிங் மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும ஆதரவு நாடு பரந்தளவில் வளர்ச்சியடைகிறது. சீனுவின் மிகப்பெரும் நகரமான ஷங்காயில் சுமாராக 5 லட்சம் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து டியானென்மன் சதுக்கத்தில் ராணுவத் தலையீட்டுக்கு எதிராக பொது வேலை நிறுத்த எச்சரிக்கை விட்டுள்ளனர். சீனவின மத்திய நகரங்களில் ஷியானில் 3,00,000 பேர் ஊர்வலத்தல் பங்கு கொண்டனர் அதே சமயம் தென் சீனுவில் கன்டனில் முதல்முறையாக பரந்த ஊர்வலம் நடைபெற்றது என அறிவிக்கப்பட்டது.

## அதிகாரத்துவத்துள் பிளவு !

ஸ்டாலினிச அதிகாரத்துவம் தொடர்ந்து குழுப் போராட்டங்களில் பிளவுண்டுள்ளது. லீபெங்கின் ஆதரவாளர்களுக்கும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான ஜாவோசியாங்கின் ஆதரவாளர்களுக்கும இடையேகுழுப்போராட்டம் இருந்த பொழுதிலும் இவ்விரு குழுக்களுமே விடாப்பிடியாக தொழிலாள வர்க்கத்துக்கு விரோதமானவையாகும்.

லீ பெங் ராணுவச் சட்டத்திற்கு கட்டளை பிறப்பித்ததன் காரணமாக மாணவர்களின் தொழிலாளாகளின் கோபத்திற்கு பிரதான ஆளானுர். ஜாவோ ஜியாங்குழுவினரின் பிற்போக்குத்தன்மை குறைவானதல்ல. முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டு வரும் டெங்சியாபிங்கின் கொள்கையின் பிரதான மூலகர்த்தாவாக விவசாய கூட்டுப்பண்ணையை உடைப்பதற்த தலைமை தாங்கியவர் ஜாவோ ஜியாங் ஆவார்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஜாவோ பிரிவினர் அமெரிக்க ஏகாதிபத்தியததுடன் நேரடித் தொடர்பில உள்ளனர். ஜாவோவின் பிரபல்யமான ஆதரவாளரும், தேசிய மக்கள் சாங்கிரசின் தலைவருமான வான் லீ, சீன திரும்பு முன் வாஷிங்டனில் புஷ் நிர்வாகத்துடன் பெய்ஜிங்கின் புரட்சிகர வெடிப்பை எவ்வாறு சமாளிபபது என்பது பற்றிய விவாதத்தில் ஈடுபட்டிருந்தார்.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கு எதிரான இயக்கம் சம்பந்தமான புஷ் நிர்வாகத்தின் குரோததத்தை அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் பின்வருமாறுவெளிப்படுத்தினுர், "கலவரத்தை தூண்டிவிடுபவர்களாக எந்த ஒரு வழியிலும் நாம் காட்டப்படக்கூடாது என நான் கருதுகிறேன், எமது பொறுப்புக்கு தகுந்தவாறு நாம் இருக்கவேண்டும் என நான் கருதுகிறேன்."

சீன, சோவியத் யூனியன் இரண்டிலும் ஸ்டாலினிசத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான உண்மையான உறவுகளை வெளிப்படையாக அச்சாரமாக [illegible]

பேக்கர் கூறியதாவது : "மக்கள் சீனக் குடியரசில் குறிப்பிடத்தக்க ஸ்திரமற்ற நிலைமையை நாம் பார்ப்பது அமெரிக்காவின் சிறந்தநலன்களுக்கு உகந்ததாக இருக்கும் என நான் எண்ணவில்லை, அதே போல் சோவியத் யூனியனில் குறிப்பிடத்தக்க ஸ்திரமற்ற நிலைமையை நாம் பார்ப்பதும் அமெரிக்காவின் சிறந்த நலன்களுக்கு உகந்ததாக இருக்கும் என்று நான் எண்ணவில்லை.

பேக்கரின் அறிக்கையை வெளியிட்டபின் 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை குறிப்பிட்டதாவது: "உலகப் புரட்சிக்காக வாதிட்ட நிலையிலிருந்து வர்த்தகத்தையும, சீர்த்திருத்தத்தையும் வேண்டிநிற்கும் மிக அதிகமான நல்ல முறையான சர்வதேச சக்தியாக சீன மாற்றமடைந்தது. கடந்த தசாப்தத்தில் ஆசியாவின் ஸ்திரநிலைக்கு பங்களிப்பாக இருந்தது. ஆய்வாளர்களின் கருத்துப்படி இந்நிலையில்ஏற்படும் ஒரு மாற்றம் கணிசமானதும் வரவேற்க முடியாததுமான தாக்கங்களை கொண்டிருக்கலாம்."

## மாவோயிசம் மார்க்ஸிய விரோதம்

மாவோயிசத்தின் பங்கை இது திரித்து கூறிய பொழுதிலும், அதாவது மாவோயிசம் ஒருபொழுதும் உலகப் புரட்சிக்கு வாதாடவில்லை ஆனுல் "தனி ஒரு நாட்டில் சோசலிசம்" என்னும் ஸ்டாலினிசக் கொள்கையுடன் இணங்கியே இருந்தது; கேள்விக்கிடமின்றி 'வாஷிங்டன்போஸ்ட்' அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் ஆழமான பீதிகளை பிரதிபலிக்கிறது: அதாவது சீனுவின் வரலாற்று நிகழ்ச்சிகள். முதலாளித்துவதலையும்சர்வதேச ரீதியாக உள்ள அதன் ஸ்டாலினிச ஏஜெண்டுகளையும் அச்சுறுத்தும் சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர போராட்ட அலைகளின் தொடக்கமாகும்.

பெய்ஜிங்கில் நடைபெறும் வரலாற்று நிகழ்ச்சிகளை சிந்தித்துப் பார்க்கும்போது சீனுவிலும் உலக ரீதியாகவும் உள்ள வர்க்க நனவுள்ள தொழிலாளர்கள் ஸ்டாலினிசத்திற்கு எதிரான சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் கசப்பான போராட்ட வரலாற்றின் படிப்பினைகளை கற்றுககொள்ள வேண்டும், ஸ்டாலினிசத்தின் தோற்றம் ரஷ்யப் புரட்சியின்பின்பு 1920 களில்சோவியத் தொழிலாள வர்க்கத்திடமிருந்து அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிய ஒட்டுண்ணி அதிகாரததுவத்திலாகும்.

ஜாரிசத்திடமிருந்து பெற்றுககொண்ட பின்தங்கிய நிலைமையிலும். முதலாவது உலகப் போரினுலும் உள்நாட்டுப் போரினுலும் நாச அழிவு ஏற்பட்ட நிலைமைகளின்கீழும் முதலாவது தொழிலாள வர்க்க அரசு மீதான உலக ஏகாதிபத்தியத்தின் அழுத்தத்தையே சோவியத் அதிகாரத்துவம் பிரதிநிதித்துவப்படுத்தியது, அதிகாரத்துவம உலக ரீதியாக கம்யூனிஸ்ட கட்சிகளை ஒரு புரட்சிகர சக்தி என்ற நிலையிலிருந்து அழித்து தொழிலாள இயக்கத்தினுள் எதிர்ப் புரட்சிக்கான பிரதான உபகரணங்களாக மாற்றியது

சோவியத் யூனியனின் தேசிய மயமாக்கப்பட்ட சொத்து உறவுகளை இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்

★11ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மே தினக் கூட்டம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மே தினக்கூட்டம் சென்னையிலுள்ள கலைவாணி நர்சரிப் பள்ளியில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் பல்வேறு தொழிற்துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் பங்கு கொண்டனர். தோழர் மோசஸ் ராஜ்குமார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது, தோழர் மோசஸ் தொடக்க உரையில் முதலாளித்துவக் கட்சிகளும் ஸ்டாலினிசக் கட்சிகளும் போலித்தனமாக மேதினக் கூட்டங்கள் நடத்துகின்றனர் என்றும் டிராட்ஸ்கிச இயக்கம் மட்டுமே சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்துக்காக போராடுகிறதென்றும் குறிப்பிட்டார்.


ஸ்டாலினிஸ்டுகளின் பயங்கரவாதங்களுக்கும், தொந்தரவுகளுக்கும் மத்தியில் லியான் டிராட்ஸ்கியின் தலைமையில் உருவாக்கப்பட்ட சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலமே சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின்மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் நலன்களுக்காக போராடுகிறது என மோசஸ் குறிப்பிட்டார். தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை உரிமைகளுக்கு எதிராக முதலாளித்துவ வர்க்கம் தொடுக்கும் தாக்குதல்களுக்கு எதிர்ப்புரட்சிகர ஸ்டாலினிசத் தலைமைகள் உடந்தையாக செயல்பட்டு வருகின்றனர்.

முதலாவது பேச்சாளரான தோழர் ராம், 8 மணி நேர வேலைக்கான போராட்டத்தில் அமெரிக்க தொழிலாளர்கள் பல உயிர்த்தியாகங்கள் செய்தனர் அதிலிருந்து அந்தப் போராட்டம் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டமாக மாறியது என்று குறிப்பிட்டார்: சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் அதன் அடிப்படை உரிமைகளுக்காக போராடுவதற்காக நிறைய தியாகங்களை செய்தனர் ஆனால் நாம் இன்று பார்ப்பது சீர்திருத்தவாத, ஸ்டாலினிச, இடைநிலைவாத தலைமைகளின் ஒத்துழைப்புடன் முதலாளித்துவ வர்க்கம் வரிசைக்கிரமமாக தொழிலாள வர்க்கம் போராடிப்பெற்றஉரிமைகளை அழித்து வருகின்றனர் என ராம் கூறினார்.

இந்தியாவில் துறைமுகத் தொழிலாளர்களின் போராட்டம் நடக்கும் அதே சமயத்தில் ஜப்பானிலும், பிரிட்டனிலும் உள்ள துறைமுகத் தொழிலாளர்களும் அவர்களுடைய வேலைகளை பேணவும், சம்பள உயர்வுக்குமாக போராட்டங்களை நடத்தினர், ஆனால் சமூக ஜனநாயக மற்றும் ஸ்டாலினிச துரோகத் தலைமைகள் சர்வதேச ரீதியாக இந்தப் போராட்டத்தைஒருங்கிணைத்து பலப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென ராம் சாடினார். டிராட்ஸ்கி அன்று குறிப்பிட்டது போல் மனித இனத்தின் நெருக்கடி, தொழிலாள வர்க்கத்தின் தலைமை நெருக்கடியை தீர்ப்பதன் மூலமாகவே தீர்க்கப்படும் என்று ராம் கூறினார்.

உலக முதலாளித்துவசந்தை இயங்குகின்ற வரையில் எந்த ஒரு தனி நாட்டிலும் சோசலிசம் பூரண வெற்றி அடைய முடியாது என்றும் ஸ்டாலினின் பிற்போக்கு தனி ஒரு நாட்டில் சோசலிசம்' என்ற கொள்கைக்கு எதிராக டிராட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சித்தத்துவம் சரியானதென்று வரலாற்று ரீதியாக ருசுப்படுத்தப் பட்டுள்ளது என ராம் கூறினார்,

சர்வதேச ரீதியாக அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், ஆஸ்திரேலியாவிலும் இலங்கையிலும் செயல்படுகின்ற நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பகுதிகள் ஒரே அரசியல் கண்ணோட்டத்துடன் சர்வதேசிய முன்நோக்குகளின் அடிப்படையில் தேசியவாதத்திற்கும் இனவாதத்திற்கும் எதிராக சர்வதேச பாட்டாளி வர்க்கத்தை உலக சோசலிசப் புரட்சிக்காக அணிதிரட்டப் போராடி வருகின்றன எனராம் கூறினார்.



மேதினக்கூட்டத்தில் தோழர் பிரகாஷ் உரையாற்றுகிறார்

அடுத்து பேசிய தோழர் பிரகாஷ் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில்ஒருவராவார். லாபத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஏகாதிபத்திய நாடுகள் மூன்று பிரதான வர்த்தக முகாம்களாக — அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான்— பிளவுண்டு நடத்தும் வர்த்தகப் போர் எவ்வாறு இன்று மூன்றாவது உலகப் போருக்கு வழி வகுக்கும் நிலைமைகளை உண்டு பண்ணுகின்றதென்பதை பிரகாஷ் விளக்கினார். இந்த சகாப்தத்தின் அடிப்படை முரண்பாடாக இருக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட உலகப் பொருளாதாரத்திற்கும் காலாவதியாய் போன தேசிய அரசு அமைப்பு முறைக்கும் இடையிலான முரண்பாடு ஒரு உயர் மட்டத்திற்கு கூர்மையடைந்து வருகிறது என பிரகாஷ் கூறினார்.

நமது சர்வதேசிய வேலைத் திட்டத்திற்கு மிக வளர்ச்சியடைந்த தொழில் நுட்பமும் நாடு கடந்த பன்னாட்டு கம்பனிகளின் வளர்ச்சியும் அதன் விளைவாக தோன்றிய சர்வதேசிய தொழிற்பங்கீடும், சர்வதேச தொழிலாள வர்க்கமும் ஒரு உறுதியான சடரீதியான அடித்தளத்தை வழங்கியிருப்பதாக பிரகாஷ் கூறினார். மேலும் ''சர்வதேசிய வேலைத் திட்டம் உலகப் பொருளாதாரத்தையும், உலக அரசியல் அமைப்பையும் முழுமையாக எடுத்து அதன் அனைத்து தொடர்புகளிலும் முரண்பாடுகளிலும் அதாவது அதன் தனிப்பகுதிகள் பரஸ்பர ரீதியில் [illegible] தங்கியுள்ளது என்ற நிலைமைகளையும் எடுத்து ஆய்வு செய்வதிலிருந்து நேரடியாக ஊற்றெடுக்க வேண்டும்'' என டிராட்ஸ்கி கூறியதை பிரகாஷ் மேற்கோள் காட்டினார்.

ஸ்டாலினிச வாதிகள் வர்க்கப் போராட்டத்தை கைவிட்டு வர்க்க சமரசத்தை கடைப்பிடித்து தொழிலாள வர்க்கப் போராட்டங்களை காட்டிக் கொடுத்துவருவதையும், ஏகாதிபத்தியத்துடன் இணைந்து இந்திய உபகண்டத் தொழிலாளர்களை வகுப்புவாத ரீதியில் கூறுபோட ஸ்டாலினிசத் தலைமைகள் ஒத்துழைத்ததையும் பிரகாஷ் சுட்டிக் காட்டினார்.

இறுதியாக பேசிய தோழர் அருண்குமார் மார்க்ஸ், எங்கெல்ஸ்' லெனின் புரட்சிகர மரபில் டிராட்ஸ்கிச வாதிகள் சர்வதேச தொழிலாள வர்க்க ஐக்கியத்துக்காக போராடுகையில் ஸ்டாலினிசத் தலைமைகள் அவர்களது மேதின அறிக்கையில் 'இந்திய தேசிய ஐக்கியத்துக்காக' போராடும்படி அறைகூவல் விடுத்துள்ளனர் எனவும் இந்த தேசிய வாதம், முதலாளித்துவ பிற்போக்கு வாதம் என்பதையும் வர்க்க ரீதியாக பிளவுண்டுள்ள தேசத்தில் இதன் அர்த்தம் சுரண்டுவோருக்கும் சுரண்டப் படுவோருக்கும் ஒடுக்குவோருக்கும் ஒடுக்கப்படுவோருக்கும் ஐக்கியத்தை கோருவதையே அர்த்தப்படுத்தும் என அருண்குமார் ஸ்டாலினிச தலைமைகளின் முதலாளித்துவ ஏஜண்டு பாத்திரத்தை அம்பலப்படுத்தினார்

எட்டு மணி நேர வேலைக்கான போராட்டத்தில் உலக முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக மே முதலாம் தேதி சர்வதேச பாட்டாளி வர்க்கத்தை ஒரு ஐக்கியப்பட்ட நடவடிக்கையில் ஈடுபடுத்த முடிந்திருக்குமாயின் இன்றுள்ள நிலைமையில் துறைமுக தொழிலாளர்களின், மோட்டார் தொழிலாளர்களின் உருக்கு மற்றும் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களின், ஜவுளி ஆலை தொழிலாளர்களின் மற்றும் பல்வேறு தொழிற்துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் வேலைகளைப் பேணவும், வாழ்க்கைத் தரத்தையும் சிறந்த வேலை நிலைமைகளைப் பேணவும் நடத்தும் போராட்டங்களை சர்வதேச ரீதியாக ஒருங்கிணைத்து போராடுவதும் சாத்தியமான ஒன்றாகும் என அருண்குமார் குறிப்பிட்டார் ஆனால் பிரச்சினை என்னவென்றால் தேசிய மண்ணில் வேரூன்றி இருக்கும் எந்த ஒரு தொழிற்சங்கந்தாலோ அல்லது தொழிலாள வர்க்கக் கட்சியாலோ இதைச் சாதிக்க முடியாது. அதாவது தொழிலாள வர்க்கத்தின் எந்த ஒரு முக்கியமான கோரிக்கையையும் அவர்களால் வென்றெடுக்க முடியாது, அக்கோரிக்கைகள் சர்வதேச ரீதியாக நாற்றமெடுக்கும் லாப உற்பத்தி முறையை தூக்கி வீசி ஒரு திட்டமிடப்பட்ட உலக சோசலிசப்பொருளாதாரத்தை உருவாக்குவதற்கானபோராட்டத்தின் மூலமே சாத்தியமாக்கப்பட முடியும். அந்த அடிப்படையில் போராடும் ஒரே ஒரு சர்வதேசிய கட்சி நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவும், இந்தியாவில் அதனுடன் ஐக்கியம் கொண்டு செயற்படும் சோசலிசத் தொழிலாளர் கழகமுமே என அருண்குமார் குறிப்பிட்டார்.

இன்று சோவியத் யூனியன், சீனா, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எதிர்கொள்ளும் ஆழமான பொருளாதார நெருக்கடிக்கு அந்த நாட்டு தலைமைகள் நீண்ட காலமாக பின்பற்றி வந்த 'தனி ஒரு நாட்டில் சோசலிச', 'ஏகாதிபத்தியத்துடன சமாதான சகவாழ்வு' என்ற பிற்போக்கு கொள்கைகளின் மூலமாக உலக பாட்டாளி வர்க்க புரட்சிகரப் போராட்டங்களை காட்டிக் கொடுத்ததன் தவிர்க்க முடியாத விளைபயன்களாகும். தேசிய மயமாக்கப்பட்ட சொத்துடமைகளில் ஒட்டுண்ணியாக இருந்து சலுகைகளை அனுபவித்து வந்த ஸ்டாலினிச அதிகாரத்துவம் உலக முதலாளித்துவ சந்தையின் ஆதிக்கத்தின் கீழ் மூசுத்திணறும் சோவியத் சீன பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் தனது அதிகாரத்துவ தட்டின் சடரீதியான (Material) நலன்களைப் பேண தனிச்சொத்துடமையை மீண்டும் கொண்டு வர செயற்பட்டு வருகின்றது. இதன் மூலமாக படிப்படியாக புரட்சியின் வெற்றிகள்-வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசின் ஏகபோகம் தேசியமயமாக்கப் பட்ட சொத்துடமை—போன்றன அழிக்கப்படும் அபாயத்தில் உள்ளது. ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் இந்த முதலாளித்துவ சார்பு கொள்கைகளுக்கு எதிரான தொழிலாளர்களின், இளைஞர்களின் சக்தி வாய்ந்த இயக்கங்கள் ஏற்கனவே சீனா, யூகோஸ்லாவியா போன்ற நாடுகளில் தோன்றியுள்ளன இப்படியான இயக்கம் மிக விரைவில் சோவியத் யூனியனிலும் தொடங்கும் எனஅருண்குமார் குறிப்பிட்டார்.

ஆனால் அக்டோபர் புரட்சியின் மற்றும் சீனப் புரட்சியின் வெற்றிகளைப் பேணுவது அங்குள்ள ஸ்டாலினிச அதிகாரத்துவங்களை ஒரு அரசியல் புரட்சியின் மூலமாக தூக்கி வீசி சர்வதேசிய அளவில் அக்டோபர் புரட்சியை நீடிப்பதிலேயே தங்கியிருக்கிறது. உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு மட்டுமே முதலாளித்துவ நாடுகளிலுள்ளதொழிலாளர்களுக்கு சோசலிசப் புரட்சிக்கான வேலைத்திட்டத்தையும் ஸ்டாலினிச ஆட்சியின் கீழ் உள்ள நாடுகளிலுள்ள தொழிலாளர்களுக்கு அரசியல் புரட்சிக்கான வேலைத்திட்டத்தையும் வழங்குகிறது என அருண்குமார் கூறினார் ஏனெனில் நான்காம் அகிலம் மட்டுமே சர்வதேச ரீதியாக மார்க்சியத்தை பேணி, வளர்ப்பதற்கான போராட்டத்தை செய்கிறது, வரலாற்று ரீதியான மார்க்சிய புரட்சிகர பாரம்பரியங்கள் இன்று நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவினால் மட்டுமே கட்டிக் காக்கப் படுகிறது.

## தொழிலளர் பாதை புதிய சந்தா விபரம்

| | நேரடி | தபால் |
|---|---|---|
| ஆறுமாத சந்தா (6 இதழ்கள்) | ரூ. 5-00 | ரூ. 6-50 |
| ஒருவருட சந்தா (12இதழ்கள்) | ரூ. 10-00 | ரூ. 12-00 |

பெயர் : ..................................

முகவரி : ..................................

நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி: தபாற்பெட்டி எண் 968, பெரம்பூர் பாரக்ஸ், சென்னை-600 012.

## சோசலிசத் தொழிலாளர் கழக ரூ. 5,000 வளர்ச்சி நிதி

தோழர்களே, நண்பர்களே,

சோசலிசத் தொழிலாளர் கழகம் ரூ. 5,000 கட்சி வளர்ச்சி நிதிக்கு திரட்ட ஆரம்பித்துள்ளது. ஸ்டாலினிசம், தேசியவாதம், சந்தர்ப்பவாதம், சீர்திருத்தவாதம் ஆகியவற்றிற்கு எதிராக சர்வதேச பாட்டாளி வர்க்கத்தை மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், டிராட்ஸ்கி வழியில் ஒரு கொடியின் கீழ் உலக சோசலிசப் புரட்சி முன்நோக்கின் அடிப்படையில் அணி திரட்ட போராடிவரும் உலகடிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இந்தியப் பகுதியாக சோசலிசத் தொழிலாளர் கழகத்தை கட்டி எழுப்ப அனைத்து ஆதரவையும் தருமாறு வர்க்க நனவுள்ள தொழிலாளர்களையும் இளைஞர்களையும் கேட்கிறோம்.

www.padippakam.com



# ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலில் இங்கிலாந்து, ஜேர்மன் டிராட்ஸ்கிஸ்டுகள்!

ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கான தேர்தல் ஜூன்மாதம் 15 - ஆம் தேதி நடக்கவிருக்கிறது. உலகத் தொழிலாளர்களை ஒன்று சேர்க்கவும், ஒரு ஐக்கிய ஐரோப்பிய சோசலிசக் குடியரசுகளை அமைக்கவும், சோசலிச வேலைதிட்டத்திற்காகவும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இங்கிலாந்துக்கிளையான (ICP) சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சியும், மேஜெர்மன் கிளையான (BSA) லீக் ஆப் சோசலிஸ்டு ஒர்க்கர்ஸாும் இத்தேர்தலில் பங்கெடுக்கின்றன.

உலக முதலாளித்துவப் பொருளாதார உற்பத்தி சக்திகள் என்றுமில்லாத வகையில் இன்று உலக ரீதியாகப் பின்னிப் பிணைந்துள்ளன. கம்ப்யூட்டர் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாகவும். நாடுகள் கடந்த கூட்டுக் கம்பெனிகளின் வளர்ச்சியும் உலகப் பொருளாதாரத்தை மிக நெருக்கமாகப் பிணைத்துள்ளது. குறிப்பாக உழைப்பு சக்தியும் சர்வதேச ரீதியாக பிணைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தொழிலாள வர்க்கம் சர்வதேசிய ரீதியாக ஒரே வர்க்கமாக என்றுமில்லாத அளவில் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது

உற்பத்தியில் சமூக ரீதியான உழைப்புக்கும் முதலாளித்துவத்தனிச் சொத்துடமைக்கும் இடையே உள்ள முரண்பாடும் சர்வதேசிய ரீதியாக உழைப்புச்சக்தியோடு பிணைக்கப்பட்டுள்ள உற்பத்தி முறைக்கும் தேசிய எல்லைகளை உடைய தேசிய அரசுகளுக்கும் இடையிலான முரண்பாடும் மிகவும் கூர்மையடைந்துந்துள்ளன.

உலக ஏகாதிபத்தியத்திற்கிடையிலான சந்தைகளை மறு பங்கீடு செய்வதற்கான ஆதிக்கப்போட்டி வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் மிகக் கூர்மையடைந்துள்ளது. இந் நிலையில் உலக ஏகாதிபத்தியம் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா என மூன்று முகாம்களாகப் பிளவுபட்டுள்ளது.

தொழிலாள வர்க்கம் புரட்சிகரமாய் எழுச்சி கொள்வதைக் கட்டுப்படுத்தும் முகமாகஇரண்டாம் உலகப் போருக்குப் பின், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சார்பு ரீதியான பலத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டு நாணயநிதியம் (IMF), தீர்வைவாணிபம் பற்றிய பொது ஒப்பந்தம் (GATT) ஆகியன இன்று நொறுங்கிப் போன நிலையில், மூன்று ஏகாதிபத்திய அணிகளுக்கிடையில், உலகை மறு பங்கீடு செய்வதற்காக -சந்தையைக் கைப்பற்றுவதற்கான போட்டி உக்கிரம் அடைந்துள்ளது. அந்த வகையில் ஐரோப்பியச் சந்தையிலிருந்து அமெரிக்க, ஜப்பானிய ஏகாதிபத்தியங்களை அகற்றுமுகமாக— ஐரோப்பிய பொதுச்சந்தை - ஒன்றை 1992-ல் நிறுவுவதற்குஐரோப்பிய முதலாளித்துவ வாதிகள் திட்டம் தீட்டியுள்ளனர்.

ஐரோப்பிய உள் நாட்டுச் சந்தையை நிறுவுவதற்கான இத்திட்டம் மிகப் பெரிய அளவில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் வறுமையையும் யுத்தத்தையும் தவிரவேறெதனையும் கொண்டுவரப் போவதில்லை.. இன்னும் பத்தாண்டுகளில் ஐரோப்பாவில் உள்ளதொழிற்சாலைகளின் எண்ணிக்கை பாதியாகக் குறைக்கப்படவுள்ளது இக் நிலையில் தொழிலாள வர்க்கத்துக்கு இம் முதலாளித்துவ அமைபபுக் கெதிரான தீர்க்கமான போராட்டத்தை முன்னெடுக்காமல் தன்னுடைய ஆட்சி அதிகாரத்தை ஏற்படுத்தாமல் இதனைத் தீர்க்க முடியாது.

ஐரோப்பிய முதலாளித்துவத்தின், தொழிலாள வர்க்கத்திற்கெதிரான இந்தத் திட்டத்தினை — 'ஐரோப்பியக் கோட்டை'யை ஜெர்மனியில் ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி மற்றும் ஜெர்மன் தொழிற்சங்கக் கூட்டமைப்பு ஆகியன ஆதரிக்கின்றன. பிரான்சில் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சிகள் தொழிலாள வர்க்கத்துள் தேசிய வாத நஞ்சையூட்டி ஐரோப்பியத் தொழிலாள வர்க்கத்தை அமெரிக்க, ஜப்பானிய தொழிலாளர்களுக்கெதிராக நிறுத்திப் பிளவு படுத்துவதன் மூலம், ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கத்தின் சுரண்டல்' நலனுக்குச் சேவை செய்கின்றனர். இங்கிலாந்தின் தொழிற்கட்சியும், ஸ்டாலினிஸ்டுக் கம்யூனிஸ்ட் கட்சிகளும். இதனை ஆதரிக்கின்றன.

நான்காம் அகிலத்தின் ஸ்தாபகரான தோழர் டிராட்ஸ்கி கூறியதுபோல் '1914 ஆகஸ்டு 15க்குப்பின் எல்லா விதமான தேசியவாத வேலைத் திட்டங்களுக்நமாக சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது.'

இன்றைய உலக முதலாளித்துவ நெருக்கடி நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சர்வதேச முன்னோக்கு கூறுவதுபோல், ஒன்றில் தொழிலாள வர்க்கம் உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரசுக்கும் இடையேயான இந்த முரண்பாட்டினை, முதலாளித்துவ வர்க்கத்தினைத் தூக்கி வீசி சமூக உடைமையின் அடிப்படையில் முழு பூகோளத்தினதும் உற்பத்தி சக்திகளை மறுசீரமைப்புச் செய்வதன் மூலம் ஒரு முற்போக்கு பாணியில் தீர்த்து வைக்கலாம். அல்லது முதலாளித்துவம் தனது சொந்தத் தீர்வுகள் மூலம் உற்பத்தி சக்திகளைப் பேரழிவுக்கு உள்ளாக்குவதன் மூலமும், அதில் ஒன்றான உழைப்புச் சக்தியை வழங்கும் மனித இனத்தை அழிப்பதன் மூலமும் தீர்வுகாண முயலும்'.

சமூக ஜனநாயகவாதிகளினதும், ஸ்டாலினிசவாதிகளதும் சீர்திருத்த வாத வேலைத் திட்டம் காலாவதியாகிவிட்டது. தொழிலாள வர்க்கத்தின் எதிர்காலத்தை பாராளுமன்றத்தில் தங்கியிருந்து காப்பாற்ற முடியாது. அது தொழிலாள வர்க்கத்தைப்புரட்சிகர ரீதியில் அணி திரட்டி, முதலாளித்துவ லாப உற்பத்திக்கு முடிவுகட்டுவதில்தான் தங்கியிருக்றகிது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளைகளான ICPயும் BSAயும் இத் தேர்தலில் பங்கெடுப்பது திவாலாகிப்போன லாபநோக்கு முதலாளித்துவ உற்பத்தி முறையைச் சீர்திருத்த அல்லாமல் தூக்கி எறிவதற்காகவே; முதலாளித்துவ அரசியல் வாதிகளை ஒருவருக்குப்பதிலாக வேறொருவரை இடம் மாற்றுவதற்கல்லாமல் முதலாளித்துவ அரசை அழித்து தொழிலாள வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தைநிறுவி சோசலிச சமூக அமைப்பை நிறுவுவதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காகவே ஆகும

அந்தவகையில் (ICP) சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தோழர்கள் டேவ் ஹைலண்ட், டேவ் ஒசலிவன் ஜோன்கைமன்ஸ் ஆகிய மூவரும் ஜெர்மன் கிளையான BSA சார்பில் தோழர்கள் லூல்த்விக் நியத்தம்மர், உரிச் ரிபபெர்ட், ஆல்ஃபிரட் கால்க்கோவ்ஸ்கி, அண்டிரியா பியுஸ்ஸர்' அக்கிம் ஹெப்டிங் ஆகியோரும் புரட்சிகர வேலைத்திட்டதின் அடிப்படையில் தேர்தலில் பங்குபற்றுகிறர்கள். இதன் புரட்சிகர வேலைத்திட்டம் மூன்று பிரதான அம்சங்களைக் கொண்டுளளது.

(i) முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டத்தில் அனைத்து நாடுகளின் தொழிலாள வர்க்கத்தின் ஒற்றுமையைப் பேணல்.

(ii) ஐராப்பிய ஐக்கிய சோசலிசக் குடியரசுக்காகப் போராடல்,

(iii) லாப நோக்கிற்கான உற்பத்தி முறையை அழித்து திட்டமிட்ட சோசலிசப் பொருளாதாரத்தை நிறுவுவதற்கான போராட்டம்.

முதலாளித்துவத்திற் கெதிரான போராட்டத்தில் சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்தைப் பேணுதல்.

'உலக ஏகாதிபத்திய விவகாரங்களில் ஐரோப்பா இன்னமும ஒரு பெரும் பாந்திரத்தை வகிக்கிறது. உலகின் பழம் முதலாளித்துவ வர்க்கம எவ்வித்திலும் உலக ஆதிக்கத்துக்கான போராட்டத்தில் இருந்து விலகிக் கொணடுவிடவில்லை, 1992-ல் தனி ஒரு ஐரோப்பியச் சந்தையை எல்லைக் கட்டுப்பாடுகள, சுங்கத்துறை இலலாமலும் முடிந்த மட்டும் தனியொரு நாணயத்துடன் நிறுவும் திட்டங்கள் அமெரிக்காவுக்கும ஜப்பானுக்கும ஐரோப்பாவுக்கும இடையே வளாச்சி காணும் ஏகாதிபத்தியத்துக்கு இடையேயான குரோதங்களுடன் நெருக்கமாகத் தொடர்புடையன.' (நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் சர்வதேச முன்னோக்குகள் 133)

ஐரோப்பியச் சந்தையை நிறுவும முதலாளித்துவ வாதிகளின் திட்டப்படி ஐரோப்பாவைப் பொருளாதார ரீதியாக ஒன்றிணைக்கச் செய்ய முடியாது ஏனெனில் முதலாளித்துவத் தனச் சொத்துடமையானது தேசிய அரசு எல்லைகளுக்குள் ஜடரீதியாகப் பிணைக்கப் பட்டுள்ளதுடன், அதன் பாதுகாப்பிற்காக அது தேசிய எல்லைகளுக்குள் தனிச் சொத்துடமையைப் பேண வேண்டியிருப்பதாலும், முதலாளித்துவ வர்க்கம் ஐரோபபாவைப் பொருளாதார ரீதியாக ஒன்றிணககத் திறனற்றதாக இருக்கிறது.

மேலும் ஒவ்வொரு ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கமும் தனது நாட்டுத் தொழிலாளர்களைக் காட்டிலும் நல்ல சமூகத் திட்டங்கள், உயர்ந்தமட்ட சம்பளங்கள், வேலை நிலைமைகளைக் கொண்டிருந்தால் தேசிய முதலாளித்துவம் திட்டமிட்டுள்ள தனிச் சந்தைக்குள் போட்டியிட முடியாது என வலியுறுத்தி வருகின்றுர்கள். எனவே பெல்ஜியம்அரசாங்கம் எல்லாவித சம்பள ஏற்றங்களையும் கடைசெய்துள்ளது, டேனிஷ் அரசாங்கம் 1985-ல் வாழ்க்கைச் செலவு போனசுகளை இரண்டு ஆண்டுகளுக்கு ரத்துச செய்துள்ளது, மற்றும பாராளுமன்றம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மீதான அனைத்து உடன்படிக்கைகளையும் செல்லுபடி அற்றதாக்கும் சட்டம் ஒன்றை. இயற்றியுள்ளது. மேற்கு ஜெர்மனியில் (ஓராண்டு உடன்படிக்கைக்குப்பதிலாக) தொழிற்சங்கங்கள் பணவீககநிலையில் உடன்படிக்கையை, பேச்சு வார்த்தைக்கான எவ்வித சரத்துக்கும் இடமில்லாமல் முதல் தடவையாக மூன்றுண்டு சம்பள ஒப்பந்ததிற்கு உடன்பட்டுள்ளன. (நா அ.அ.கு. —சர்வதேச முன்னோக்குகளின் தீர்மானம் 135)

எனவே இன்றைய உலக முதலாளித்துவ நெருக்கடியல் கூலியையோ, உரிமையையோ பேண வேண்டுமாயின் சர்வதேச மூலோபாயத்தின் மூலமே தீாவுகாண முடியும். எனவே தொழிலாள வர்க்கத்தின் வேலையைப் பாதுகாக்கவும், சமூக நல விதிகளைப் பேணவும் வேலை நிறுத்தங்கள், தொழிற்சாலைகளில் உள்ளமர்வுப் போராட்டம் ஆகியவற்றுக்காகநாட்டு எல்லைகளைக் கடந்து தொழிலாள வர்க்கத்தை அணி திரட்ட வேண்டியுள்ளது, அத்துடன் பல்வேறு தேசிய இனஙகளைச் சேர்ந்த தொழிலாள வர்க்கத்தின் மேல் கொண்டுவரப்படும் பாசிச அலலது பேரினவாத தாக்குதல்களுக்கும் தடைகளுக்கும் எதிராகப் போராடவும் தொழிலாள வர்க்கத்தை சர்வதேச ரீதியாக அணி திரட்ட ICP, BSA முன் நிற்கிறது.

ஐரோப்பாவில் 4 லட்சம் பேர் இரும்பு எஃகுத் தொழிலில வேலை இழந்த போதும தொழிற்சங்க அதிகாரத்துவத்தினுல் தொடர்ந்து வேலைகள் அழிக்கப்படுவதை காப்பாற்ற முடியவில்லை, உதாரணமாக பிரிட்டனில் 1984-85-ல் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களின் வேலைகள் அழிககப்படுவதற்காக ஒரு வருடத்திற்கும் மேலாக நடந்த வேலை நிறுத்தத்தின் பின் கிட்டத்தட்ட 100,000 வேலைகள் அழிககப்பட்டுளளன. எனவே தொழிலாள வர்க்கத்துள் இருக்கும் இவ் ஏஜண்டுகளைத் தூக்கிஎறிந்து புரட்சிகரத் தலைமையைச் கட்டியமைக்கும் வேலைத் திட்டத்திற்காகத் தொழிலாள வர்க்கத்தை அணி திரட்ட வேண்டும்.

## ஐரோப்பிய ஐக்கிய சோசலிசக் குடியரசு

தொழிலாள வர்க்கம் மூலதனத்தின் உக்கிரச் சுரண்டலுக்காக முதலாளித்துவ அரசுடன் தொழிலாள வர்க்கத்தை பிணைக்கும், தமது பழைய தொழிற்சங்கத் தலைமைகளிடமிருந்து உடைத் துண்டிக்க வேண்டும். இத்துரோகத் தலைமைகளை அம்பலப் படுத்துவதற்காக, தொழிலாளர்கள் இவர்களை தங்களதுமுதலாளிதுவக் கட்சிகளுடனுனகூட்டைத் துண்டித்துக் கொண்டு, தொழிலாள வர்க்கத்தின் ஆட்சி அதிகாரத்திற்காகப் போராடும்படி நிர்பந்திக்க வேண்டும்.

ஐரோப்பியத் தொழிலாள வர்க்கம். ஐரோப்பிய முதலாளித்துவ அரசுகளைத் தூக்கி எறிந்து. தொழிலாள வர்க்கத்துன் சோவியத்துக்களின் ஆட்சியதிகாரத்தை நிறுவி ஐரோப்பிய ஐக்கிய சோசலிச குடியரசுகளை நிறுவவேண்டும். தேசிய பாராளுமன்றங்கள், தேசியச் சந்தைகளைப் போலவே ஐரோப்பியச்சந்தையும், ஐரோப்பியப் பாராளுமன்றமும முதலாளித்துவ ஆட்சியாளர்களின் மேலாதிக்கத்திற்காகவே இருக்கிறது

ஐரோப்பிய சோசலிசக் குடியரசுகளுக்கான வேலைத் திட்டமானது, ஐரோபபியத் தொழிலாள வர்க்கத்தை அமெரிக்க. ஜப்பானிய ஆசிய ஆப்பிரிக்க, இலத்தின் அமெரிக்க தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக ஒருபோதும் நிறுத்ாது. மாருக தொழிற்சங்க அதிகாரத்துவத்தாலும் சமூக ஜனநாயக ஸ்டாலினிச வாதிகளாதூண்டிவிடபப்டுா எல்லாவகையான ஜப்பானிய எதிர்ப்பு, அமெரிக்கஎதிர்ப்பு இனவெறிக்கு எதிராகப் போராடி, அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பானிய, ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தின் அமெரிக்கத் தொழிலாள வர்க்கத்தை உலக ரீதியாக அணிதிரட்டுவதே ஆகும்.

(iii) முதலாளித்துவ லாப உற்பத்தி முறையை ஒழித்து சோசலிச உற்பத்தி முறையையும் திட்டமிட்ட பொருளாதாரத்தையும் நிறுவுதல்.

முதலாளித்துவ அராஜக உற்பத்தி முறையில் முதலாளித்துவ தனிச் சொத்துடமைக்கும் சமூக ரீதியான உழைப்புக்கும் உள்ள முரண்பாட்டை-உலக ரீதியான உற்பத்தி முறைக்கும் தேசிய அரசு எல்லைகளுக்கும் இடையிலான முரண்பாட்டைஉலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்தினூடாகதீர்க்கவும்.

முழு வேலை வாய்ப்பைக் கிடைக்கச் செய்யவும், தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகளைப் பேணவும். வாழ்க்கைத் தரத்தைப் பேணவும், முதியோர் ஓயவூதியம், இளைஞர் நலன் ஆகியவற்றைப் பேணவும, தொழிலாளர் வர்க்கததின் ஆதிக்கத்தில் அனைத்துத் தொழிற்சாலைகளையும் வங்கிகளையும் முதலாளிகளுக்கு ஒரு காசு நஷ்டஈடு எதுவும் இன்றி தேசியமயமாக்கப் போராடும்படி தொழிலாளர்களை அழைக்கின்றது.

ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எதிராக நேட்டோ (Nato) கூட்டை முறித்து, அனைத்து ஆயுதத் தொழிற்சாலைகளையும் பறிமுதல் செய்யவேண்டும். தொழிலாள வர்க்கம் முதலாளிததுவ வர்க்கத்தை நிராயுதபாணி யாக்குவதால் மட்டுமே உண்மையில்யுத்தத்தை இல்லாமல் செய்ய முடியும்.

மேற்கூறிய சோசலிச வேலைத்திட்டங்களின் அடிப்படையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பிரிட்டன், ஜோமன் பகுதிகள் போராடுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனின் தேர்தல்களின் பின்னல்

பகுதி-1: ஒர்க்கர்ஸ் லீக் செயலாளர் டேவிட் நாத்

கடந்த ஞாயிறு சோவியத் யூனியனில் நடந்த தேர்தல் முடிவு ஸ்டாலினிச அதிகாரத்துவம் எவ்வாறு பெரும்பாலும் ஏகமனதாக வெறுக்கப்பட்டு, இழிவுபடுத்தப்பட்ட நிலையிலுள்ளது என்பதைஎடுத்துக்காட்டியுள்ளது. நாடு முழுவதும், பெரும் நகரங்களில் ஸ்டாலினிஸ்டுகள் அவமானகரமான தோல்வியைத் தழுவினர். லெனின் கிராடில் ஒரு அரசியல் குழு உறுப்பினரான யூரி.எப். சோலோவ்யெவ் நிராகரிக்கப்பட்டார் லெனின் கிராட் நகரத்தின் கட்சித் தலைவரான அனரொலி கெரசிமோவிற்கு 15% வாக்குகள் மட்டுமே கிடைத்தது. நகரத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்துவத்தின் ஒவ்வொரு மற்றைய தலைமை உறுப்பினரும் தோற்கடிக்கப்பட்டார். மாஸ்கோ நகரக் கட்சியின் இரண்டாவது செயலாளரான யூரி. புரோகோவியேவிற்கு 13% வாக்குகள் மட்டுமே கிடைத்தது. மாஸ்கோவின் மேயரான வலரி சைகினிற்கும் ஒரு பலத்த தோல்வி கிடைத்தது. பெர்ம், ரொம்ஸ்க், ஆர்கென் கேல்ஸ்க் இவனேவோ, புருன்ஸ் போன்ற இடங்களிலும் கட்சித் தலைவர்கள் தோல்வியை தழுவினர்.

நிராகரிக்கப்பட்ட ஏனைய உயர்ந்தமட்ட ஸ்டாலினிஸ்டுகளில் வடக்கு கடற்படை தளபதியும், எஸ்தோனியா கே. ஜி. பி. யின் தலைவரும், கிழக்கு ஜேர்மனியில் உள்ள சோவியத் துருப்புகளின் தளபதியும் உக்ரேனிய அட்டூவர். ... தலைவரும் ... அரசியல் குழு உறுப்பினருமான விளாசிமிர் விஸ்சேர்ப்ட்ஸ்கி. டெனெபுரோ பெட்ரோவிஸ்கிற்கு அருகாமையிலுள்ள நாட்டுபுற பகுதியில் ஒரு போட்டியிலலா ஓட்ட பந்தயத்தில் வெகுற பொழுதிலும் 240 000 வாக்காளர்களில் 63,000 பேர் வாக்குச்சீட்டில் அவரது பெயரை வெட்டி விடுவதன் மூலம் அவர்களது ... வெளிப்படுத்தினர் ஆர்மேனியாவில் ஒரு வெற்றிகரமான தேர்தல பகிஷ்கரிப்பை ஏற்பாடு செய்வதில் தேசியவாதிகள் வெற்றி கண்டனர்.

பொருளாதாரத்தை தவறாக நிர்வகிப்பதற்கும், அதிகரித்து வரும் கூர்மையான சமூக நெருக்கடிக்கும் பொறுப்பானவர்கள் எனக் கருதப்படும் ஸ்டாலினிச அதிகாரிகள் மீதான தமது வெறுப்பை வெளிப்படுத்த சோவியத் தொழிலாளர்கள் கேள்விக்கிடமின்றி இந்தத் தேர்தலை சாதகமாக்கிக் கொண்டனர். இருந்த பொழுதிலும் இந்தத் தேர்தல்களில் பரந்த மக்களின் அதிருப்தியின் அடிப்படையான வெளிப்பாட்டை அங்கீகரிப்பது என்பது ஒருவிஷயமாகும், அவை கடந்த கால ஸ்டாலினிசத்திடமிருந்து தீர்க்கமான முறிவையும், சோவியத் ஜனநாயகத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதை நோக்கிய ஒரு பெரியபடியை பிரதிநிதித்துவம் செய்கின்றன என்று கூறும் மிகையில் கோர்டச்சேவின் ஆதாரமற்ற, சிறுமூளைசித்தனமான கூற்றுக்களை ஏற்றுக் கொள்வது என்பது மற்றொரு விஷயமாகும்.

முதலாவதாக, கவனிக்கப்பட வேண்டியது ஒரு சம்பிரதாய ஜனநாயக கண்ணோட்டத்திலும் கூட, இது ஒரு 'சுதந்திரமான' தேர்தலுக்கு வெகு தூரத்தில் உள்ளதாகும். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி (CPSU) மட்டுமே. பல பிரதேசங்களில் ஸ்டாலினிஸ்டுகளால் தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர்கள் சவால் இன்றிச் சென்றனர் இவற்றுக்கும் மேலாக இப்படியாக தேர்தல்கள் கடந்த வருடம் ரகசியமாக அதிகாரத்துவத்தின் உயர்ந்த படை அணிகளில் கோர்பச்சேவாலும் அவரது ஆதரவாளர்களாலும் திட்டமிடப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் அடிப்படையிலேயே ஏற்பாடு செய்யப்பட்டன. அரசியலமைப்பு, தேர்தல் சீர்திருத்தங்கள் சம்பந்தமான அவரது திட்டத்தின் சுருக்கத்தை கோர்பசேவ் தொடக்கத்தில் ஜூன் 1988-ல் நடைபெற்ற 19-வது கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் சமர்ப்பித்தார். அரசியலமைப்பு சீர்திருத்தம் சம்பந்தமாக உச்ச சோவியத்துக்கும், பத்திரிகைகளுக்கும் பத்தாயிரக்கணக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த வேளை அரசாங்க விவாதங்கள் முழுமையாக மூடிய கதவுகளின் பின்னால் நடைபெற்றது.

தேர்தல் சட்டங்களுக்கும், அரசியலமைப்பிற்கும் டஜன் கணக்கில் திருத்தங்கள் முழு இரகசியமான நிலையில் தீர்மானிக்கப்பட்டன. கடந்த டிசம்பரில் லண்டன் பைனான்சியல் டைம்ஸில் வெளியான ஒரு அறிக்கையின் படி, உச்ச சோவியத்தின் தலைமை உறுப்பினர்களுக்கு திருத்தங்கள் பற்றி அவை வாக்கெடுப்புக்கு சென்ற நாளுக்கு முன்பாக அறிவிக்கப்படவில்லை. பல திருத்தங்கள், அவை ஏற்றுக் கொள்ளப்பட்டு பல வாரங்கள் கடந்த பொழுதிலும் சோவியத் பத்திரிகைகளில் அறிவிக்கப்படக் கூட இல்லை.

புதிய தேர்தல் முறையின் படி 2,250 பேராளர்களைக் கொண்ட சோவியத் யூனியனின் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. ஞாயிற்றுகிழமை இப்படியான பிரதிநிதிகளில் 1500 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தனி நபர்களைக் கொண்ட மற்றைய 750 பிரதிநிதிகள் கட்சியினாலும், உத்தியோக பூர்வமான அரசு ஒப்புதல் கொண்ட ஸ்தாபனங்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இப்படியான சிறப்பான தேர்ந்தெடுக்கப்படாத பிரதிநிதிகளில் கோர்பச்சேவ் உள்ளடங்களாக ஒரு நூறு பேர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவினால் தெரிவு செய்யப்பட்டனர். சோவியத் யூனியனின் மக்கள் பிரதிநிதிகளின் பேராளர் காங்கிரஸ் ... அவர் ... யிலிருந்து 450 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு இரு சட்ட சபைகள் உள்ள உச்ச சோவியத்தை தேர்ந்தெடுப்பார், அது சட்டமியற்றும் மற்றும் நிர்வாக ரீதியான பிரச்சனைகளில் கொள்கை அதிகாரத்தை செயல்படுத்தும் என கருதப்படுகிறது.

இன்னும் ஒரு உயர்ந்த நிலையில் உச்ச சோவியத்தில் ஒரு சபை இருக்கும், இந்த உடல் அடுக்குள்ள அரசு அமைப்பை பற்றி கோர்பச்சேவ் ஒரு உரையில் கூறுகையில், "அது அதன் கேள்வியில் உச்ச சோவியத்தின் தலைவரால் வழி நடத்தப்படும்."

இந்தத் தலைவர் வேறு யாருமல்ல கோர்பச்சேவே தான், அவர் கடந்த ஜூனில் மிதமாக பிரேரித்தது போல் "போதுமான பரந்த அரச அதிகார சக்திகள் வழங்கப்பட வேண்டும் சிறப்பாக ஜனாதிபதி சட்டமியற்றுவதிலும், பெரும் சமூக பொருளாதார வேலைத்திட்டங்களிலும் வெளிநாட்டுக் கொள்கையில் முக்கியமான அம்சங்களை தீர்மானிப்பதிலும், பாதுகாப்பிலும் தேசிய பாதுகாப்பிலும், பாதுகாப்பு சபைக்கு தலைமை வகிப்பதிலும், சோவியத் யூனியனின் மந்திரிகள் சபையின் தலைவரை நியமிப்பது சம்பந்தமாக பிரேரணைகள் சமர்ப்பித்தல், பாரம்பரியமாக ஜனாதிபதி தொடர்பான வேறுபட்ட பணிகளை நீக்குவதிலுமாகும்.

மிக பரந்தளவிலும், குறிப்பாக ... அதிகாரங்களைக் கொண்ட ஒருவரின் பதவி சம்பந்தமாக ஸ்டாலினே மிகத்திருப்தியடைந்திருக்க முடியும் என ஒருவர் கருதலாம் எவ்வாறாயினும் கோர்பச்சேவின் "சீர்திருத்தங்கள்" அரசாங்கத்தின் சேர்க்கையையும், அதன் கொள்கைகளின் உள்ளடக்கத்தையும் நிர்ணயிப்பதற்கான அருமையான சந்தர்ப்பத்தை அதிகாரத்துவத்திற்கு வழங்குகிறது.

முதலாளித்துவ வர்ணனையாளர்களைப் பொருத்தவரை சோவியத் யூனியனில் முன்னேற்றம், ஒரு தேர்தல் எந்த அளவிற்கு சம்பிரதாய ஜனநாயக பிரமாணத்தை திருப்தி செய்கிறது என்பதை வைத்து அளவிடப்படுகிறது. இதிலும் கூட ஒருவர் சொத்துக் கூறலாம் ... அது ... மிக்க குடியரசுவை அல்ல கோர்பச்சேவின் கொள்கைகள் சோவியத் யூனியனில் முதலாளித்துவ போக்குகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், ஏகாதிபத்தியத்தின் மூலோபாயரீதியான நலன்களுக்கு சேவை செய்வதால உலக முதலாளித்துவம் அவருடைய 'எல்லையற்ற அதிகாரத்திலுள்ள தவறுகளை கவனித்தும் கவனியாது தள்ளுகிறது, மார்க்சிஸ்டுகளை பொருத்தவரையில், எவ்வாறாயினும். முன்னேற்றமானது சோவியத் பாட்டாளி வர்க்கத்தை பலப்படுத்துவதோடு ஒட்டுண்ணி அதிகாரத்துவத்திற்கு எதிராக அதனை சுதந்திரமாக புரட்சிகர ரீதியில் அணி திரட்டுவதுடன் ஒத்ததாகும். சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை வெளிப்படுத்தும் இந்தக் ... முன்னோக்கின் அடிப்படையில் மிக முக்கியமான அம்சம்—அதனால் அதன் அடிப்படையான ... பிற்போக்குத் தன்மையை அம்பலப்படுத்துவதுடன்—இவ்வாறு கோர்பச்சேவ் ஆட்சி சோவியத் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல், சமூக நிலைப்பாட்டை மேலும் பலவீனப்படுத்த முனைவாக திட்டமிடுகிறது.


கோர்பச்சேவின் கொள்கைகளின் உண்மையான அரசியல் முக்கியத்துவத்தை, அக்டோபர் 1917-ல் உருவாக்கப்பட்ட அரசின் வரலாற்று உள்ளடக்கத்தின் மூலமே புரிந்து கொள்ள முடியும், அப்போது போல்ஷெவிக் கட்சியின் தலைமையின் கீழ் சோவியத்துகளில் (தொழிலாளர் சபைகள்) அணி திரட்டப்பட்ட தொழிலாள வர்க்கம் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தை தூக்கி வீசியது. தொழிலாளர் சோவியத்துகளால் ஆட்சி கைப்பற்றப்பட்டதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஸ்தாபிக்கப்பட்டதும் உலக வரலாற்றிலேயே உண்மையான ஜனநாயகத்தை மிகப் பெருமளவு நீடிப்பதை பிரதிநிதித்துவம் செய்தது.

வர்க்க சமுதாயத்தின் வரலாற்று உற்பத்தியான அரசு ஒரு நடுநிலையான சமூக மத்தியஸ்தர் அல்ல ஆனால் பலாத்காரமான, நிர்ப்பந்தம் செய்கின்ற உடகரணமென்றும் அதனூடாக ஆளும் வர்க்கம் அதன் சமூக, அரசியல் சித்தத்தை கீழ்மட்ட சுரண்டப்படுகின்ற மக்களுக்கு எதிராக திணிக்கின்றது எனவும் மார்க்சும், ஏங்கெல்சும் நிலைநாட்டினார்கள். வரலாற்றில் இருந்து வந்த ஒவ்வொரு அரசும் ஆதிக்கமுள்ள வர்க்கத்தின் சர்வாதிகாரத்தையே பிரதிநிதித்துவம் செய்தது. புராதன உலகத்தின் அரசுகள் அடிமைகளுக்கு மேலாக அடிமை எஜமானர்களின் சர்வாதிகாரத்தை பிரதிநிதித்துவம் செய்தது. நிலப்பிரபுத்துவ மத்திய கால கட்டத்தில் பண்ணை அடிமைகளுக்கு மேலாக நிலச்சுவாந்தார்களும், மற்றும் நவீன முதலாளித்துவ அரசில்எவ்வளவு தான் தோற்றத்தில 'ஜனநாயக' உள்ளதாக இருப்பினும் அது தொழிலாள வர்க்கத்திற்கு மேலாக முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரமாகும்.

1917 அக்டோபர் நிலைமை தீர்க்கமாக மாற்றியமைக்கப்பட்டது. வரலாற்றிலேயே முதல் தடவையாக பாட்டாளி வர்க்கம் ஆட்சியை கைப்பற்றி, சொத்து பறிமுதல் செய்யப்பட்ட பழைய சுரண்டும் வர்க்கங்களின் எதிர்ப்பை நசுக்க சோவியத்துகளை அடிப்படையாகக் கொண்டு அதன் சொந்த அரசை உருவாக்கியது. இந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இதற்கு முன்பு இருந்த அனைத்து அரசுகளிலும் இருந்து இரண்டு தீர்க்கமான அம்சங்களில் வேறுபடுகிறது. முதலாவதாக இது வரையிலான சுரண்டப்பட்ட மக்களின் நலனான அரசியல் விழிப்புணர்விலும் போராட்டத்திலும் அதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு மிகப் பரந்தளவில், வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவில் ஜனநாயக நீடிக்கப்பட்டது, அது கடந்த காலத்தில் ... மேலோங்கிய நிலவுடமையாளர்களுக்கு மட்டும் ... இருந்தது. இரண்டாவதாக வர்க்க சமுதாயத்துக்கு ஒரு முடிவு கட்டுவதை இலக்காகக் கொண்டு இயங்கும் வரையில் அதன் மூலமாக அரசின் புறநிலையான சமூக அடித்தளத்திற்காகும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே அதனை சேர்ந்த அழிவில் ஈடுபட்டிருக்கும் முதலாவது அரசாகும்.

இந்த வரலாற்றுக் குறிக்கோள்— 'அரசு உலர்ந்து உதிர்ந்து போதல்— சோவியத் யூனியனின் எல்லைகளுக்கு அப்பால் சோசலிசப் புரட்சியை நீடிக்காமல் அடைய முடியும்என போல்ஷெவிக்குகள் ஒரு போதும் நம்பியதில்லை. சோசலிசம், உற்பத்தி சக்திகளின் அவ்வாறான ஒரு உயர்ந்த வளர்ச்சியை வேண்டிநிற்கிறது, அதாவது அனைத்து மனித இனத்தினதும் சடரீதியான தேவைகளின் தாராளமான திருப்தி பொருளாதார ரீதியாக



அக்டோபர் புரட்சியில் லெனினுடன் இணைத் தலைவராகவும், ஸ்டாலினிச ஒட்டுண்ணி அதிகாரத்துவத்தின் மார்க்சிய விரோத கொள்கைகளுக்கு எதிராக மார்க்சியத்தை பேணவும் அக்டோபர் புரட்சியை சர்வதேச ரீதியாக முன்னெடுக்கவும் போராடிய லியான் டிராட்ஸ்கி நான்காம் அகிலத்தின் ஸ்தாபகராவார்.

★9ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய - இலங்கை ஒப்

தமிழ் விடுதலைப் போராட்டத்தின் மீது காட்டுமிராண்டித்தனமாக இந்திய இராணுவம் அவிழ்த்துவிடப்பட வகை செய்த இந்திய — இலங்கை ஒப்பந்தம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வேலை என்பதை, அமெரிக்கப் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் அயலுறவுக் கமிட்டியின், ஆசிய — பசிபிக் விவகார துணைக் கமிட்டியின் முன்பு நடந்த விவாதம், தீர்மானமாக நிரூபித்துள்ளது. இதிலிருந்து பலவற்றை நாம், இதற்கு முந்தைய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம்.

இந்தியாவிலும், சிறிலங்காவிலும் உள்ள காட்டிக் கொடுக்கும் உழைக்கும் வர்க்கத் தலைவர்களின் நேரடி ஆதரவு இல்லாமலும், இந்திய தேசிய பூர்ஷ்வாவிற்கு ஒரு ''முற்போக்கு'' குணும்சத்தை அளித்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத் 'வீட்டுக்கொடுக்கும்' குட்டி முதலாளித்துவ தலைமையின் ஒத்துழைப்பு இல்லாமலும், இந்திய முதலாளித்துவத்தின் இந்த எதிர்ப்புரட்சித் தலையீடு சாத்தியமாகி இருக்காது.

கொழும்பு ஆட்சியின் ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிவு என்பது ஏற்கனவே வெளிப்படையாகி விட்டது தன்னுடைய உழைக்கும் வர்க்கத்தைப் பார்த்து நடுங்கிச் செத்துக் கொண்டிருந்த காட்டிக் கொடுக்கும், பலவீனமான சிங்களமுதலாளித்துவ வர்க்கம் 1947-ல் விருப்பமே இல்லாமல் ஆட்சி பீடம் ஏறியது. இவர்கள் சமுதாயப் புரட்சிக்கு மாற்று என்று கருதிய ஏகாதிபத்தியம் அவர்களைப் பின்னுல் இருந்து ஆட்டி வைத்தது. அதற்குப் பின்னுல் எல்லாவற்றிற்கும் அது ஏகாதிபத்தயத்தையே சார்ந்து இருக்க ஆரம்பித்தது என்பது வெளிப்படை.

இப்பொழுது இந்திய துணைக் கண்டத்தில் உள்ள அடக்குமுறையால் துடித்துக் கொணடிருக்கும் அனைத்து மக்களும், தமிழ் ஈழ நாட்டின் மீது தொடுக்கப்பட்ட போரினுலும், அதன் காட்டுமிராண்டித்தனத்தாலும், தறிகெட்டு அலைந்த துருப்புகளின் அடாவடிச் செய்கைகளினுலும் அதை வெறுக்கின்றனர் ஜெயவர்த்தனு அரசு அடக்கப்பட்ட சிங்கள மக்களாலும் இதே போலவே வெறுக்கப்படுகிறது

1947-க்குப் பின், எப்பொழுதெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) பதவியில் இருந்ததோ, அப்பொழுதெல்லாம் ஏகாதிபத்திய ஆதரவு

அடக்குமுறை ஆட்சியை நடத்தியது. மறைக்கப்பட்ட வரலாறு இல்லை. அது தவிர ஜெயவர்த்தனே தலைமையில் ஐ. தே. க. 1980-ல் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்ட 300000 தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டது. பொதுமக்களின் வாழ்க்கை முறை மீது மிருகத்தனமாக தாக்குதல் நடத்தியதில் அவ்வரசு பெரிய சாதனையே புரிந்து உள்ளது.

1985 வாக்கில், தமிழ் விடுதலைப் போராட்டம் கொழும்பு அரசின் இராணுவத்தை ஓட ஓட துரத்திய போது, அடக்கப்பட்ட சிங்கள மக்களின் பெரும் பகுதியினர் தமிழ் விடுதலைப் போராட்டத்தின் பால் கவர்ந்து இழுக்கப்பட்டனர். தொழிலாளர்களும் விவசாயிகளும், ஆளும் வர்க்கத்தின் பலவீனத்தை மெதுவாக கனித்துக் கொண்டிருந்தனர்; தங்களது கணக்கைத் தீர்க்க தான் பார்த்துக் கொண்டிருந்தனர்.

## எதிர்ப்பின் தீவிரம்

1985 மார்ச்சில் ஜெயவர்த்தனேக்கு எதிரான இந்த எதிர்ப்பு, செவிலியர் வேலை நிறுத்தத்தில் தீவிரமடைந்தது ஆட்சியாளர்களின் காலக்கெடுக்களை அலட்சியம் செய்துவிட்டு செவிலியர்கள் போராட்டத்தில் தீவிர உறுதியுடன் நின்றபோது அடக்குமுறையால் துடித்துக் கொண்டிருந்த அனைத்து மக்களும் இதற்கு ஆதரவு நல்க அணிதிரண்டனர். 1985 மார்ச் கடைசியில், கொழும்புவில் '28 தேவைகள் இயக்கத்தின்' 5000 பங்கேற்பாளர்கள் கூடியபோது, ஆட்சியாளர்களை எதிர்க்கும் ஒரு தீர்மானகரமான போராட்டத்திற்கு அறைகவல் விடப்பட்டது.

1980-ல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களைக் கல்லறைக்கு அனுப்பி விடுவேன் என்று அச்சுறுத்திக்கொண்டு இருந்த ஜெயவர்த்தனே அரசு, இன்று தமிழ் விடுதலைப் போராட்டம் என்ற பலமான எதிரியால் ஒருபுறமும் தெற்கில் செவிலியர் வேலை நிறுத்தத்தின் மூலம்



ஜெயவர்த்தனேயும் - ராஜீவ் காந்தியும் - ஸ்டீபன் சோலார்ஸ், இவர்களை ''தெற்குஆசியாவின் பெசினும், சதாத்தும்'' என வர்ணித்தார்

மறுபுறமும் சவால் விடப்பட்டு, தூக்கி எறியப்படும் நிலை கனிந்து நெருங்கிக் கொண்டு இருப்பதை, புரட்சிகர கம்யூனிஸ்ட் கழகம் உழைக்கும் வர்க்கத்தினருக்கு எடுத்துரைத்துக் கொண்டு இருந்தது.

ஒரு பொதுவேலை நிறுத்தத்தைத் தீர்மானித்தும், தமிழ் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தும், கருத்தரங்கு பேராளர்கள் செயல்பட வேண்டும் என புரட்சிகர கம்யூனிஸ்ட் கழகம் கோரியது. எவ்விதத்திலும் தங்களால் நியாயப்படுத்த முடியாத ஒரு போரினுல் உழன்று கொண்டிருக்கும் மக்களிடம் இந்த புரட்சிகர பறைசாற்றல் நன்றுகவே வேலை செய்தது.

சிறிலங்காவில இருந்த நிலை ஏகாதிபத்திய வாதிகளாலும் இந்தியாவிலிருந்த தேசிய பூஷ்வா பிரதிநிதிகளாலும் தாங்க முடியாத நிலையை அடைந்து கொண்டிருந்தது. கொழும்பில் இருந்த அவர்களின் ஒட்டுண்ணிகளால் இந்த புரட்சிகர சவாலை கட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை. ஆகையால்

தலையீடு தவிர்க்க முடியததாக தாக ஆகி விட்டது. இல்லையெனில் சிறிலங்காவில் ரெட்டனேட்டரை அழுத்திய வகையில் பற்றிய நெருப்பால் இத்துணைக் கண்டம் முழுவதும வெடிக்கத்துவங்கி இருக்கும்.

இந்த துல்லியமான தருணத்தில் தான், லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி (CPSL), நவசமாசமாஜக்கட்சி (NSSP) தொழிற்சங்கங்களின் கூட்டிணைப்பு (CTU) மற்றும் இதர இடைநிலைவாத நம்பிக்கைத் துரோகிகள் அவர்களின் உதவிக்கு வந்தனர். அவர்கள் செவிலியர் வேலை நிறுத்தத்தைக் காட்டிக் கொடுத்தனர்; கருத்தரங்குக் கட்டத்தில், ஆளும் வர்க்கத்துடன் அமைதியான முறையில் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்வோம் எனத் தீர்மானம் நிறைவேற்றி விட்டு கூடியிருந்த தொழிலாள பேராளர்களைக் கலைத்து விட்டனர்.

செவிலியர் போராட்டத்தை உடைக்க, அடிதடி உட்பட, எலலா வழிமுறைகளிலும், அடுத்த மே தினத் தினத்தில் இறங்கிய அனுபவமிக்க திருத்தல் வாத தலைவரான கொல்வின் டி. சில்வா, ''வடக்கில் தமிழ் விடுதலைப் போராட்டமும், தெற்கில் தொழிலாளர் இயக்கமும் மிகச்சிக்கலான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளன'' என்று முதலாளித்துவ வர்க்கத்தை எச்சரித்தார்.

முதலாளித்துவபத்திரிகைத் துறையும், செய்தித்தொடர்பு நிறுவனங்களும, அமைதி தீர்வைக் கோரி பைத்தியக் காரக் கூச்சலை எழுப்பின. ஏகாதிபத்தியத் தலைவர்களான ரீகனும், தாட்சரும் அமைதியான பேச்சுவார்த்தைக்காக பல அறைகவல்களை விடுத்தனர். அமெரிக்க சபையின் தெற்காசிய துணைக் குழுவின தலைவரான ஸ்டீபன் சோலார்ஸும், அமெரிக்க அரசின் ஆசிய பசிபிக் விவகார செயலாளரான ராபர்ட் பெக்கும், கொழும்புக்கும், புதுதில்லிக்கும் இடைவிடாத தூதை தொடர்ந்தனர். மூழ்கிக் கொண்டிருந்த ஜெயவர்த்தனே ஆட்சியைக் கை தூக்கி விட ஒரு சில நாட்களுக்குள் ஒரு மார்க்கம் கண்டுபிடிக்கப் பட்டது.

'அமைதிக்கான பொதுத் திட்டம் ஒன்றைத் தீட்டும் வட்டமேஜை மாநாடு ஒன்றைக் கட்டும்' மார்க்கம் தான் அது. தமிழ் விடுதலைப் போராட்டத்தின் மீது தொடுக்கப்பட்ட போரானது இப்பொழுது சமாதானக் கொடியால் மூடிமறைக்கப் படவேண்டும். இத்தகைய எதிர்ப்புரட்சி நடவடிக்கைத் திட்டத்திற்கு தொழிலாள வர்க்கத்தைச் காட்டிக் கொடுக்கும் தலைவர்களின் கட்டுசசதி மிகவும அத்தியாவசியமானது. அது பின்னுல் வந்தது

## முதுகில் குத்திய துரோகிகள்

ஓராயிரம் முறை காட்டிக் கொடுத்த அனுபவம் முதிர்ந்த LSSP யைச் சேர்ந்த கொல்வின் டி சில்வா, CPSL ஐச் சார்ந்த கே. பி. சில்வா முன்னணியிலும் இடைநிலைவாத NSSP மற்றும் இதர இடைநிலைவாத சிறுகுழுக்கப் பின்னைலும், தளத்தைக் கைப் பற்றிக் கொண்டனர் வட்டமேஜை மாநாடு என்ற இந் நயவஞ்சகச் செயல் கிட்டத்தட்ட ஒருவரும் வரை நடந்தது, அதில் தமிழ் விடுதலைப் போராட்டத்தின் விட்டுக் கொடுக்கும் குழுக்களின் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தலைவர்களும் LSSP, CPSL மற்றும் NSSP போன்ற தொழிலாள வர்க்கத்தின் காட்டிக் கொடுக்கும் தலைவர்களும். கலந்துகொண்டனர்.

அதை தமிழீழ விடுதலைப்புலிகள் ஒருபோதும் குறை கூற வில்லை. மொத்தத்தில் இது தமிழ்ஈழ விடுதலைப்போராட்டத்திற்கும் சிறிலங்கா மற்றும் இந்தியாவிலுள்ள அடக்கப்பட்ட மக்களுக்கும் மிகச் சீராக திட்டமிடப் பட்ட ஒரு பொறியாக மாறி விட்டது.

இந்த வட்டமேஜை மாநாடுகளின் மூலம், ஆளும் வர்க்கம் தான் நியாயமான அமைதியை விரும்புவதாக, மக்களை ஏமாற்ற விரும்பியது முதலில் தமிழ் விடுதலைப் போராட்டத்திற்கும், பின்னர் இந்த துணைக் கண்டத்தில் பாட்டாளி வர்க்க போராட்டத்திற்கும் எதிராக இயங்கவும் பேரபாய மிக்க எதிர்ப்புரட்சி போர் முஸ்தீபு நடவடிக்கையில் இறங்கவும் இத்தகயன புறத் தோற்றம் மிகவும் அத்தியா வசியமாக இருந்தது.

இந்த தாக்குதல்கள் முதலில்,1987-ல் வடமராச்சி தாக்குதல் என்ற வடிவத்தில் சிறிலங்கா இராணுவத் தாலும், பின்னர் தமிழ் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான தலையீடு என்ற வடிவத்தில், இந்திய இராணுவத் தாலும் நடத்தப்பட்டது.

சமசமாஜிகள் ஸ்டாலினிஸ்டுகளுடன் சிலோன் தொழிலாளர் காங்கிரஸ், நவ சமாசமாஜிகள் மற்றும் இதர இடைநிலைவாதிகள் இந்த விவாதத்தை மிக உற்சாகத்துடன் வரவேற்ற போது, தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ்த் தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற தங்கள் கோரிக்கை ஒப்புக் கொள்ளப்பட்டால் தாங்களும் தங்கள் கோரிக்கைகளுடன் வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொள்ள தயார் என்று கூறி, தமிழ் மக்களுக்கு எதிரான இந்த சதிச் செயலுக்கு ''நல்ல பெயர்'' வாங்கிக்கொடுக்கும் செயலில் ஈடுபட்டனர்.

இச்சமயத்தில், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் உள்ள முக்கியமான பதவிகளை, பிரிட்டிஷ் தொழிலாள புரட்சிகர கட்சியைச் சேர்ந்த ஹீலி — பண்டா — சுலோட்டர்குழு அலங்கரித்து வந்தது. அப்போது சிறிலங்கா புரட்சிகர கம்யூனிஸ்ட் கழகம், இந்திய டிராட்ஸ்கிச அமைப்பான சோசலிச தொழிலாளர் கழகமும் தங்களது பல அறிக்கைகள் மூலம், தமிழ் விடுதலைப் போராட்டத்தின், ஆயுதங்களைக் களையும் எந்த ஒரு ஒப்பந்தமும் நம்பிக்கைத் துரோகம் என்றும், இத்தகைய ஒப்பந்தத்திற்கு அளிக்கப்படும் எந்தவொரு சலுகையானுலும், அது தமிழ்தேசத் துக்கு விரிக்கப்பட்ட வலையாகும் என்றும் எடுத்துக் கூறி எதிர்த்து வந்தது. தமிழ் விடுதலைப் போராட்டத்தின் காட்டிக் கொடுத்தலில WRP ஓடுகாலிகள் குழுவின் பங்கை பற்றி பின்வரும் கட்டுரையில் பார்ப்போம்.

வட்டமேஜை மாநாடு நேரடியாக இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு இட்டுச் சென்றது. தொழிலாள வர்க்கத்தின் நம்பிக்கைத்துரோகிகள் எல்லோரும் அக்களத்தில் குதித்தனர். ஏகாதிபத்தியத்தால் திட்டபட்ட இந்த எதிர்ப்புரட்சி சதித்திட்டத்திற்கு இந்த நமபிக்கைத் துரோகிகள் அளித்த ஆதரவு தமிழ் ஈழத்திற்கு எதிராக இயங்க, ராஜீவ்காந்திக்கு கதவை திறந்து விட்டதில் பெரும் பங்கு வகித்தது.

சிறிலங்காவில்உள்ள திருத்தல்வாதிகள் மற்றும் ஸ்டாலினிஸ்டுகளின் ஆதரவோடு அடக்கப்பட்ட தமிழ் மக்களின் மீது ஒரு எதிர்ப புரட்சித் தாக்குதலைத் கொடுத்ததில், இந்திய ஸ்டாலினிஸ்டுகள் தீர்மானகரமான பாத்திரம் வகித்தனர். அப்படி செய்ததில், அமைதி காக்கும் படை என்ற போர்வையில், காட்டுமிராண்டித் தனமான இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் இரத்தத்தால் தங்கள் கரங்களை நனைத்துக் கொண்டனர்.

உண்மையில் இந்தஒப்பந்தமும், அதற்கு முன்னுல நடத்துப்பட்ட அமைதி மாநாடு என்ற ஏமாற்று வேலையும், அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களின் தூண்டுதலால் நடத்தப் பட்டது.

## ஏகாதிபத்திய கைக்கூலிகள்

ஸ்டாலினிஸ்டுகள் சமசமாஜிஸ்டுகள், நவ சமசமாஜிஸ்டுகள் மற்றும் இடைநிலைவாத தலைமைகளான GCSU மற்றும் CTU ஆகியவை உண்மையில் ஏகாதிபத்திய கைக்கூலிகள் என்பது தெளிவாக வெளிப்பட்டு விட்டது.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்கு இந்த நம்பிக்கைத் துரோகிகள் தங்களது ஆதரவை அளித்ததற்கு என்ன நியாயம் கற்பிக்கிறுர்கள் என்று மீண்டும் பார்ப்போம்.

படிப்பகம்

# ந்தத்தின் ஓராண்டு!

---நந்சிங்

''இந்தப் பிரச்சனை அரசியல் ரீதியாக தீர்வு செய்யப்பட்லாம் என்பதற்கான அடிப்படை இந்த ஒப்பந்தம். இது அமுலுக்கு வந்தவுடன் அரச நிர்வாகத்தில் குறிப்பிடத்தக்க அதிகாரா பரவலாக்கத்திற்கு இது வழி செய்யும்.''

''இதைச் சரியாக நடைமுறைக்கு கொண்டு வருவதன் மூலம், அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் அடியாற்றிகளும், உலகளாவிய மற்றும் பிராந்திய மூல உபாயத்திற்கான ஒரு தளமாக நமது நாட்டை உபயோகிக்க தங்களது அரசியல் மற்றும் இராணுவ கட்டுப்பாட்டை நிறுவவும், அண்டை இந்தியாவிற்கும் நமக்கும் முரண்பாடான மோதல்களை தோற்றுவிக்கவு முனைவதை தடுக்க முடியாது.''

அமெரிக்க அரசின் வெளிவிவகார கமிட்டியின் உபகுழு சமீபத்தில் இதைபபற்றி விவாதித்ததை நாம நினைவுறுவோம்.'' இந்தஒப்பந்தம் சிறிலங்காவின் நிலைமையில் ஒரு மகத்தான மாற்றத்தை விளைவித்துள்ளதாக தெரிகிறது.''

''பிரதமர் ராஜீவ்காந்தி மற்றும் அதிபர் ஜெயவர்த்தன ஆகிய இருவரும் தங்கள் நாடுகளில்தோன்றிய எதிர்ப்புகளை மீறக் காட்டிய தைரியம்என்னை அசரவைத்து விட்டது அதனால் சிறிது முன்பு, வரும் ஆண்டில் அவர்கள் இருவருக்கும சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்க நோபல் பரிசு கமிட்டிக்கு சிபாரிசுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன்.''

இப்பொழுது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அடியொற்றிகளாக யார் இருந்தார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகியிருக்கும் என்பதை ஒருவர் சுட்டிக் காட்ட முடியும். தமிழ் ஈழத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், அவர்களின் இந்திய சிறிலங்கா தேசிய பூர்ஷ்வா ஏஜெண்ட்களுக்கு காட்டிக் கொடுத்த துரோகிகள் சம சமாஜிஸ்ட்கள், ஸ்டாலினிஸ்ட்கள், மற்றும் நவ சம சமாஜிஸ்ட்கள் ஆவர்.

'' அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களின் தோழமை நாடுகளும் தங்களது பூகோள மற்றும் பிராந்திய மூலோபாயத்திற்கானதளமாக நமது நாட்டை உபயோகப்படுத்தும் பொருட்டு, தங்களது அரசியல் மற்றும் இராணுவ மேலாதிக்கத்தை நிறுவ முயற்சிகள் செய்வதை தடுப்பது இதனால் சாத்தியமாகும்.'' அமெரிக்க பாராளுமன்ற குழுவின் ஏகாதிபத்திய பிரதிநிதிகள் செய்த அரசியல் சதியாலோசனையான ஒரு பகுதியென்றும் இதை அக்குழுவே ஒப்புக் கொண்டது என்றும் கூறுகின்றனர்.

இதற்கிடையில் இந்திய ஸ்டாலினிஸ்ட்டுக் கட்சியான (CPI (M) ) சி.பி.எம். மற்றும் (CPI) சி. பி. ஐ. தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு இவ்வுடன்பாட்டை பாராட்டியதோடு தமிழ்விடுதலைப் போராட்டத்தையேலும் ஒடுக்குவதை கோரினர். (CPI (M) ) சி. பி. எம்-இன் தலைவர் நம்பூதிரிபாட் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை விடுதலைப் போராட்டத்தை நடத்தும் முக்கியப் போராளிகளைத்தவிர வேறுயாருமல்லர்.

இதுதான் ஏகாதிபத்திய வாதிகள் விரும்பியதாகும். நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி அவர்கள் இந்திய முதலாளித்துவத்தினரிடம் 'இந்தியத் துருப்புகளின் இருப்பினால் அனைத்துக் கட்சிகளும் இவ்வுடன்பாட்டோடு உடன்படுமாறு செய்வதற்கு ஒரு உறுதிமொழியை வேண்டி வற்புறுத்தினர். குறைந்தபட்சம் அடுத்த 18 மாதங்களாவது எல்லாம் சாதாரணமாக நடைபெறும் அளவிற்கு தொடர்ந்து ஆயத்தம் செய்யுமளவிற்கு இந்தியாவை இதில் ஈடுபடுத்த வேண்டும்.'' என்று சோலார்ஸ் கூறினார். இது அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் இந்திய ஆட்சியாளர்களும் சேர்ந்து தமிழ் விடுதலைப் போராட்டத்தை 18 மாதத்திற்குள் அழிக்க செய்து கொண்ட ஒப்பந்தத்தை மோசமாக ஒப்புக்கொள்வதாகும்,

துள்ள மாயை, தமிழ் விடுதலை போராட்டத்தின் மீது பாய்ந்த அவர்களின் நம்பிக்கைத்துரோகத்தலையீட்டால் தூள் தூளாக நொறுக்கப்பட்டதோடு அல்லாமல், ஸ்டாலினிசவாதிகள் சம சமாஜிகள் ஜனநாயக ரீதியான ஏகாதிபத்திய எதிர்ப்பு வேலைத்திட்டத்திற்கு தோள் கொடுத்ததாக நடத்தப்பட்டு பாசாங்கும் வெளிப்பட்ட விட்டது

இத்தகைய நம்பிக்கைத் துரோகிகள், போருக்குப் பிந்தைய தீர்வுகளுக்கு ஏற்ப வளைந்து கொடுத்த பின்னர், இப்பொழுதுதேசியமுதலாளித்துவவாதிகளின் வழியாக ஏகாதிபத்தியத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தயாராகியுள்ளனர். இந்த மறுதலிப்புவாத அலை, பின்தங்கிய நாடுகளில், தேசிய விடுதலைக்காக போராடுதல் என்ற பாசாங்கை தோலுரித்து, தொழிலாள அதிகாரத்துவங்களை விழுங்கி வருகின்றது. இதற்குப் பின்னால் வர்க்கங்களுக்குஊடாக வேலை செய்வதற்கு எந்த இடமும் அளிக்காத முதலாளித்துவத்தின் சிக்கல் இறுகி வருகிறது. அதிகாரத்துவத்தினர் நேரடியாகவே எதிர் புரட்சிகர முகாமில் இடம் பெற்று விட்டனர்.

## உபகண்டம் கொதித்துக் கொண்டிருக்கிறது


தெற்காசிய துணைக்கமிட்டியின் தலைவரான ஸ்டீபன் சோலார்ஸ், கடைசியாக இரங்கூனில் காணப்பட்டார் தமிழ் விடுதலைப் போராட்டத்தை நசுக்கவும், சிறிலங்கா உழைக்கும வர்க்கத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும் உருவாக்கப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தச் சதியில் ஈடுபட்டு, ஓராண்டு நடந்தஉடனேயே, இந்த ஏகாதிபத்திய வாதிக்கு புரட்சியால் கொதித்துக் கொண்டிருக்கும் பர்மிய பூமியில் வேலை தலைககு மேல் இருந்தது.

1947 போருக்குப் பின்னர், ஏகாதிபத்தியங்கள் தங்களது இந்திய சொத்துக்களை நிர்வகிக்க ஏற்படுத்தியிருந்த அமைப்பிற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வெடித்திருக்கும புரட்சிகர நெருக்கடி, சாவு மணி அடித்துள்ளது.

கடந்த இருமாதங்களுக்கும் மேலாக, பாட்டாளி வர்க்கத் தலைமையில் திரண்டுள்ள, அடக்க முறைக்கு உட்படுத்தப்பட்ட மக்கள் வெகுண்டு, முக்கிய நகரங்களின் தெருக்களைக் கைப்பற்றி, பூர்ஷ்வா அரசின் துருப்புகளை புறமுதுகிடச் செய்து அரசை முழுவதுமாக நிலைகுலைய வைத்துள்ளனர். அவர்கள் இரு இராணுவ ஆட்சியாளர்களை ராஜினாமாச் செய்ய வைத்தனர். மூன்றாவது நபருக்கும் இவ்வச்சுறுத் தலைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

அதனால் ஆளும் வர்க்கத்துடன் சேர்ந்து, மக்களின் முதுகில் குத்தவும், எதிர்ப்புரட்சி தீர்வு ஒன்று காணவுமான சதியில் ஈடுபட சோலார்ஸ் பர்மாவிற்கு போக வேண்டியிருப்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனாலும், இந்திய-இலங்கை ஒப்பந்தம் முடிந்து ஒரு வருடத்திற்கு பிறகும், ஏகாதிபத்

★8ம் பக்கம் பார்க்க


THE INDO-SRI LANKAN AGREEMENT

HEARING

SUBCOMMITTEE ON ASIAN AND PACIFIC AFFAIRS

COMMITTEE ON FOREIGN AFFAIRS
HOUSE OF REPRESENTATIVES

US Committee report admits imperialist authorship of Indo-Lanka Accord

*"I was so impressed by the courageous willingness of Prime Minister Gandhi and President Jayewardene to overcome domestic opposition in both their countries, that I have just sent off a letter to the Nobel Peace Prize selection committee nominating both of them for the Nobel Peace Prize for the coming year.... I very much hope that the Nobel Peace Prize committee will give them the same kind of consideration that they gave to Menachem Begin and Anwar Sadat, following their role in bringing about the historic Camp David Agreement."*

—Congressman Stephen Solarz

## ஏகாதிபத்தியத்தின் ஸ்டாலினிச. திரிபுலாத பிரதிநிதிகள்

இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு கையெழுத்திட்டவர்களைப பற்றி நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் கூற்றையும் அமெரிக்க சபையின் துணைக்குழுவின் தலைவர் ஸ்டீபன் சோலார்ஸ் கூறுவதையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

''பின்தங்கிய நாடுகளில் தேசிய முதலாளிகளின் திரிபுவாத மற்றும் பிற்போக்கான குணம்சம். இந்த நூற்றுண்டில் எண்ணற்ற சோகமான அனுபவங்களின் மூலமாக நிருபிக்கப்பட்டது போதாது என்ற பட்சத்தில், இந்திய-இலங்கை ஒப்பந்தமும், இந்தியாவின் தமிழீழ ஆக்கிரமிப்பும் மற்றுமொரு கசப்பான பாடம்

ராஜீவ், ஜெயவர்த்தனே செயல்களில் ஏதாவது தனித்துவம் உண்டு என்றால், அது அவர்களின் சிடுமூஞ்சித்தனத்தின் அளவிலும், இக்கூட்டுச் சதியில் அவாகள் காட்டிய முரட்டுத் தன்மையுமேயாகும். தேசிய முதலாளித்துவ துஷ்டர்களின் தேவலோகத்தில். இந்த இரு கொலையாளிகளும் சியாங்கேஷக், சதாத், மொபுட்டு போன்ற ஏகாதிபத்திய அடிவருடிகளின் வரிசையில் ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்டனர் ஜெயவர்த்தன மற்றும் ராஜீவின கொள்கைகள், இந்திய, இலங்கை தேசிய முதலாளிகளால் தங்கள் நாடுகளின் முன்னேற்றத்திற்கு எவ்வித மான முற்போக்குப் பங்கும் வகிக்கலாம் என்று இன்னும் வைத்திருக்கின்ற மாயையைத் தவிடுபொடி ஆக்கியுள்ளது.''

''சிறிலங்காவின் நிலைமையையும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் பணிகளும்,'' நான்காம் அகிலத்தின் அனைத்துலக்குழுவின் அறிக்கை, நவம்பர் 19, 1987, Fourth Inter National Jan—March 1988

''தங்கள் நாடுகளில் ஏற்படும் எதிர்புகளையும் எதிர்த்து பிரதமர் ராஜீவ் காந்தியும், அதிபர் ஜெயவர்த்தனேயும் செயல்படும் மன [illegible]

போது தான் அவர்கள் இருவரையும் வரும் வருடத்திற்கான நோபல் பரிசிற்கு பரிந்துரை செய்து நோபல் பரிசு தேர்ந்தெடுக்கும் குழுவிற்கு கடிதம் அனுப்பியுள்ளேன் ...— மெனுக்கம் பெகினும், அன்வர் சர்தாத்தும் கேம்ப் டேவிட் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதில் அவர்களின் பங்கின எவ்வாறு நோக்கிற்றோ அதேபோல இவ்விருவர்களின் பங்கினையும் நோபல் பரிசு தேர்வுக்குழு நோக்குமென எண்ணுகிறேன். இது அமெரிக்க ஏகாதிபத்தியகுழுவின் தலைவர் கூற்று

ஒன்றுக்கொன்று முற்றிலும் எதிரான இரு வழிகளிலிருந்து வந்துள்ள இவ்விரு கூற்றுக்களும இந்திய ஆளும் வர்க்கத்தின் எதிர்ப்புரட்சிகரத் தன்மையை முழுமையாக அங்கீகரிக்கின்றன. அவர்களது வர்க்க நிலைப்பாட்டின் படி முந்தைய கூற்று அதை எதிர்க்கின்றது; இரண்டாவது அதை வரவேற்கிறது.

ஏகாதிபத்திய சுரண்டல் காரர்களின் குழு தங்களது நம்பிக்கைத்துரோக ஏஜெண்டுகளின் உண்மையான பங்கு பற்றி விவாதித்துக் கொண்டிருக்கையில் அந்த கிரிமினல் பங்கை தொழிலாள வர்க்கத்திடையே மறைப்பதற்கு தொழிலாளர் இயக்கத்துள் தேர்ச்சி பெற்ற ஏஜெண்டுகள் தேவையாக இருந்தது. இது தான். ஸ்டாலினிஸ்டுகளின் திருத்தல்வாதி இடைநிலவாதிகளின் பணியேயாகும். ஏகாதிபத்திய சதிகாரர்கள் இப்பண்பாட்டை நிலைநிறுத்த உதவிய கையோடு தொழிலாள இயக்கத்தைக் கட்டுப்படுத்த அதை ஏகாதிபத்திய எதிர்ப்பு எனும் தோலைப்போர்த்திக் கொண்டது.

### மக்கள் முன்னணி

LSSP, CPSL மற்றும் NSSP போன்றவை முதலாளித்துவ SLMP யோடு சேர்ந்து இந்த உடன்பாட்டை ஒரு முன்னேற்ற பாதை என்று விவரித்து கூறிய கூற்றுஜது:

## இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏகாதிபத்தியத்தால் வரையப்பட்டது என்பாதை அமெரிக்க கமிட்டி அறிக்கை ஒப்புக்கொள்கிறது

''1947-ன் சுதந்திரத்திற்ப் பிறகு ஏற்பட்ட ஒரு மிகப் பெரிய முன்னேற்றம் என்று ஆரவாரம் செய்தார். அவர் உடனடியாக இலங்கையின் ஸ்டாலினிசக் கட்சி தலைவர்களோடு - இவ் வுடன்பாட்டை ஆதரிக்கும் இருகட்சி உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டார். முன்னரே தீர்மானிக்க முடியாத இந்தவகையில் இத்துரோக ஒப்பந்தத்திற்கு ஆதரிக்க இணைந்து செயல்பட ஒப்புக்கொண்டன.

கிரெம்ளின் அதிகாரத்துவம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு முழு உபகண்டப் பகுதியில் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாட்டின் முக்கியமாகத் தான் குறிப்பாக சோவியத் அதிகாரத்துவம் ஆப்கானிஸ்தான் போர் புதைசேற்றிலிருந்து விடுபடு முகமாக இந்த ஒப்பந்தத்தை வரவேற்றனர்.

இத்துரோகிகள் இத்தோடு நிற்கவில்லை. தமிழ் விடுதலைப் போராட்டத்தை ஏகாதிபத்திய கொலைகாரர்கள் மூலம் ஒடுக்குவதை நிறைவேற்றுவதில் அதனுடைய தர்க்கரீதியான இறுதி முடிவுக்கு தொழிலாள வர்க்கத்தை கோரும்படி செய்தனர்.

'ஒப்பந்தத்தைஎதிர்க்கும் எல்லா சக்தியினையும் நிராயுதபாணியாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மிகவும் அவசியமானதாகும். பிரதேச அமைதியை நிலைநாட்ட இவர்களைச் செயலிழக்கச் செய்ய வேண்டும்.'' யார் இந்த சக்திகள்? அவர்கள் தமிழ்

ஏகாதிபத்தியப் பிணந்தின்னிப் பிசாசுகளுக்கு மற்றதூண்டுதல் தேவைப்படவில்லை. இந்தப்பங்கினை அவர்களின் LSSP, CP, NSSP துரோகிகள் கொலைகார எதிர்ப்புரட்சிகரத் திட்டத்திற்கு முற்போக்கு முலாம் பூசி, விரைவில் தொழிலாள வர்க்கத்திற்குள்ளேயே அதற்கு எதிராக செயல்படுத்துவதற்கு ஆகும் ஒன்றுபட்ட இலங்கை அல்லது ''புகழ் பெற்ற மற்ற இவ்வழகிய தேசத்தின் சமுதாய ஒழுங்கிணைப்புக்காக'' என்றவற்றின் அடிப்படையில், இவ் எதிர்ப்புரட்சிகர பிசாசுகள் தங்களின் ஏகாதிபத்தியத் துடனான கூட்டை நிர்ணயப்படுத்தி தொழிலாள இயக்கத்தின் தலையில சுமத்தினர். இது 1947-ல் சுதந்திரம் என்ற போர்வையில், தேசிய முதலாளித்துவத்துடன் இணைந்து ஒடுக்கப்பட்ட சிறிலங்கா மக்களின் மேல் ஏகாதிபத்திய வாதிகளால் திணிக்கப்பட்டதைப் போன்றதைஅன்றிவேறொன்றுமில்லை.

இது 1945-ல் வெற்றிபெற்ற ஏகாதிபத்திய கொள்ளைக்காரர்கள் மற்றும் அவர்களது துரோகக் கூட்டாளிகளுடனும் சோவியத் அதிகாரத்துவம் டெஹ்ரான், யால்டா, மற்றும் போட்ஸ்டாம் நகரங்களில் செய்துகொண்டபோருக்குப்பிந்தைய உடன்படிக்கையின் ஒரு பகுதியாகும்.

ஆகவே இந்தத் துணைக்கண்டத்தில் முற்போக்கான ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒன்றை மிகுந்த பிரயாசைக்குப்பின்னர் விதைத்துள்ளதாக, இந்திய முதலாளித்துவம் விளைவித்

www.padippakam.com



தியம் மற்றும் அதன் பிரதிநிதிகளின் பிரச்சினை குறைவதற்கு பதிலாக வெகுவாக அதிகரித்துள்ளது.

செப்டம்பர் 14 ஆம் தேதி. கொழும்பில் உள்ள இந்திய ஹைகமிஷன், ஜெயவர்த்தனே அரசிற்காக, தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக இருக்கும் விதத்தில், சிறிலங்காவின் வடக்கு, மற்றும் கிழக்கு பிராந்தியங்கள் இணைக்கப்பட்டு ஒரே பிராந்தியமாக்கப்படும்என்று அறிவித்தது. இதைத் தொடர்ந்து இந்திய அரசு, தமிழர் பகுதிகளில் போர் நிறுத்தம் செய்வதாக தன் விச்சையாக அறிவித்தது. இப்பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுமையை, ஒப்புக்கொள்ளும் பட்சத்தில். இந்திய பூர்ஷ்வாவுடன் ஒரு உடன்பாட்டிற்கு அவர்கள் தயாராக இருப்பதை நோக்கும்போது. இந்த போர்நிறுத்த ஏற்பாடு; இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க புலிகளுக்கு போடப்பட்ட ஒரு தூண்டில்.

இத்தகைய வடக்கு கிழக்கு இணைப்பானது தமிழ் ஈழத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காது. இப்பகுதியில் இந்திய முதலாளித்துவத்துடைட ஆளுமையை ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில், தனியாக ஒருதமிழ மாநிலம் உருவாக்கப்பட்டாலும்கூட, தமிழ் ஈழ சுதந்திரத்தை சுவாசிக்க முடியாது.

2500 தமிழ் மக்களைக் கொன்ற பிறகு, அச்சிறிய நாட்டை அகதிகளாக மாற்றிய பிறகு, இந்திய முதலாளித்துவ வர்க்கம் இத்தகைய ஒரு வேஷம் போடுவதற்கு முக்கிய காரணம். இந்திய முதலாளித்துவத்தின் சிக்கலே இதற்கு முன்பு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு உயர்த்திய தமிழ் ஈழ மக்களின் உறுதியான தாகுப்பிடித்தல் தான்.

எல், டி. டி, ஈ. ஐ தன் பங்காளியாக மாற்ற இந்திய முதலாளித்துவ வர்க்கம் கையாண்ட இந்தக் கடைசி நடவடிக்கை, சிறிலங்காவின் புதை சேற்றில் ஆழமாக ஊடுருவி ராஜீவ் காந்தி சிக்குவதை தடுக்கவல்லை. இதற்கில் ஜெயவர்த்தனே அரசின் பிடி நாளுக்கு நாள் தளர்ந்து வருவதால் அங்கும் ராஜீவ் காந்தி தனது துருப்புகளை அனுப்ப வேண்டும கட்டாயத்தை எதிர்நோக்கவேண்டி வரும்.

கொழும்பின் கிழக்குப் பகுதியிலுள்ள பொமிலாவில், வாழ்வியல் உரிமைகளுக்காக வழக்காடும் வழக்குரைஞர் விஜிடேசா ல்யனராச்சி, போலீசாரால் கொலை செய்யப்பட்டது. கடுமையான பொதுமக்களின் எதிர்ப்பை பற்றவைத்துள்ளது. நகரமும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் அப்படியே ஸ்தம்பித்துவிட்டன. காட்டிக் கொடுக்கும் உழைக்கும் வர்க்கத்தலைவர்களின் நம்பிக்கைத் துரோக கூட்டுச்சதித் திட்டங்களால் லாபம் அடைந்து கொண்டிருக்கும் சிங்கள இனவாத ஜே.வி.பி., இதற்குள் நுழைந்து இந்த எதிர்ப்பை தனது பிற்போக்கான நோக்கங்களுக்கு பயன்படுத்த முன்வந்துள்ளது. அரசாங்கம் இப்பொழுது இந்திய இராணுவத்தையே முழுவதும் நம்பியுள்ளது.

## புரட்சிகர நெருக்கடி

இந்திய, சிறிலங்கா பிற்போக்கு அரசுகளுடன் ஸ்டாலினிஸ்டுகள், திரிபுவாதிகள் மற்றும் இடைநிலைவாதிகள் ஆகியவர்களுடைய நேரடி கூட்டுச் சதியாலேயே, பர்மாவில் உள்ளதுபோன்ற புரட்சிகர நெருக்கடி சிறிலங்காவில் சமீப காலமாக கட்டுக்குள் வைக்கப்பட்டிருக்கிறது.

ஏகாதிபத்தியத்தால் நெய்யப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னால் உழைக்கும் வர்க்கத்தை கட்டிப்போட்டு விட்டதால், ஜே. வி. பி. போன்ற இனவாத சக்திகளுக்கு தினமும் திருவிழாவாகி விட்டது. எத்தனை நாட்களுக்கு உழைக்கும் வர்க்கத்தை இப்படி அடக்கி வைத்திருக்க இயலும்?

உழைக்கும் வர்க்கத்தின் தாக்குதல், ஆட்சியினருக்கு எதிராக வளர்ச்சியடையா வண்ணமும், பெருபவேகம் பெற்றுவந்த தமிழ் விடுதலைப் போராட்டத்துடன் அது பொருத்திவிடாமலும் தடுக்க 1985 விலேயே அவர்கள் வகுத்த பாத்திரம் பற்றி நாம் முன்பே குறிப்பிட்டிருந்தோம். சிறிலங்கா உழைக்கும் வர்க்கம் ஜெயவர்த்தனே அரசிற்கு எதிரான 1976, 1980 போராட்டங்களை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து போராட தீர்மானித்துள்ளனர் என்பது, இத்தீவில் தற்போது வெடித்துள்ள பரவலானதொழிலாளர்போராட்டங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

எஸ். எல். எப், பி.—சி.பி. கூட்டு அரசிற்கு சாவுமணி அடித்த 1976 பொது வேலை நிறுத்தம், உழைக்கும் வர்க்கத்தின் அதிகார பூர்வமான தலைமை எதினாலும் தூண்டப்பட்டு, வழிநடத்தப்படவில்லை; மாறாக இடைநிலைவாத ரயில்வே தொழிலாளர் சங்கங்களின், செயற்குழுவினால் நடத்தப்பட்டது. அந்தத் தொழிலாளர்கள் புதிதாக பதவியேற்றிருந்த யு. என் பி. அரசை எதிர்த்து 1980ல் அதே முறையில் போராடினர் அந்த வருடத்தில் 300 000 தொழிலாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டதுதான் விளைந்த பயன்.

LSSP-CPன் காட்டிக் கொடுக்கும் தலைவர்களுக்கு எதிரான போராட்டதகன வேலைநிறுத்தக்கில்போதும் அதற்குப் பின்னரும், உழைக்கும் வர்க்கம் புரட்சிகர செயல்பாட்டின் அடிப்படையில. அதிகாரத்தை கைப்பற்ற வேண்டியிருப்பதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சிறிலங்காப் பிரிவான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர்களுக்கு வேலைநிறுத்தத்தன் ..டிப்பினையை எடுத்துக் கூறியது. தமிழ விடுதலைப் போராட்டத்திற்கான நிபந்தனையற்ற ஆதரவு, ஜெயவர்தனே ஆட்சி பீடத்தை முறியடித்தல் உட்பட, சர்வதேச பாட்டாளி வர்க்க திட்டத்திற்காக போராடும் ஒரு புரட்சிகர கட்சியின் அத்தியாவசியத் தேவை என்பதுதான் அது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஜெயவர்த்தனே அரசை வீழ்த்த உறுதியுடன தொடர்ச்சியாக போராடி வந்துள்ளது.

கடந்த மாதம், வங்கி ஊழியர்கள் சங்கத்தின் தலைமைக்கு புரட்சிகர டிராட்ஸ்கியிஸ்ட்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலானது, உழைக்கும் வர்க்கத்தினரிடையே மிகுந்த விழிப்புணர்வு பெற்ற ஒரு பிரிவு, கடந்த காலத்தில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு வர்க்கக் கூட்டு வைத்து காட்டிக்கொடுக்கும் தலைவர்களிடம் இருந்து பிரிந்து வருவதை சுட்டிக் காட்டுகிறது.

ஒரு காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பகுதிகளாக இருந்த அனைத்துப் பகுதிகளிலும் இத்தகைய புரட்சிகர கட்சியைக் கட்டி எழுப்புவதை இனியும் தள்ளிப்போட முடியாது என்று பர்மாவில் உள்ள புரட்சிகர நெருக்கடி சுட்டிக் காட்டுகிறது.

## கொந்தளிப்பில் துணைக்கண்டம்

இந்தப் பிராந்தியத்தில் ஏகாதிபத்தியம் கடுமையான நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. எல், டி.டி. இ. தலைமையின் சந்தர்ப்பவாத அரசியலுக்கு மத்தியில் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள் உறுதியாக தாக்குப்பிடித்து எதிர்த்து போராடிக்கொண்டிருக்கும் சிறிலங்காவில், ஏகாதிபத்தியத்தின் பிரதான போலீஸான இந்திய முதலாளித்துவ வர்க்கம் ஆழம் தெரியாமல் காலை விட்டு முழித்துக்கொண்டிருக்கிறது ஏகாதிபத்தியத்தின் முதலாளித்துவ சக்தியின உற்பத்திப் பொருளான பங்களாதேஷ் இந்தியாவின் எதிர்ப்புரட்சி பிரிவினைச் செயலாலும், காட்டிக்கொடுக்கும் பூர்ஷ்வாவின் செயலாலும், என்ன விளையும என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

பாகிஸ்தானில் ஜியா—உல் ஹக்கின் இரத்தக்களரியான முடிவு. ஏகாதிபத்தியத்தின கருவியாக இருந்த ஒரு நாட்டில், அதன் வீழ்ச்சியை முன்னறிவிக்கிறது.

ஆனால் இப்பிராந்தியத்தில் உள்ள நெருக்கடியின் முக்கிய குவிப்பு இந்தியாமீது விழுகிறது: இவ்வருடம் 6300 கோடி ரூபாய் என்று கணிக்கப்பட்டுள்ள அந்நியக் கடன்சுமையாலும், வளர்ந்து வரும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகப் பற்றாக் குறையாலும, 10,000 கோடி வரவு-செலவு பற்றாக்குறைத் திட்டத்தாலும், இந்திய முதலாளித்துவ வர்க்கம தினசரி நடைமுறைச் செலவுகளுக்கே பணம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்றது.

புதிய உயர் தொழில்நுட்ப தொழிற்சாலைகள், அந்நிய வருமானத்தை அதிகரிக்கும் என்ற ராஜீவ் காந்தியின் கணக்குகள் எதிர்பார்த்த பலனை அளிக்கத் தவறிவிட்டது. மாறாக அவைகளுக்கு அளிக்கப்பட்ட வரி விலக்குகளாலும், அபரிமிதமான நிர்யாணிப்பு செலவீனங்களாலும், இருந்த சூழ்நிலை மோசமானதும், ஏற்கனவே வரவு-செலவுதிட்டத்தில் 17%க்கும் அதிகமாக, இராணுவத்திற்கு செலவு செய்துவந்த இந்தியா, சிறிலங்காவில் தனதுதொடர்ந்த இராணுவக் தலையீட்டினால் அத கட்டுப்படுத்த முடியாத அளவு உயர்வதை தடுக்க முடியவில்லை.

திட்டவட்டமாக, இந்தக் காரியத்திற்காகத்தான் ஸ்டாலினிஸ்டுகள், திருத்தல்வாதிகள் மற்றும் இடைநிலைவாதிகள், இந்திய, இலங்கை ஒப்பந்தத்தை அமுலுக்கு கொண்டுவருவதில், ஏகாதிபத்தியத்திற்கு, மிகவும தேவையானவர்களாகி விட்டனர். நெருக்கடி மேலும் [illegible], இந்த நம்பிக்கை துரோகிகளின் சேவை ஏகாதிபத்தியத்திற்கு அத்தியாவசியமாகிவிட்டது அதனால் தான் தொழிலாள அதிகாரத்துவம், மக்களின் அடிப்படை ஜனநாயகத் தேவைக்கு எதிராக வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றது.

தொழிலாள அதிகாரத்துவத்தால, பின்தங்கிய நாடுகளில், தேசிய விடுதலையின் குறிக்கோள் உதறித் தள்ளப்பட்ட இந்த செயலானது, உழைக்கும் வர்க்க இயக்கத்தை வரலாற்றின் முக்கிய கட்டத்தில் நிறுத்தியுள்ளது. ஏகாதிபத்தியத்தன் நுகத்தடியில மாட்ட, சிறிலங்கா தொழிலாளிகளை அழைத்துச் சென்ற, LSSP தலைமை வெற்றி கொண்டதை நாம் இங்கு நினைவு கூறுவோம். உலகப் பொருளாதார நெருக்கடி புதிய கட்டத்தை அடைந்து கொண்டிருக்கையல், போருக்குப் பிந்தைய துண்டாடலுக்கு பிந்திய இந்தியாவின் மீது உள்ள பிடிப்பை மறுவிநியோகம செய்ய, ஏகாதிபத்தியங்கள் தங்களுக்குள் வியாபாரப் போர் நிகழ்த்திக் கொண்டிருப்பது மிகவும் வெளிப்படையாகத் தெரிந்துகொண்டிருக்கையில், தேசியவிடுதலை என்பது உலக சோசலிசப் போராட்டத்தின் நேரடிப் பகுதியாக மாறுகிறது.

தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச ஐக்கியத்திற்குத் தானும் ஆதரவளிப்பதாக பாசாங்கு செய்து, 1947-ல் உருவாக்கப்பட்ட தேசிய முதலாளித்துவ அரசுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்ட LSSP அதிகாரத்துவ, இப்பொழுது ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புரட்சி முகாமில் தன்னை நுழைத்துக் கொண்டுள்ளது. அதன் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் ஏஜெண்டுகள் மக்களின் நலனுக்கு எதிராகத் திரண்டுள்ளனர். இது எப்போதும தொழிலாள வர்க்கத்தில தலைமையை வெற்றி கொள்ள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடி வந்த பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களுக்கு இது புதியவழியைத் திறந்துவிட்டுள்ளது.

ஆகவே இந்திய ஐக்கிய சோசலிச குடியரசுகளுக்காகப் போராட நான்காவது அகிலத்தின் கட்சியை மீண்டும் நிறுவ, இந்திய உபகண்டத்தின் அனைத்து பகுதிகளிலும் [illegible]ள்ளது

(தொடரும்)



நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார ஜூன் 36, 1986ல் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டிற்கு வருகையில் ஜெயவர்த்தனேயால் வரவேற்கப்படுகிறார், அங்கே தொழிலாள வர்க்கத் தலைவர்கள் வழங்கிய ஆதரவு 1987ல் இந்திய ராணுவ தலையீட்டுக்கு மூடுதிரையாக இருந்தது. இடமிருந்து பின்னே இரண்டாவதாக நிற்பது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் கே. பி, சில்வா.


## சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் சேருங்கள்!

தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர டிராட்ஸ்கிசத் தலைமையைக் கட்டுங்கள். சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட இந்தியாவில் உள்ள டிராட்ஸ்கிச இயக்கமாகிய சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் உறுப்பினர் ஆகுங்கள்!

பெயர்....................................................

முகவரி..................................................

..........................................................

நிரப்பிய பின் அனுப்ப வேண்டிய முகவரி :

தபால் பெட்டி எண் 968,

பெரம்பூர் பாராக்ஸ் சென்னை-600 012.


படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனின் தேர்தல்களின் பின்னுல்

5ம் பக்கத் தொடர்ச்சி

நேரிடக்கூடுவதா இருப்பதாகும். அக்டோபர் புரட்சிக் கால கட்டத்தில் அப்படியான நிலைமை ரஷ்யாவில் இடையவே இடையாது. ஆட்சியை கைப்பற்றியதும், சோவியத் யூனியனை அரை நிலப்பிரபுத்துவ பின்னடைந்த நிலைமையின் மிச்ச சொச்சங்களில் இருந்து விடுவிக்கும் பணியை போல்ஷேவிக்குகள் எதிர் கொண்டனர். சோவியத் யூனியனை முழுமையாக பொருளாதார ரீதியாக மாற்றி அமைப்பதற்கும் உண்மையான சோசலிச வழிகளிலான விநியோகத்தின் வளர்ச்சிக்கும் மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற பெரும் ஏகாதிபத்திய மையங்களில் பாட்டாளிகளின் வெற்றியை போல்ஷேவிக்குகள் எதிர்பார்த்திருந்தனர்.

இருந்த பொழுதிலும் போல்ஷேவிக்குகள் எதிர்பார்த்தவாறு சர்வதேச புரட்சிகர வெற்றிகள் நிகழவில்லை. பதிலாக அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்த புரட்சிகர அலையின் தோற்கடிப்பு, சோவியத்யூனியனின் ஒரு நீடித்த கால தனிமைப்படுத்தலை அர்த்தப்படுத்தியது. எல்லாவற்றுக்கும் மேலாக, போல்ஷேவிக்குகளை தூக்கி வீசும் முயற்சியில் ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்ட மூன்று வருட கால உள்நாட்டுப் போர் (1918—21) சோவியத் யூனியனை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாவும நாசப்படுத்தியது. சோவியத் யூனியன் மீது திணிக்கப்பட்ட குரூரப் போரினுல் பாட்டாளி வர்க்கமே கணக்கில்லாமல் அழிக்கப்பட்டது.

சோவியத்துகளின் சீரழிவுக்கும, ஒரு பிரமாண்டமான அதிகாரத்துவ அரச இயந்திரத்தின் வளர்ச்சிக்கும் அடிப்படையான சடரீதியான நிலைமைகள் இவையே. போல்ஷேவிக் கட்சி மீதான அரச அதிகாரத்துவத்தின் அழுத்தம் அதன் அரசியல் வெளிப்பாட்டை ஸ்டாலின் தலைமையிலான பழமைவாத பிரிவின் வளர்ச்சியில் கண்டு கொண்டது. போல்ஷேவிக் கட்சியினுள் அதிகாரத்துவத்தின் வளர்ச்சியுறும் அரசியல் எடைக்கு எதிராக ஒரு அரசியல் போராட்டத்தை 1923ல் லியான் டிராட்ஸ்கி தலைமையின்கீழ் இடதுசாரி எதிர்ப்பியக்கம தொடங்கியது. 1927 நவம்பரில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து டிராட்ஸ்கியை வெளியேற்றியதுடன் முடிவுக்கு வந்த இடது சாரி எதிர்ப்பியக்கத்தின் தோல்வி பிரிக்க முடியாதபடி சோவியத் ஜனநாயகத்தின் அழிவுடன் தொடர்புடையதாக இருக்கிறது. 1930-ன் நடுப்பகுதியில், ஒரு சமயம் போல்ஷேவிக் கட்சியாக இருந்தது அதிகாரத்துவத்தினுல் நசுக்கப்பட்டது. தனது சலுகைகளை பேண உறுதி பூண்டுள்ள ஒரு குரூரமான அதிகாரத்துவ ஜாதியினுல் அரசியல் அதிகாரம் பறிமுதல் செய்யப்பட்டதையே ஸ்டாலினின் போனபாட்டிச சர்வாதிகாரம் பிரதிநிதித்துவம் செய்தது.

ஒரு புதிய ஆளும் வர்க்கம் என்பதிலும் பார்க்க ஒரு சலுகைமிக்க ஜாதி என்று அதிகாரத்துவத்தை வரையறுக்கும் போது டிராட்ஸ்கி வலியுறுத்தியதாவது, அதிகாரத்துவம் புதிய சொத்து வடிவங்களை உருவாக்கவில்லை அத்துடன் உற்பத்தி சாதனங்கள் தொடர்பாக ஒரு சுதந்திரமான உறவை கொண்டிருக்கவில்லை என்பதுமாகும். அதிகாரத்துவத்தின் சலுகைகள் அக்டோபர் புரட்சியால் உருவாக்கப்பட்ட சொத்து வடிவங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். 1917-ல் உருவாக்கப்பட்ட தேசிய மயமாக்கப்பட்ட சொத்து உறவுகளை சோவியத்அரசு பேணும வரையில் அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக இருந்தது, அது ஒரு கடுமையாக சீரழிந்த வடிவத்தில் இருந்த போதிலும் கூட டிராட்ஸ்கி தொடர்ந்து எச்சரித்தார். அதாவது எவ் வாறுயினும் பாட்டாளி வர்க்கம் ஒரு அரசியல் புரட்சியின் மூலமாக அதிகாரத்துவத்தை தூக்கி வீசி தொழிலாளர் ஆட்சியின் பரந்த சாதனங்களாக சோவியத்துக்களை மீண்டும் உயிர்ப்பிப்பதன் மூலமாக உண்மையான அதிகாரத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளாத பட்சத்தில், சோவியத் அரசின் தொடர்ச்சியான சீரழிவு இறுதியில் முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டு வருவதற்கு வழி வகுக்கும். இந்தத் திசையில் ஒரு சக்தி வாய்ந்த உந்துசக்தி அதிகாரத்துவத்திலிருந்தே வரும் அது டிராட்ஸ்கி விளக்கியது போல் சொத்தின் சிறப்பான வடிவங்களை ஸ்தாபிப்பதன் மூலம் அதன் ஆட்சிக்கு மிக உறுதியான ஆதாரங்களை உருவாக்க முனைகிறது.

1936-ல் ஸ்டாலின் ஒரு புதிய அரசியலமைப்பை அறிமுகம் செய்தார் அது 'உலகத்திலேயே மிகவும் ஜனநாயகமானது' என அவர் கூறினுர் இந்த ஏமாற்றை அம்பலப்படுத்தி டிராட்ஸ்கி எழுதியதாவது; 'அரசியல் துறையில் புதிய அரசியலமைப்பு பழையதிலிருந்து வேறுபடுவது எதிலென்றுல் வர்க்கத்தையும், தொழிற்துறை குழுக்களையும் அடிப்படையாகக் கொண்ட சோவியத் முறையிலான தேர்தலில் இருந்து விலகி திரும்பவும் திவலையாக்கப்பட்ட மக்கட் தொகையின் 'பொதுவான, சமத்துவமான, நேரடியான' வாக்கினை அழைக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ ஜனநாயக முறைக்கு சென்றுள்ளது இதை சுருக்கமாகக் கூறுவோமாயின் பாட்டாளி வர்க்கசர்வாதிகாரததைசட்ட ரீதியாக அழிப்பது பற்றிய ஒரு பிரச்சனையாகும். எங்கே முதலாளிகள் இல்லாது இருக்கின்றனரோ அங்கே பாட்டாளிகளும்கூட இல்லை—என புதிய அரசியலமைப்பின் சிருஷ்டிகர்த்தாக்கள் கூறுகின்றனர்— அதனைத் தொடர்ந்து அரசும் பாட்டாளியினுடையதாக இருப்பதிலிருந்து மாறி தேசிய ரீதியாகிறது இந்த வாதமானது அதன் அனைத்து எழுந்தமான ஏமாற்று கூடியதாக ஒன்றில் பத்தொன்பது வருடம் பிந்தியது அல்லது அதன் நேரத்துக்கு பல வருடங்கள் முன்னையதாகும். முதலாளிகளை பறிமுதல் செய்ததில், பாட்டாளி வர்க்கம் நிச்சயமாக அதன் சொந்த வர்க்கத்தை ஒரு வர்க்கம்என்ற நிலையிலிருந்து அடிக்கும் நிலைக்கே புகுந்துள்ளது. ஆனுல் கொள்கைஅளவில் அழிப்பது என்பதிலிருந்து சமுதாயத்திற்குள் உண்மையாக கலைப்பது என்பது ஒரு மிக நீண்ட பாதையாகும். புதிய அரசு முதலாளித்துவத்தின் ஆரம்ப நிலை வேலைகளை செய்யும்படி நிர்ப்பந்திக்கப் படுகின்ற வரை அது நீண்டதானதாக இருக்கும். சோவியத் பாட்டாளி வர்க்கம் இன்னமும் ஒரு வர்க்கமாக விவசாயிகளிலிருந்தும் தொழில்நுட்ப அறிவு ஜீவிகளிலிருந்தும், அதிகாரத்துவத்தில் இருந்தும் ஆழமாக வேறுபட்டதாகவும் அதற்கு மேலாக சோசலிசத்தின் இறுதி வெற்றி வரை அக்கறை கொண்ட ஒரே வர்க்கமாகும். புதிய அரசியலமைப்பானது இந்த வர்க்கம் பொருளாதார ரீதியாக சமுதாயத்தினுள் கலைக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே அதனை அரசியல் ரீதியாக 'தேசத்தினுள்' கலைக்க விரும்புகிறது." (லியான் டிராட்ஸ்கி, காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி நியூ பார்க் பப்ளிகேஷன்ஸ், பக்கம் 261.)



லெனின்

இந்த ஸ்டாலினின் அரசியலமைப்பு சம்பந்தமான ஆய்வானது சிறப்பாக அண்மையில் நடந்த தேர்தல்களின் தன்மையையும், அரசு அமைப்பை 'மறுசீரமைப்பு' செய்வதற்கான கோர்பச்சேவின் முழு அளவிலான திட்டத்தை மதிப்பீடு செய்வதற்கும் பொருத்தமானதாகும். மறுசீரமைப்பின் (பெரஸ்த்துரொய்க்காவின்) அரசியல், பொருளாதார, சித்தாந்த உற்பத்தி ஸ்தானங்கள் 1917-ல் போல்ஷேவிக்குகள் ஆட்சியை கைப்பற்றியதில் அல்ல ஆனுல் ஸ்டாலின் தலைமையின கீழ் அதிகாரத்துவம் அரசியல் அதிகாரத்தை ஏகபோகமாக்கியதிலும் சோவியத் ஜனநாயகத்தை அழித்ததிலுமே தங்கியிருக்கிறது. சோவியத் தொழிலாள வர்க்கத்துக்கு அரசுடன் உள்ள உறவில் இதன் தாக்கத்தை கருத்தில் கொணடு பார்ப்பின் புதிய தேர்தல் முறை கேள்விக்கிடமின்றி மேலும பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சீரழிவையே பிரதிநிதித்துவம் செய்கிறது. அத்துடன் 19—வது மாநாட்டில் கோர்பச்சேவ் ஆற்றிய உரையை பற்றிய மதிப்புரை மிகத்தெளிவாகக் காட்டுவது போல் தேர்தல் சீர்திருத்தங்கள், அரச கொள்கையின் திசை மீதான சோவியத் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் செல்வாக்கை நனவாக பலவீனப்படுத்தும் எண்ணமுடையதாகும்.

'தோழர்களே, நம் எல்லோருக்கும் தெரியும் அதாவது நமது அரசு ஒரு தொழிலாள வர்க்க சர்வாதிகாரத்திற்கான கருவியாக பிறந்தது. 1960-களின் இறுதியில் செய்யப்பட்ட முடிவின்படி அது படிப்படியாக முழு மக்களினதும் ஒரு அரசாக வளர்ச்சி அடைகின்றது என்பதாகும். ஆனுல் அரசியல் வளர்ச்சிப் போக்கின் உள்ளடக்கத்தை நாம் ஆழமாக அலசிப் பார்ப்போமாயின், எமது அரசு அதன் முழு அர்த்தத்தில் ஒரு மக்கள் அரசு என்பது மிகத் தெளிவாக வரும்.

'நாம் வேறுபட்ட சமூக தட்டுகளின் விகிதாசார மற்ற பிரதிநிதித்துவத்தை இட்டு அச்சமடையக்கூடாது. மக்கட் தொகையின் ஒவ்வொரு பிரிவினரிடையேயும்- தொழிலாள வர்க்கம், விவசாயிகள் மற்றும் அறிவு ஜீவிகளிடையே போர்க்குணமிக்க அரசியல் திறமையுள்ள, சக்தி வாய்ந்த மக்கள் நம்மிடம் உண்டு. (சோவியத் பதிப்பை மறுபடியும் அச்சடித்த புத்தகம், 15 ஜூலை 1988.)

மார்க்ஸிசத்தின் அடிப்படைத் தத்துவங்கள் பற்றி அறியாதிருக்கும் கோர்பச்சேவிடம், 'மக்கள் அரசு' பற்றிய அவரது பேச்சு குட்டி முதலாளித்துவ பிற்போக்கு அபத்தமாகும். மார்க்ஸ், 1875 காலத்திலேயே லசாலின் 'சுதந்திர மக்கள் அரசு' என்பதை உபசாரமில்லாது அம்பலப்படுத்தினுர். ஒரு அரசு, ஒரு வர்கக ஆட்சியில் கருவி என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை, இருக்கவும் முடியாது புறநிலையான அதன் இருப்பு, 'மக்கள் விரோதமான வர்க்கங்களாக பிளவுண்டிருப்பதையே குறிப்பிடுகிறது. ஒரு ஐக்கியமான மனித இனத்தினுள் வர்க்கங்கள் கலந்துவிடுவது நிறைவேற்றப்படின் அரசு, சிதைந்து, மறையவேண்டும்.

ஆனுல் "முழு அர்த்தத்திலும்" ஒரு மார்க்ஸிச விரோதியாக இருக்கும் கோர்பச்சேவ் அவரது "மக்கள் அரசை" சோவியத் சமூகத்தினுள் இருக்கும் "வேறுபட்ட சமூகத் தட்டில்" இருந்து அனுமானிக்கிறுர். இதில, அவர் பாரம்பரிய முதலாளித்துவ கருத்துக்களுக்கு இணங்கும் வகையில் தொடங்குகின்றுர். முதலாளித்துவ வர்க்கம் அதன் அரசு பற்றிய மார்க்ஸிஸ்டுகளின் வரையறுப்பை வெறுக்கிறது. பிரமாண்டமான நாடு கடந்த கம்பனிகள் ஒன்று திரண்டு, பெரும்பாலும் எண்ணிப்பார்க்க முடியாதளவு அரசியல், சமூக, மற்றும் பொருளாதார வாழ்க்கை மீது ஆதிக்கம் செலுத்தியபோதும் முதலாளித்துவ வர்க்கம் அதன் சீரழிந்து செல்கின்ற மற்றும் உள்ளே ஊழல் நிறைந்த ஜனநாயக அரசை "மக்களின்" பிரதிநிதியாக காட்ட முயற்சிக்கின்றது.

ஒரு "மக்கள் அரசு"க்கான கோர்பச்சேவின் அழைப்பு திட்டவட்டமான அரசியல் எண்ணங்களை கொண்டுள்ளது. என்பதை வலியுறுத்தி கூற வேண்டும். அரசு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை குறிக்கின்றது என்பது உற்பத்தி சக்திகளின் மீது தனி உடமையை சட்டமாக்குவதையும் ஒரு புதிய "சோவியத்" முதலாளித்துவ வர்க்கத்தை பகிரங்கமாக ஊக்குவிப்பதையும் இலக்காகக் கொண்டு மேலும் நனவாக செயற்படும் ஒரு கொள்கையுடன் தெளிவாக உடன்பாடு இல்லாதிருப்பதை அதிகாரத்துவம் உணர்ந்துள்ளது.

மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசில் தொழிற்துறைப் பாட்டாளி வர்க்கத்தின் நேரடிப் பிரதிநிதிகளை குறைக்கும் நோக்கத்துடனேயே தேர்தல் முறை வகுககப்பட்டுள்ளது. கடந்த ஜூனில் தேர்தல் முறையைப்பற்றி கோர்பச்சேவ் சுருக்கிக் கூறும்போது காங்கிரசில் சேவை செய்யும் 750 சிறப்புப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கு அனுமதிக்கப்படும் பல் சமூக புலமைத்துவ, கலை ஸ்தாபனங்களில் ஒன்றுக மட்டுமே அவர் தொழிற்சங்கங்களையும் பட்டியல் போட்டுள்ளார். சோவியத் யூனியனில் உள்ள அடிப்படைத தொழிற்துறையில் 350 லட்சம் தொழிலாளர்கள், வேலைக்கமர்த்தப்பட்டிருக்கையில் "விகிதாசார மற்ற" பிரதிநிதித்துவம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் உத்தியோக பூர்வமான அந்தஸ்தை கீழ்ப்படுத்துவதாக மட்டுமே கருத முடியும்.

தேர்தல் முறை, குட்டி முதலாளித்துவ பகுதிக்கு சாதகமாக மோசடி செய்யப்பட்டுள்ளது என்பதை சோவியத் தொழிலாள வர்க்கம் நன்கு அறிந்துள்ளது. என்பதற்கான அறிகுறிகள் அங்கே உண்டு. உதாரணமாக, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவிற்கும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் என அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தனி நபர்களுக்கும் இடையிலான ஒரு சந்திப்பின் விவரத்தை பிராவ்தா, பெப்ரவரி 16 இதழ் கொண்டிருந்தது. அங்கு குறிப்பிடப்பட்டவர்களில் அமுர் இயந்திர—கட்டிட ஆலையில் ஒரு கண்ணுடிவில்லை செய்பவரான எஸ். எப். மத்யூஸ்சென்கோவின் பேச்சைப்பற்றி கூறியதாவது:

புதிய தேர்தல் முறையைப் பற்றி குறிப்பிடுகையில், பேச்சாளர் குறைபாடுகளை சுட்டிக் காட்டினுர், சிறப்பாக உழைக்கும் மக்களின், நீல கழுத்து பட்டை அணியும் தொழிலாளர் விவசாயிகளின் பிரதிநிதிகளின் உறுதியான பங்கெடுப்பு சம்பந்தமாகவாகும். நடைமுறையில் முதலிடம் அறிவு ஜீவிகளுக்கும், வெள்ளை கழுத்துப் பட்டைஅணியும் தொழிலாளர்களுக்கும் தொழில் நுட்ப பணிபுரிவோருக்குமே வழங்கப்படுகிறது என அவர் கூறினுர், வரவிருக்கும் முதலாவது சோவியத் யூனியனின் மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசானது முன்னணி உற்பத்தி தொழிலில் உள்ள தொழிலாளர்களின் காங்கிரஸ் அல்ல என்று கூட சில பேர் கூறுகின்றனர். அரசின் பிரச்சினைகளை தீர்க்கும் திறன் அறிவு ஜீவிகளுக்கு மட்டுமே இருப்பதால் தொழிலாளர்கள் அவர்களுடைய இடங்களில் உட்கார்ந்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்." (சோவியத் பதிப்பின் நடப்புச் சுருக்கம் 15 மாரிச 1989.)

லெனின் சோவியத் முறையைப் பற்றி பேசுகையில், அதன் விதிவிலக்கான மற்றும் வரலாற்று ரீதியாக முன்னெருபோதும் இல்லாத ஜனநாயகத்தன்மை பற்றி மாறுமல் ஒரே மாதிரியாக பேசினுர்: 'சோவியத் அரசாங்கமே உலகில் முதலாவதாக

படிப்பகம்

www.padippakam.com



(அல்ல)து கண்டிப்பாக கூறின் இரண்டாவதாகும், ஏனென்ருல் பாரிஸ் கம்யூனும் அதே மாதிரியான வேலையை செய்ய ஆரம்பித்தது) பக்களை சிறப்பாக சுரண்டப்படும் மக்களையே நிர்வாகவேலையில் சேர்த்தது... சோவியத்துகள் உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் நேரடியான ஸ்தாபனமாகும். அது அவர்களது அரசை ஒவ்வொரு சாத்தியமான வழியிலும் ஒழுங்குபடுத்தி நிர்வகிக்க உதவி செய்கிறது.'' (வி. ஐ. லெனின், திரட்டு நூல் ஆங்கிலம்) தொகுதி. 28, பக்கம் 247.)

கோர்பச்சேவின் கருத்துக்கும், லெனினுடையதற்கும் பொதுவானது எதுவுமில்லை. அவர் 19 வது மாநாட்டில் கூறியதாவது: ''நாம் ஒரு புது மாதிரியான சாதனத்தை உருஅமைக்க வேலைசெய்ய வேண்டும். அது உயர்ந்த நிபுணத்துவ தரங்களில் தங்கியுள்ளதும், புதிய தொடர்பு கொள்ளும் தொழில் நுட்பத்தை திறமையுடன் உபயோகப்படுத்துவதாகவும், மக்களால் ஜனநாயக ரீதியாக கட்டுப்படுத்தப்பட்டதாகவும, பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தை மேம்படுத்தும் திறனுடையதாகவும் இருக்க வேண்டும். இந்த சாதனம், விஞ்ஞான ரீதியான நிர்வாகம் பற்றிய அடிப்படைகளில் மிகத்திறமை பெற்றவர்களை கொண்டிருக்க வேண்டும். அதனுல் அவசியமான பணியாளர்களை பயிற்றுவிப்பதற்கும், மறுபயிர்சி வழங்குவதற்கும் இன்றைய நாளுக்கான ஏற்பாடுகள் எமக்குத் தேவை.''

இந்த ''ஒரு புது மாதிரியான சாதனம்'' என்பது பழைய முதலாளித்துவ மாதிரியான அரச சாதனத்தை தவிர வேறு எதுவுமில்லை. அதின் முடிவுகள், ஆளும் அழுக்கு வேலையில் நிபுணத்துவம் பெற்றவர்களின் கைகளிலும். சிறப்பான பலாத்கார சக்தியின் தேர்ச்சிபெற்ற பிரதிநிதிகளின் கைகளிலும் விடப்பட்டுள்ளது. இந்த அம்சத்தை கோடிட்டுக் காட்டுவதற்காக கோர்பச்சேவ் ஜூலை 1988-ல், மத்திய கமிட்டியை எச்சரித்தார். ''மாநாட்டில் ஒரு தெளிவாக வரையறுக்கப்பட்ட நிலைப்பாடு முறைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது — ஒரு நவீன போட்டியான மற்றும் உயர்ந்த நிபுணத்துவமிக்க நிர்வாக சாதனம் இல்லாமல் நாம் செய்ய முடியாது''

ஒரு 'புது மாதிரியான சாதனம்' உருவாக்குவதில் கோர்பச்சேவ்வலியுறுத்துவது, இன்று அதிகாரத்துவத்திலுள் நடக்கும் அரசியல் மோதலின் தன்மை பற்றிய ஒரு தெளிவாக ஆழ்ந்த அறிவை வழங்குகிறது திட்டவட்டமாக கோர்பச்சேவின் தலைமையின் கீழான பிரிவினர் பிரதிநிதித்துவம் செய்வது, 1917-ல் உருவாக்கப்பட்ட அரச சொத்து அமைப்புகளுக்கு மிகக்குரோதமாக அரசியலும், கட்சி இயந்திரத்திலும் உள்ள பிரிவினரையே ஆகும். அதிகாரத்துவம் அதன் ஆட்சியை மிகவும் நீடித்திருக்கக் கூடிய அத்திவாரத்தில் நிறுத்துவதற்காக ஆர்வத்துடன் மிக அதிகளவு உறுதியை வெளிப்படுத்தி— அதாவது அது உற்பத்தி சக்திகளின் மீதான நேரடியான தனி சொத்துடமையை வழங்குகின்றது— தற்போது கோர்பச்சேவ் பிரிவு ஒரு அரசியல் கவர்ச்சி மையத்தை வழங்குகிறது, சோவியத் யூனியனில் உள்ள அனைத்து சோசலிச விரோத போக்குகளுக்கும் முன்னெரு போதும் இல்லாதளவு சட்டபூர்வமான அந்தஸ்தை வழங்குகிறது என்பதைப் பற்றி குறிப்பிடத் தேவையில்லை.

அதன் அரச இயந்திர 'மறுசீரமைப்பானது' அரசாங்கத்தினுல் ஊக்குவிக்கப்படும் புதிய முதலாளித்துவ சொத்து அமைப்புகளை பேணுவதற்கான ஒரு நம்பகமான அரசியல் அத்திவாரத்தை உருவாக்குவதை இலக்காகக் கொண்டதாகும். அரச கட்டுமாணங்களில் உள்ள மாற்றங்களுக்கும், பெரஸ்த்துரொய்காவின் பொருளாதார வேலைத் திட்டத்துக்கும் உள்ள பிணைப்பை மத்திய குழுவிற்கு ஜூலையில் ஆற்றிய உரையில் கோர்பச்சேவ் தெளிவாக ஒத்துக்கொண்டார் ''இந்த சாதனம் தீவிரமான பொருளாதார சீர்திருத்தத்திற்கான கோரிக்கையும், வேலைக் கூட்டுறவுகளின் புதிய பங்கையும் கணக்கில் கொண்டு அதன் வேலையை உறுதியாக மறுசீரமைப்பு செய்யவேண்டும்'' (சோவியத் பிரசின் மறுபதிப்புகள், 15 ஆகஸ்ட் 1988.)

கோர்பச்சேவ் அதிகாரத்துவத்தை எதிர்த்து ''போராடுகையில்'' அல்லது மிசத்திட்டவட்டமாக கூறினுல்அதன் ஒரு பகுதியை எதிர்க்கையில், அவர் தனது தாக்குதல்களை, தேசிய மயமாக்கப்பட்ட தொழிற்துறையுடனும், வ்வசாய கூட்டுறவுகளுடனும் தமது பதவிகளையும், சலுகைகளையும் பிணைத்துக் கொண்டுள்ள அந்த அரசினுள்ளும், கட்சி இயந்திரத்தினுள்ளும் உள்ள பதவியினருக்கு எதிராக தொடுத்துள்ளார். இந்த மாதிரியான அதிகாரத்துவத்திற்கு எதிரான 'போராட்டம்' அக்டோபர் புரட்சியினுல் உருவாக்கப்புட்ட சொத்து உறவுகள் மீதான ஒரு வெளிப்படையான தாக்குதலுக்கு ஒருஅரசியல் மூடு திரையை வழங்குகிறது 'தீவிரமான மறுசீரமைப்பை' தொடர்தலில்— அதாவது சுதந்திரமான சந்தை கொள்கைகளை அமுல்படுத்தல், வெளிநாட்டு வர்த்தகமீதான் ஏகபோகத்தை இல்லா தொழித்தல், உற்பத்தி சாதனங்கள் மீது தனிச் சொத்துடமையை சட்டமாக்கல்— சோவியத் சமூகத்தின் மிகச் சலுகை கொண்டதும், அரசியல் நனவுள்ளதுமான தட்டுடன் ஒரு கூட்டை ஏற்படுத்த கோர்பச்சேவ் பிரிவு முனைகிறது. அரச தொழிற்துறையில் மிகவும் லாபகரமான பிரிவுகளிலும் மற்றும் கூட்டுப் பண்ணைகளுன் நிர்வாக பிரமுகர்களிலிருந்து தொழில் நுணுக்கம் தெரிந்த நிபுணர்கள் அறிவு ஜீவிகள் பேராசை கொண்ட குட்டி முதலாளித்துவ பகுதியினர் வரையில் இப்பகுதியினரின் எண்ணிக்கையையும் செல்வத்தையும் அதிகரிக்க செய்வது ஸ்டாலினிச ஆட்சியின் பிரதான குறிக்கோள்களில் ஒன்ருகும்.

(தொடரும்)

★ ★ ★

## சிறிலங்கா டிராட்ஸ்டுகளின் சர்வதேச ரீதியான பிரச்சாரம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தலைமைத் தோழர்களான எச். எம். பி. ஹெரத், என் டபிள்யூ.விங்கிரம் சிங்கவும், ஆஸ்திரேலிய தொழிலாளர்கள் மத்தியில், இலங்கையில் தொழிலாளவர்க்க இயக்கங்களின் ஐக்கிய முன்னணிக்கான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், ஜே வி. பி. பாசிஸ்டுகளுக்கு எதிராகவும் யூ என். பி. அரசாங்கத்தின் தாக்குதலுக்கு எதிராகவும் சகல தொழிலாள வர்க்க இயக்கங்களினதும் கட்சிகளினதும் ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கான ச்ர்வதேச பிரச்சார இயக்கத்தின் ஓரம் சமாகவே தோழர்கள் இருவரும் ஆஸ்திரேல்யா தொழிலாளர்கள் மத்தியில் இப்பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இலங்கை டிராட்ஸ்கிஸ்டுகள் இருவரின் பிரச்சார இயக்கத்திற்கு ஆஸ்திரேலிய தொழிலாளர்கள் மத்தியில் பிரமாண்டமான ஆதரவு கிடைத்து வருகின்றது.

இவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் பரந்த கூட்டங்களிலும், உயர் கல்லூரிகள், பல்கலைக்கழக மாணவர் மத்தியிலும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஆஸ்திரேலியப் பகுதியான சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் ஏப்ரல 23 ஆம் தேதி நடைபெற்ற சிட்னி தேர்தல் பொதுக் கூட்டத்திலும் பேசினர்.

மேலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஐக்கிய முன்னணிக்கான அழைப்புக்கு ஆதரவாக ஆஸ்திரேலிய சோசலிசத் தொழிலாளர் கழகம் சிட்னி, மெல்போர்ன் பிரிஸ்பேன், வொலோங் கோங் ஆகிய இடங்களில் நடத்திய கூட்டங்களிலும் உரையாற்றினர்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஐக்கிய முன்னணிக்கான அழைப்பிற்கு ஆதரவாக ஆஸ்திரேலியாவில் ஏற்கனவே நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் ஆதரவு தெரிவித்திருந்தார்கள்.

ஏப்ரல் 21ம் தேதி பர்ராவோங் உயர்கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் பகல் உணவு இடைவேளையில் நடத்திய கூட்டத்தில் தோழர்கள் ஹெரத், விக்கிரமசிங்க பேசினர். அதில் 50 பேருக்கு மேல் கலந்துகொண்டனர்.




ஆஸ்திரேலிய சோசலிசத் தொழிலாளர் கழகம் நடத்திய கூட்டத்தில் இலங்கை டிராட்ஸ்கிஸ்டுகள் தோழர்கள் ஹெரத். விக்ரமசிங்க ஆகியோர்

தோழர் ஹெரத், விசகிரமசிங்க டேசுகையில் ''சிறிலங்காவில் தொழிலாள வர்க்கம் எதிர்கொள்ளும் தாக்குதல், சிறிலங்காவுக்கு மட்டும் சொந்தமானதல்ல ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளவர்க்கத்திற்கெதிராக இசசகைய தாக்குதல்கள் நிசழச்சி நிரலில் உளளது. இது உலக முதலாளித்துவ நெருக்கடி ஆழமானதின் வெளிப்பாடு ஆகும். அதாவது இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிற்பாடு முதலாளித்துவ ஆட்சிகளை பாதுகாபபதற்கு எடுத்த நடவடிக்கைகள் யாவும் இன்று நொறுங்கிப் போயுள்ளது.''

சிறிலங்காவில்தொழிலாள வர்க்கம் எதிர்கொள்ளும் நெருககடியை தங்களுடைய நெருக்கடியாக எடுக்கவேண்டுமென ஆஸ்திரேலிய நியூசிலாந்து தொழிலாள வர்க்கத்தை அவர்கள் கேட்டுள்ளார்கள்.

''ஒவ்வொரு நாட்டிலும முதலாளி வர்க்கம சொந்த நலனுக்காகவும், சர்வதேச நிதிமூலதனத்தின் நலனுக்காகவும் தொழிலாள வர்க்கஇயக்கங்களை நிர்மூலமாக்குவதில் ஈடுபட்டுவருகின்றது அதன் கூர்மையான வெளிப்பாடே சிறிலங்காவில் தொழிலாள வர்க்கத்திற்கு எதிரான ஜே. வி. பி. பாசிஸ்டுகளின் தாக்குதலும் யூ. என். பி. அரசாங்கத்தின் தாக்குதலுமாகும்.'',

''புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தோழர்களான ஆர். எ. பிட்டவல, பி. எச். குணபால உட்பட பல தொழிற்சங்கத் தலைவர்களூ. தொழிலாளர்கள் ஜே.வி. பி, பாசிஸ்டுகளினுல் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்''

''இலங்கை கமயூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாசக் கட்சி, நவசமாசக் கட்சியினர், தங்களுடைய கட்சியின் தலைவர்கள் ஜே. வி. பி, பாசிஸ்டுகளினுல் கொலை செய்யப்பட்டிருந்த நிலையிலும், புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் ஐக்கிய முன்னணிக்கான அழைப்பை நிராகரித்துள்ளார்கள்.

இன்று நாங்கள், சிறிலங்காவில் நடப்பது சர்வதேச தொழிலாள வர்க்கத்தற்கு முக்கியமானது என்று கூறும் பொழுது 1930ல் ஜெர்மனியில் உள்ள நிலைமையை நினைவுபடுத்த விரும்புகிருேம்.

''லியோன் டிராட்ஸ்கி ஜெர்மனியில் பாசிஸ்டுகளை தோற்கடிக்க தொழிலாள வர்க்க இயக்கங்களின் ஐக்கிய முன்னணி கொள்கையை முன்த்தபொழுது. தொழிலாள வர்க்க இயக்கங்களின் தலைமைகள் அதனை நிராகரித்தன இதனுல 1933 ஹிட்லரின் வருகை மூலம் பாசிசம் வெற்றியடைய முடிந்தது தொழிலாள வர்க்கம் நிர்மூலமாக்கப்பட்டது.''

''ஆனுல் இன்று நாம் ஐக்கிய முன்னணிக்கான அழைப்பை விடுத்தது மாததிரமலல. இதைச் சூழ சர்வதேச சக்திகளை அணிதிரட்டுவதில் ஈடுபட்டுள்ளோம். இதை எங்களால் செய்ய முடிந்தருப்பது, ஏனெனில் நாங்கள் தொழிலாளவர்க்சத்தின் பேல்தேசிய எல்லைகளை சுமத்தும் தலைமைகளுச்கு எதிராக உலகக் கட்சியை கட்டுவதில் ஈடுபட்டிருப்பதினுலேயாகும்.''

''இன்று தொழிலாள வர்க்கத்தின் தலைமைகள் தொழிலாள வர்க்கத்தை பல வகையிலும் பிரித்து காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்ருர்கள் இதனைத் தோற்கடிசக நாம் உலகத் தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்திற்காகப் போராட வேண்டும், இந்த நூற்ருண்டில் இருதடவை முதலாளித்துவ வர்க்கம் நடத்திய இரு யுத்தத்திலும் பயங்கர அழிவு ஏற்பட்டது மீண்டும் ஒரு தடவை இதனை செய்வதற்கு அனுமதியளிக்கபோகிருேமா? நாங்கள் அதற்கு அனுமதிக்கப் போவதில்லை. இன்று அவர்கள் முழு மனித இனத்தையே அழிப்பார்கள் இதனை தடுப்பதற்கு, உலக சோசலிசப் புரட்சிக்காக் போராட வேண்டும்.

சிறிலங்காவின் டிராட்ஸ்கிஸ்டுகளின் பேச்சை கேட்ட ஆஸ்ரேன்கிரேன் தொழிலாளி ஒருவர் கூறியதாவது ''எங்களுடைய தொழிற்சாலையில் 50 தேசிய இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் உள்ளனர். தொழிலாளர்களை ஐக்கியப் படுத்த போராட வேண்டியது மிகவும் முக்கியமானது'' என்ருர்.

மற்றுமோர் தொழிலாளி கூறியதாவது சிறிலங்காவில் உள்ள நிலமையை விளங்கப் படுத்தி பேசுவதற்கு, தொழிற்சங்க அதிகாரிகள் இத் தோழர்களுக்கு பரந்த கூட்டங்களை ஒழுங்குபடுத்திக் கொடுசக ஏன மறுக்கிருர்கள் சிறிலங்காவில் உள்ள தொழிலாளவர்க்கம் எதிர்கொள்ளும் நிலைமையைக் கண்டித்து ஏன நாம பொது வேலைநிறுத்தம் நடத்தக் கூடாது'' என்று கேள்வி எழுப்பினுர.

ஆனுல் தொழிற்சங்க அதிகார்கள் இதனை செய்யமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் முதலாளிகளாய் இருக்கிருர்கள் என்ருர். நான் சிறிலங்காவின் தொழிலாளர்களுக்கு ஆதரவகாக ஒரு நாள் வேலை செய்யாமல் இருக்க விரும்புகிறேன் என்ருர்,

நியூசிலாந்து தொழிலாள வர்க்கத்தின் மத்தியிலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஐக்கிய முன்னணி அமைப்புக்கு ஆதரவு கிடைத்து வருகின்றது. சிறிலங்காவில் தொழிலாள் வர்க்கத்தைப் பாதுகாப்பதற்காக நிதி உதவி வழங்குமாறு ஆஸ்திரேலிய டிராட்கிச இயக்கமான சோசலிசதொழிலாளர் கழகம் விடுத்த வேண்டுகோளுக்கு ஆதரவு தெரிவித்து தொழிலாளிகள் பலவகையான நிதி உதவிகளை வழங்கியுள்ளார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



★2-ம் பக்கம் தொடர்ச்சி

பாவிற்கு நீடித்ததும், 1949ல் சீனப் புரட்சியின் வெற்றியும் எவ்வகையிலும் ஸ்டாலினிசத்தின் முற்போக்கு திருப்பத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. மாறாக சோவியத் அதிகாரத்துவம் இரண்டாம் உலகப் போரின் பின் முதலாளித்துவம் ஸ்திரநிலை பெறுவதை சாத்தியமாக்கியது; அதே சமயம் மாவோயிசம் அதன் தீவிரவாத பகட்டுகளை கைவிட்டு வலதுசாரி பக்கம் வேகமாக சென்றது, அது 1972ல் இருந்து அமெரிக் ஏகாதிபத்தியத்துடன் சீன ஸ்டாலினிசம் வெளிப்படையான கூட்டு வைத்ததில் முடிவடைந்தது, ஸ்டாலினிசத்தின் தொடர்ச்சியான சீரழிவு இன்று சோவியத யூனியனில், சீனாவில், மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முழுவதும் முதலாளித்துவ சொத்து உறவுகளை கொண்டு வருவதற்கான உந்துதலை உண்டுபண்ணியுள்ளது.

கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிசத்திற்கு எதிரான தொழிலாள வர்க்கப்போராட்டங்கள் பற்றிய படிப்பினைகளை சீனத் தொழிலாளர்கள் கிரகிக்க வேண்டும்: 1953ல் கிழக்கு ஜெர்மனி, 1956ல் போலந்து ஹங்கேரி; 1968ல் செக்கோ சிலாவாக்கியா, 1980 இலிருந்து இன்றுவரை போலந்து. 1956ன, ஹங்கேரியப் புரட்சி உதாரணத்தை தொடர்ந்து, உண்மையான தொழிலாளர் ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதற்கான தளத்தை உருவாக்க சீனத் தொழிலாளர்கள்சோவியத்துகளை—தொழிலாளர் சபைகளை—நிறுவ வேண்டும்.

சீனத் தொழிலாளர்கள் மாணவர்களுக்கும ஆளும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கும்இடையிலானமோதல் முழு சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் முன்னும புரட்சிகர தலைமைபற்றிய பிரச்சனையை தலையாய பிரச்சனையாக மாற்றியுள்ளது,

தற்போது ஒரு வெற்றிகரமான புரட்சிக்கு தேவையான அனைத்து அறிகுறிகளும் சீனாவில உள்ளது—அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் அணி திரளல், ஆளும் வட்டங்களின் மத்தியல நம்பிக்கையின்மை, அவர்கள் பலவீனமாகவும் பிளவுண்டும உள்ளனர், ராணுவ படைகளின் மத்தியில நெருக்கடி. ஸ்டாலினிசததை தூக்கிவீசி புரட்சிக் கட்சியின் தலைமையில் தொழிலாள வர்க்கத்தின் பின்னால் விவசாயிகளை அணிதிரட்டி உண்மையான தொழிலாளர் ஜனநாயகத்தை நிறுவ வேண்டும்.

## பப்லோவாதம் ஸ்டாலினிசத்திற்கு அடிபணிவு

ஒரு புரட்சிகர தலைமை இல்லாமல இருப்பதற்கான வரலாற்றுப் பொறுப்பு முதன முதலில மாவோயிசத்திற்குரியதாகும், அது சீன ட்ராட்ஸ்கிஸ்டுகளை அடிக்கடி துன்புறுத்தி,' சிறையிலடைத்தது அல்லது கொன்றது. மற்றது பப்லோவாதத்தின் காரணமாகவாகும். பப்லோவாதம், நான்காம் அகிலத்தினுள தோன்றிய ஒரு திருத்தல்வாத போக்காகும், அது இரண்டாம் உலகப் போரின் பின் மீண்டும் ஏற்படுத்தப்பட்ட முதலாளித்துவ ஸதிரநிலைக்கும், அரசியல் புரட்சி வேலைத்திட்டத்தை அகற்றி ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் பார்க்கக்கூடியபலத்திற்கும் அடிபணிந்து, மேலும் ட்ராட்ஸ்கிச இயக்கத்தின் பெரும் பகுதிகளை கலைத்தனர்

மாவோவின் கெரில்லா யுத்தக்கொள்கைகளுக்கும் விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட கட்சி கட்டுவதற்கும் எதிராக நிரந்தரப் புரட்சி வேலைத்திட்டத்திற்காகவும் தொழிலாள வர்க்கத்தின் ஒருபுரட்சிக்கட்சியை கட்டவும் போராடிய சீன ட்ராட்ஸ்கிஸ்டுகளை பப்லோவாதிகள் "ஒரு புரட்சியிலிருந்து வந்த அகதிகள்" என கண்டனம செய்தனர். 1952ல பரந்த ரீதியாக மாவோ சீன ட்ராட்ஸ்கிஸ்டுகளை கைது செய்தபோது அவர்களை பேண பப்லோவாதிகள் மறுத்தனர்.

சீனாவில் நிகழும் சம்பவங்கள், ஸ்டாலினிசத்திற்கு சரணாகதி அடைந்த அனைத்து விதமான பப்லோவாத சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக, உலக ட்ராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு நடத்திய தொடர்ச்சியான நீண்ட போராட்டத்தை வரலாற்று ரீதியாகருசுப்படுத்தியுள்ளது. வரலாற்று ரீதியாக பார்க்கையில் மாவோயிசம் ஒரு புதிய பாட்டாளிவர்க்கமற்ற சோசலிசத்திற்கான பாதை அல்ல ஆனால் முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டு வருவதற்கும், மானக்கேடான முறையில் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைக்கும் பாதையாகும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. நான்காம் அகிலத்தின் வேலைத்திட்டம் மட்டுமே, உலக சோசலிசப் புரட்சியின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியான அரசியல் புரட்சி வேலைத்திட்டமே சீனத் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் முன்னேறிச் செல்வதற்கான வழியை காட்டுகிறது,

சீனப் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் புரட்சி ஆசிய மற்றும் சர்வதேசிய ரீதியாக சோசலிசப் புரட்சிக்கான அதிர்ச்சி அலைகளை உண்டு பண்ணும். தென் கொரியா, தைவான் போன்ற ஆசியாவிலுள்ள புதிய தொழிற்துறை நாடுகளிலுள்ள முதலாளித்துவம அங்குள்ள இளம் போராடும் தொழிலாள வர்க்க இயக்கத்திற்கு எதிராக திணித்த போலீஸ் அரசு ஆட்சிகள் சீன நிகழ்ச்சிகளை அதிகப்படியான அசௌகரியத்துடன் நோக்கியது தற்செயலானதல்ல,

மாஸ்கோ, பெய்ஜிங் ஸ்டாலினிச பிரிவுகளுக்கிடையேயான நெருக்கம் தெளிவாக தொழிலாள வர்க்கம் பற்றிய பரஸ்பர பீதியையும். அவர்கள் உலக சோசலிசமுன்னோக்குடன் எவ்வித தொடர்பையும் கைவிட்டதுடன் சம்பந்தப்பட்டதாகும். அவர்கள் முழுமையாக மார்க்சியத்தை கைவிட்டு விட்டார்கள் என்பதை அவர்களுக்கிடையேயான பேச்சில் சுருக்கமாக வெளிப்படுத்தப்பட்டது.

"கார்ல் மார்க்ஸ் கடந்த நூற்றாண்டில் வாழ்ந்தார், அவரால் நாம் இந்த நூற்றாண்டில் எதிர்கொள்ளும அனைத்துப் பிரச்சனைகளையும ஊகிக்க முடியவில்லை. அவரால் அக்டோபர் புரட்சியை முன்கூட்டி எதிர்பார்க்க முடியவில்லை, லெனின் சீனப்புரட்சியை எதிர்பார்க்கவில்லை" என கோர்பச்சேவ் கூற அதை ஆமோதித்து அவரது சீன விருந்தளிப்பவர்கள் தலை அசைத்தனர்.

உண்மை என்னவெனில் அக்டோபர் புரட்சியும், சீனப் புரட்சியும் மார்க்சிஸ்டுகளினால் எதிர்பார்க்கப்பட்டது மட்டுமல்லாமல் தற்போதைய சீனாவின் புரட்சிகர வெடிப்பும் எதிர்பார்க்கப்பட்டது தான்,

9 மாதங்களுக்கு முன்பு நான்காம அகிலத்தின் அனைத்துலக குழு அதன் சர்வதேசிய முன்னோக்குகளின் தீர்மானத்தில மாவோவிலிருந்து டெங் வரை சீன அதிகாரத்துவத்தின் கொள்கைகளை மதிப்பீடு செய்து பின்வருமாறு கூறியது. "பொதுப்பார்வைக்காக மாவோவின் சடலம் இன்னமும் கெடாது பேணப்பட்டிருக்கலாம், ஆனால் அவரது பாரம்பரியத்தின் அழுகல் நாற்றமோ உச்ச கட்டத்தை எட்டியுள்ளது. அவரின வாரிசுகள் திட்டமிட்ட பொருளாதாரத்தில் எஞ்சியிருந்த அனைத்தையும் அழிக்கத் தொடங்கி விட்டனர். 1949ன் பின்னர் கூட்டுப்பண்ணை முறைக்குள் கொண்டுவரப்பட்ட பெரும்பாலான எல்லா நிலங்களும் தனியார் சொத்துடமைக்கு திருப்பப்பட்டுள்ளது. அத்துடன "செல்வந்தராவது மகத்துவமானது" என்ற அரசாங்க ஊக்குவிப்பின் கீழ் நாட்டுப் புறங்களில் முதலாளித்துவ உறவுகள் செழித்து வந்து கொண்டிருக்கிறது. நகர்ப்புற மையங்களில் முதலாளித்துவ நிறுவனங்கள் மீதான சகல கட்டுப்பாடுகளும் அடியோடு அகற்றப்பட்டுள்ளதோடு ஒரு காலத்தில் அரசுடைமைத் தொழிற்துறையாக இருந்தவற்றின் பெரும்பாகம் வெளிநாட்டு தேசிய முதலாளிக்கு ஏலத்தில் விடப்பட்டிருக்கிறது. 7000க்கும் அதிகமான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் தனியார் தொழிற்சாலைகள் பல அங்கே உண்டு. 1988 ஜூனில வெளியிடப்பட்ட புதிய விதிகள் முதலாளித்துவ நிறுவனங்களில்வேலைக்கு அமர்த்தக்கூடிய தொழிலாளர் எண்ணிக்கை பற்றிய சகலவரையறைகளையும் அகற்றியுள்ளது".

தற்போதைய எழுச்சி திட்டவட்டமான எந்த வடிவத்தை எடுக்கும் என்பதை யும அனைத்துலக குழு முன் கூட்டியே கூறியது :

"முதலாளித்துவத்தைமீண்டும் வெறியுடன் அறிமுகம் செய்து வைக்கும் சீன ஸ்டாலினிஸ்டுகளின் கொள்கைகள் நாட்டினை பொருளாதார அழிவினுள் தள்ளி வருவதோடு, தவிர்க்க முடியாத வகையில் பாட்டாளி வர்க்கத்தின் பிரமாண்டமான எழுச்சிக்கு இட்டுச் செல்லும். அடுத்த புரட்சிகர எழுச்சியின் போது நாட்டில் அதிகாரத்துவத்தினை ஒழித்துக்கட்டவும் ஸ்டாலினிசத்தால் மூகாமிடப்பட்ட முதலாளித்துவ வர்க்கத்தை வெற்றி கொள்ளவுமான பிரமாண்டமான போராட்டத்தில் ஏழை விவசாயிகளுக்கு தலைமை வகிப்பது சீனத் தொழிலாள வர்க்கமாகவே இருக்கும்."

இப்படியான நிகழ்ச்சிகள் சீனப் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு புரட்சிக் கட்சியை கட்டவேண்டிய அவசியம் ஒத்திப்போட முடியாதது என்பதை நிரூபிக்கின்றது. அப்படியான புரட்சிக் கட்சி சுதந்திரமாக தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டி அரசியல் புரட்சியின் மூலமாக ஒட்டுண்ணி ஸ்டாலினிச அதிகாரத்துவத்தை தூக்கி வீசும். இந்தக் கட்சி சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் ஒரு பகுதியாக கட்டப்பட வேண்டும்;

(நான்காம் அகிலத்தின் சர்வதேசிய முன்னோக்குகளின் தீர்மானம். ஆகஸ்ட் 1988 தொழிலாளர் பாதை ஜனவரி, பிப்ரவரி இதழ், பக்கம் 7) 10-06-89

# நேபாளத்திற்கு எதிரான பொருளாதார தடையை அகற்றப் போராடு!

★முதல் பக்கத் தொடர்ச்சி

பொருட்களை தடை செய்வது அமுலாக்கப்படமாட்டாது என்றூர். அதிகமான விபரங்கள் இல்லாமலே நேபாளம் 50 சதம் இறக்குமதிக்கு தங்கியிருந்த நாடு வர்த்தகத்தடை விதிக்கும்போது வறுமையான நேபாளிய மக்கள் எதிர்கொள்ளும் மிகக் கடுமையான வாழ்க்கை நெருக்கடியை எண்ணிப் பார்க்க முடியும.

அதே சமயம் நேபாள அரசாங்கம் பொருளாதார வர்த்தக உறவுகளில் இந்தியாவிற்கு சலுகைகள் வழங்கிய முன்னைய ஒப்பந்தத்தை முறிக்க விரும்புகிறது, மார்ச் மாதம் இந்த ஒப்பந்தம் காலாவதியாவதற்கு முன்பு நேபாளம் இந்திய வர்த்தக ஏகபோகத்தின்குறைந்த தரமுள்ள அதிக விலையான பண்டங்களை வாங்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது என நேபாளம் கூறுகிறது. நேபாளத்திலுள்ள இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிரான இனவாதத்தையும் நேபாள அரசாங்கம்தூண்டிவிட்டுள்ளது இப்படியான கெடுபிடி நிலையை சாக்காக பயன்படுத்தி நேபாள அரசு தனது ஒடுக்குமுறை சாதனங்களை பலப்படுத்தி உள்ளது.

இந்த இரண்டு முதலாளித்துவ அரசாங்கங்களும உலக ஏகாதிபத்தியத்தின் பொருளாதார நெருக்கடியால் ஆற்றொணா நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. அரைக் காலனித்துவ நாடுகளுக்கு பிரமாண்டமான முறையில் 'கடன்' வழங்கிய ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களான உலக வங்கி, சர்வதேசிய நாணய நிதியம் (IMF) இன்று இந்த நாடுகளுக்கு இடும கட்டளை அவற்றின் பொருளாதாரங்களை, வெளிப்படையாக நாடுகடந்த கம்பனிகளின் ஏகபோகச் சுரண்டலுக்கு திறந்துவிட வேண்டும் என்பதாகும். உலகப் பொருளாதார செழுமைக் கால கட்டத்தில் தேசிய முதலாளித்துவ பொருளாதாரங்களை பேணுவதற்காக ஏற்படுத்தப்பட்ட அனைத்து காப்பு வடவடிக்கைகளும அகற்றப்பட வேண்டுமென ஏகாதிபத்தியம் கோருகின்றது:

ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கொள்கைகளுக்கு இணங்கசெல்லவேண்டி இருப்பதால் நேபாள முதலாளித்துவ அரசாங்கம் இந்தியாவுடனான உடன்பாட்டை முறிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இந்த உடன்பாடு கேள்விக்கிடமின்றி பலம் வாய்ந்த பங்காளிக்கு சாதகமானதாகும். மறுபுறத்தில் காங்கிரஸ அரசாங்கம் இறக்குமதி தளர்த்தல் கொள்கை என்ற பெயரில் பல சுங்கத் தடைகளை நீக்கியுள்ளது; இந்த இழப்புக்கு ஈடுசெய்யும் வகையில இப்பிராந்தியத்திலுள்ள நாடுகளின் மீதும் தன் 'சொந்த' நாட்டினுள்ளும்பாரமாகசுமைகளை திணித்துள்ளது. இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையேயான மோதல்கள் உலக முதலாளித்துவ நெருக்கடியின் கூர்மையினால் எவ்வாறு இப்படியான அரைக்காலனித்துவ நாடுகளுக்கு இடையிலான "நட்பு உறவுகள்" கடுமையாக அவற்றின அத்திவாரத்திலேயே குழப்பத்தை உண்டாக்கிறது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்

எல்லாவற்றிற்கும் மேலாக அண்டை நாடுகள் மீதான காங்கிரஸ் அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைஅதன் உள்நாட்டுக் கொள்கையின் தொடர்ச்சியாகும்; அதன் பிற்போக்கு ஆட்சியை தக்க வைப்பதற்காக இந்திய பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பகுதிக்கு எதிராக மற்றொரு பகுதியை நிறுத்த இனவாதத்தையும் மதவகுப்புவாதத்தையும் தூண்டிவிடுகிறது.

## சி.பி.எம் – சி.பி.ஐ. தலைமைகளின் தேசியவாதம்

இரு ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகளும இச்சந்தர்ப்பத்தைபயன்படுத்தி மீண்டும் ஒரு முறை இந்திய முதலாளித்துவத்திற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு முற்போக்கு முலாம் பூசும் முயற்சியில் ஈடுபட்டுள்ளாதுடன் இந்திய முதலாளித்துவத்திற்கு நேர்மையான அவர்களது சேவையை உறுதிப் படுத்தவும், அவர்களது இந்த எதிர்ப்புரட்சி நிலைப்பாட்டை மூடி மறைக்கவும் நேபாள அரசாங்கத்தின் எதேச்சாதிகார, ஜனநாயகமற்ற பிற்போக்கான மன்னர் ஆட்சியைப் பற்றி வசைபாடுகின்றனர், எப்போதும் போலவே இந்திய முதலாளித்துவத்திற்கு நெருக்கடியான சூழ்நிலைமையில் காங்கிரஸ் ஆட்சியின் எதேச்சாதிகார ஜனநாயகமற்ற பிற்போக்கு தன்மையை மறந்துவிட அல்லது சரியாகச் சொன்னால் மறைத்துவிட முடிவு செய்துவிடுகின்றனர்,

சி.பி.எம்மின் தலைவர்களில் ஒருவரான பி. டி. ரணதிவே, இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்களின் 'மனம் நோகாதபடி' விமர்சனம் செய்து பின்வரும் ஆலோசனை செய்கிறார்; "இந்த நிலைமை வருடங்களாக கடுமை அடைந்து வருகின்றது என்பதுபற்றி இந்திய அரசாங்கத்திற்கு தெரியும். இருப்பினும் அது நெருக்கடியை தணிக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை அல்லது இரு நாட்டு மக்கள் மீதும் நம்பிக்கை வைத்து, நட்பு உறவுகளை பேணும்படி அவர்களிடம் விண்ணப்பிக்க மறுத்தது" (பீப்பிள்ஸ் டெமாகிரசி, மே 14, 1989). அதாவது இந்திய முதலாளித்துவம் நேபாளத்துடன் நட்பு உறவு என கருதுவது இந்திய முதலாளித்துவத்திற்கு சலுகைகள் வழங்கும் உறவையாகும். இந்த உறவைப் பேண இந்திய அரசாங்கம் இரு நாட்டு மக்களிடம் விண்ணப்பிக்கவில்லை என கோபித்துக்கொள்கிறார் ஸ்டாலினிசத் தலைவர் ரணதிவே!

மேலும் அவர் கூறுவதாவது "நேபாள நிர்வாகம் அது தேர்ந்தெடுத்த பாதைக்காக வெளிப்படையாகவே குற்றம் சாட்டப்படவேண்டும். ஒப்பந்தங்களை ஒருசாரார்தொடர்ந்து ஒருதலைபட்சமாக மீறுவராயின் அவற்றுக்கு அர்த்தம் எதுவும் இருக்காது. அப்போது அங்கே சர்வதேச நடத்தை விதிகளோ அல்லது ஒப்பந்தங்கள் உடன்பாடுகளில் தூய்மையோ இருக்காது"

இந்த மூத்த ஸ்டாலினிசவாதி கூறுவது என்னவென்றால் தனது இந்திய முதலாளித்துவ எஜமானர்களுக்கு நெருக்கடியை தோற்றுவிக்காது எப்படி நேபாள அரசாங்கம் செயற்பட்டிருக்க வேண்

12ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# 5 வருடங்களாக தொடரும் ஸ்ரீ பாலாஜி கேஸ் சிலிண்டர் தொழிலாளர்களின் போராட்டம் !

**எஸ். ராம்**

சென்னையில் — திருவான்மியூர் அருகேபாலவாக்கத்தில், அமைந்திருக்கும் ஸ்ரீபாலாஜி கேஸ் சிலிண்டர் நிறுவனம் 1981-ல் 1500 தொழிலாளர்களைக்கொண்டு இயங்கி வந்த நிறுவனம், தொழிலாள வர்க்கம் போராடிப் பெற்ற அடிப்படை உரிமைகளான வேலைப் பாதுகாப்பு, வேலை உத்தரவாதம், மருத்துவசதி, ஓய்வூதியம் எதுவும் இன்றி கொத்தடிமைகளாக தொழிலாள வர்க்கத்தை நடத்தி வந்த— முன்னாள் டி. எஸ். பி. மற்றும் முன்னாள் இந்நாள் அமைச்சர்களின் பங்குகளோடு பினாமி பெயரில் பங்குகளைக் கொண்ட நிர்வாகத்தின் ஒடுச்குமுறைக்கு எதிராக 1984 ஆம் ஆண்டு தொழிலாளர்கள், தங்களது உரிமைகளைப் போராடிப் பெறுவதற்காக தொழிற்சங்கம் ஒன்றை 6-5-84ல் அமைத்தனர்.

மின்சாரம் தாக்கி இறந்த தொழிலாளி குருமூர்த்தியின் மீது துணியைப் போட்டு மூடி விட்டு, மற்ற தொழிலாளர்களை வேலை செய்யுமாறு நிர்ப்பந்தித்த நிர்வாகம், விபத்தினல் கை, கால் விரல்கள் துண்டிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு (ESI) போன்ற மருத்துவ வசதியும், நிவாரணமும் எதுவும் வழங்காமலே கொத்தடிமைகளாக நடத்தி வந்த நிலையில்— தொழிற்சங்கம் அமைக்கத் தொடங்கி விட்டார்கள் என்று கேள்விப்பட்டது.

6-8-1984 அன்று இரவு ஷிப்டுக்கு வந்த தொழிலாளர்கள் 500 பேரையும் எவ்வித முன்னறிவிப்பின்றி வேலை நீக்கம் செய்ததோடு போலீஸ் படையையும் உள்ளே நிறுத்தி வைத்தது.

1984 ஜூன் மாதம் Hindu பத்திரிகையின்படி, உற்பத்திக்காக இந்தியாவிலேயே இரண்டாவது இடம் என்று, பாராட்டுப் பெற்ற பாலாஜி கேஸ் சிலிண்டர் நிறுவனத்தின் நிர்வாகம் இயந்திரங்கள் பராமரிப்புசரியில்லை, உற்பத்தி சரியான முறையில் தரவில்லை என்று பொய்ச் சாக்குகளைச் சொல்லி 500 தொழிலாளர்களின் வேலைகளைத் துண்டாடியது.

தொழிற்சங்கத்தின் செயலாளர் தேவராஜனை உள்ளூர் முதலாளித்துவ தி. மு. க, அ.தி.மு.க., காங்கிரஸ் கட்சிகளின் பிரமுகர்களைக் கொண்டும் தனியாகக் கூப்பிட்டும் பேரம் பேசி சங்கத்தலைமை விலை போகாத நிலையில்— அவர்கள் மீது 307, 302, 303 பிரிவுகளின் படி நிர்வாக இயக்குநர் மீது கொலை செய்ய முயற்சி என பொய் வழக்குகளைப் போட்டும், சிறையிலடைத்தும்— செயலாளர் தேவராஜனை தனிப்பட்ட ரீதியில் அவரது வீட்டிற்குப்போக விடாது, கோயில் அவரை தானே வலிய வந்து கட்டியும் மூர்க்கத்தனமான தாக்குதல் தொடுத்தது இந்த அக்கிரமங்களுக்கெதிராக 9-11-84 அன்று தொழிலாளர்கள்சங்கம் 12-12-84—ல் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக நோட்டீஸ் கொடுத்தது. அ. தி. மு. க. முதலாளித்துவ அரசாங்கத்தின் கீழ் அடையாறிலிருந்து ஈஞ்சம்பாக்கம் வரை 4 போலீஸ்பட்டாலியன் நிறுத்தி வைக்கப்பட்டு, பல்லவன் பஸ்களை நிறுத்தி பாலாஜி கேஸ் சிலிண்டர் தொழிலாளியா? என்று கேட்டு என்று இறக்கி அடித்துத்துன்புறுத்தினர்.

86 தொழிலாளர்களை 36 நாட்கள் சிறை வைத்த பின்னர், நிபந்தனை ஜாமீனில் (அடையாறு பகுதியில்) விடப்பட்டனர்.

நிர்வாகம் பாண்டிச்சேரி, ராஜபாளையம், மதுரை, நகரி போன்ற இடங்களில் இருந்து கருங்காலிகளைக் கொண்டு வந்து தொழிற்சாலையை நடத்தினர். இதற்கிடையேயும் அடையாறிலிருந்து கோல்டன் பீச்வரை, செக்யூரிட்டி ஆட்கள் அடையாளம் காட்ட, போலீஸ் தொழிலாளர்களைப் பிடித்து அடித்துத் துன்புறுத்தியது.

தொழிலாளர் அலுவலகம் முன் தொழிற்தகராறு சட்டத்திற்கு விட்டு—

இதன் பின்னர் முதலாளித்துவ அரசின் ஒடுக்கு முறை சாதனங்களுள் ஒன்றான நீதி மன்றத்தின் மீது பிரமை வைத்து சங்கம் 'ரிட்' என்று போட்டது.

பாலாஜி கேஸ் சிலிண்டர் தொழிற்சங்கமும் — பென் வால்டர் போன்ற தொழிற் சங்க அதிகாரத்துவங்களையும் (PICM). CPI ஸ்டாலினிச கட்சிகளின் தொழிற்சங்க வாதிகளை உதவிக்கழைத்தனர். ஆனால் அனைவருமே ஏனோ தானோ என்று தட்டிக் கழித்தனர்

MRL அசோக் லேலண்ட், இந்தியா பிஸ்டன் தொழிலாளர்கள் பொருளாதார உதவி செய்தனர். தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் போராட்டம் தீவிரமடையும் பொழுது, தாங்களும் ஆதரவு வேலை நிறுத்தம் செய்வதாகத் தட்டிக் கழித்தனர்.

பாலாஜி கேஸ் சிலிண்டர் தொழிலாளர்கள் இப்பகுதியில் உள்ள மற்ற இரு சிறுதொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களையும் இணைத்து அனைத்துத் தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப்புப் பேரவை ஒன்றை அமைத்துள்ளதுடன் இப்பகுதி வாழ் மக்களுடன் இணைந்து— நிர்வாகத்தின் பழி வாங்கல், தாக்குதல்களுக்கு எதிராக பொது மக்களது ஆதரவைத் திரட்டியுள்ளனர்.

வேலை இழந்த தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுக்கக் கோரி, உண்ணாவிரதம், ஊர்வலம் நடத்தியும்— பொய் வழக்குகளையும், போலீஸ் குண்டாந்தடிப்படிப் பிரயோகத்தையும் மட்டுமே பரிசாகப் பெற்றுக் கொண்டு— தொடர்ந்து போராடி வருகின்றார்கள் ஸ்ரீ பாலாஜி கேஸ் சிலிண்டர் தொழிலாளர்கள்.

இப்பகுதி மக்கள் கருங்காலி வேலை செய்யக்கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களுக்கு வாடகைக்கு வீடோ மளிகைக் கடை சாமான்களோ கொடுப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார்கள்

தர்ணா, ஊர்வலம் உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்திய ஸ்டாண்டர்ட் மோட்டார் பின்னிபீச் என்ஜினியரிங் மெட்டல்பாக்ஸ் தொழிலாளர்களின் அனுபவங்களிலிருந்து ஸ்ரீ பாலாஜி கேஸ் சிலிண்டர் தொழிலாளர்கள் படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கேஸ் சிலிண்டர் தயாரிக்கும் 3 MM உலோகத்தகட்டிற்குப் பதிலாக, குறைந்த தரமுள்ள உலோகத்தகட்டினால் செய்யப்பட்ட சிலிண்டர் வெடித்து— பம்பாயில் விபத்து ஏற்பட்ட பின்னரும் Duty draw back— முறையில் தில்லுமுல்லுகள் செய்து போலி சான்றிதழ்கள் மூலம் மோசடி செய்த ஸ்டாண்டர்ட் மோட்டார் கார்த்திக் நாராயணன் போல், கதவடைப்புச் செய்து பேச்சு வார்த்தைக்குக்கூடத் தலை காட்டாத முத்தையா போல் பாலாஜி நிர்வாகத்தினர் உல்லாசமாக உலா வந்து கொண்டிருக்கின்றார்கள்.

பின்னி பீச் என்ஜினியரிங் தொழிலாளர்கள் CITU தலைவர் வி. பி சிந்தனல்— நீதிமன்றத்தில் பிரமைவைத்து அடிமைச்சாசனத்தைத் தான் தீர்ப்பாகப் பெற்றனர்.

இந்த முதலாளித்துவ நீதி மன்றங்களில் தொழிலாள வர்க்கத்திற்கு நீதி கிடைக்கும் என்ற பிரமைகளை விடுத்து தொழிலாள வர்க்கம் தனது சுதந்திரமான வர்க்க பலத்தை அணி திரட்டி தன்னுடைய ஆட்சி அதிகாரத்திற்காகப் போராட வேண்டும்

லாப நோக்குடைய முதலாளித்துவ உற்பத்தி முறையின் நெருக்கடிகளுக்கு தொழிலாள வர்க்கத்தைப் பலியிட்டுக் கொண்டிருக்கிறது முதலாளித்துவ வர்க்கம்.

பல தொழிலாளர்கள் இணைந்தசமூகஉற்பத்திமுறைக்கும் உற்பத்திச் சாதனங்கள் தனிச் சொத்துடமையாகவும் இருப்பதற்குள்ள முரண்பாடும் இன்றைய உலக முதலாளித்துவ பூகோள உற்பத்தி முறை கேஸ் சிலிண்டருக்குத் தேவையான உலோகத்தகடு, பிரெஞ்சு ஜெர்மனியத் தொழிலாளர்களின் உழைப்பால் உருக்கப்பட்டது போல் பல நாட்டுத் தொழிலாளர்களின் உழைப்பு, தொழிலாள வர்க்கத்தை என்றுமில்லாத அளவில் இணைத்துள்ளது. ஆனால் தேசிய அரசு எல்லைகள் தடையாக இருக்கின்றன. சந்தைக்கான போட்டியில் அதிக வரி விதிப்பு, தீர்வைகளை விதித்து தேசிய எல்லைக்குள் கட்டுப்படுத்துகிறார்கள். இந்த முரண்பாடு உலக சோசலிசப் புரட்சியின் மூலம் தீர்க்கப்பட வேண்டும் இந்த நெருக்கடியின் விளைவாகத் தான் ஆட்குறைப்பும், சம்பள வெட்டும் உலகம் முழுவதும் நடந்து கொண்டிருக்கிறது.

முதலாளித்துவ லாப உற்பத்தி முறையை தூக்கி எறிந்துவிட்டு அந்த இடத்தில் சமூகத் தேவைக்கான உற்பத்தியை நிறுவவும், முதலாளித்துவ அரசாங்கத்தைத் தூக்கி எறிந்து விட்டு, சோசலிசக் குடியரசுகளை நிறுவவுமான வேலைத்திட்டத்தைமுன்னெடுக்கும் தொழிலாள வர்க்கத்தின் தலைமையிலான தொழிலாள வர்க்கம் புரட்சிக் கட்சியைக் கட்டி அமைக்க வேண்டும்.

மாறாக முதலாளித்துவ நெருக்கடிக்கு தொழிலாள வர்க்கத்தைப் பலியிடும், ஒரு பகுதி தொழிலாள வர்க்கத்திற்கு ஆதரவாக மற்றைய பகுதி தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்ட மறுக்கும்தொழிற்சங்க சீர்திருத்த தலைமைகளுக்கும், ஸ்டாலினிச, சமூக ஜனநாயக வாதத் தலைமைகளுக்கும் எதிராக காலாவதியாகிப் போன எல்லாவித தேசியவாத வேலைத் திட்டங்களுக்கும் மாற்றாக உலக சோசலிசப் புரட்சியை முன்னெடுத்து உலக சோசலிசக் குடியரசுகள் அமைக்கப் போராடும் உலக டிராட்ஸ்கிசக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் இணைந்து முதலாளித்துவ தேசிய வெறிகளுக்கும். ஸ்டாலினிச சமூக தேசிய வெறிகளுக்கும் எதிராக— எல்லா தேசிய இனங்களுக்கும் தேசிய சுய நிர்ணய உரிமையை வழங்கக் கூடியது, இந்தியா தமிழீழம், பர்மா,பங்களாதேஷ் பாகிஸ் தான் தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டி, உலக சோசலிசக் குடியரசுகளின் ஒரு பகுதியாக இந்திய உபகண்ட சோசலிசக் குடியரசுகள் அமைப்பதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

தொழிலாள விவசாயி அரசாங்கத்தை அமைக்க இரு ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் அவை முதலாளித்துவக் கட்சிகளுடன் வைத்திருக்கும் உறவைத்துண்டித்து வெளியேறி— காலவரையற்ற ஒரு பொது வேலை நிறுத்தத்தில் இறங்குமாறு நிர்ப்பந்திக்கவும் இதற்காக (CITU, AITUC தலைமைகள் வேலைப்) பாதுகாப்பு இவற்றை நடப்பேண அகில இந்திய அளவில் தொழிற்சங்கப்பிரதிநிதிகளின் மாநாட்டைக்கூட்டி காலவரையற்ற பொது வேலை நிறுத்தத்தில் இறங்கவேண்டுமென்றும் நிர்ப்பந்தித்து போராட்டத்தை முன்னெடுக்கும் டிராட்ஸ்கிசக் கட்சியான சோசலிசத் தொழிலாளர் கழகத்தைக் கட்டி அமைக்கவேண்டும்.

சோசலிசத்தொழிலாளர் கழகம் பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கிறது.

- தொழிலாளர்களின் சர்வதேச ஐக்கியம் ஓங்குக!
- சட்ட விரோதமாக வேலை நீக்கப்பட்ட 500 தொழிலாளர்களை நிபந்தனையின்றி வேலைக்கமர்த்து!
- பொய் வழக்குகளை நிபந்தனையின்றி வாபஸ் வாங்கப் போராடு!
- கணக்குப் புத்தகங்களைத் தொழிலாளர்களின் பார்வைக்குத் திற!
- நிர்வாகத்திற்குத் துணை போகும் கருங்காலிகளின் முயற்சிகளை முறியடி!
- ஸ்ரீ பாலாஜி கேஸ் சிலிண்டர் உட்பட அனைத்து ஆலைகளையும் வங்கிகளையும் ஒரு பைசா கூட நஷ்ட ஈடு எதுவுமின்றி, தொழிலாள வர்க்க ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கு!

டும் என்பதாகும். ரணதிவே மேலும் இந்திய அரசாங்கத்திற்கு புத்திமதி கூறுகிறர்: "அணிசேரா இயக்கத்தில் ஒரு முன்னணி உறுப்பினராக இருக்கும் இந்திய அரசாங்கத்திற்கு ஒரு மிகப்பெரும் பொறுப்பு உண்டு. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் தளர்ச்சி இரு மக்களையும் பாகுபடுத்தி தாக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக அணிசேரா நாடுகளின் நட்பிற்கு ஒரு தோல்வியாக இருக்கும், தேசிய நலன்களின் நியாய பூர்வமான பாதுகாப்புடன் உறுதியாக இருக்கக்கூடியதான அதிகூடிய சலுகைகளை வழங்குவது பிரயோசனமுள்ளதாயிருக்கும்."

இந்திய முதலாளித்துவத்திற்கு வக்காலத்து வாங்கும் இந்த எதிர்ப்புரட்சிகர ஸ்டாலினிச தலைமைகளின் தேசியவாதத்தை நிராகரித்த தொழிலாளர்கள் சர்வதேசிய வாதத்தின் அடிப்படையில் நேபாள மீதான இந்தியத் வர்த்தக தடைகளை அகற்றும்படியும், பிற்போக்கு காங்கிரஸ் ஆட்சியைத் தூக்கி வீசி சோசலிச மற்றும் பூர்த்தி செய்யப்படாத ஜனநாயக வேலைத்திட்டங்களுக்காகவும் போராடும் ஒரு தொழிலாள விவசாய அரசாங்கத்தை அமைக்க ஸ்டாலினிச சி.பி.எம் சி.பி.ஐ. முதலாளித்துவ கட்சிகளுடன் உறவைத் துண்டித்து ஒரு காலவரையற்ற பொது வேலை நிறுத்தத்தின் மூலமாக போராட வேண்டுமெனதொழிலாளர்கள் கோர வேண்டும். அதேபோல் நேபாள தொழிலாளர்கள், நேபாள அரசாங்கம் இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிராக கொண்டு வந்துள்ள பாகுபடுத்தும் சட்டங்களுக்கு எதிராகவும், நேபாள முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியாக இந்திய உபகண்டத்தில் ஐக்கிய சோசலிச குடியரசுகளுக்காக போராட வேண்டும். அதற்கு பேர்கூறிய சர்வதேசிய புரட்சிகர வேலைத்திட்டங்களுக்காக போராடும் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பகுதியை நேபாளத்தில் கட்ட வர்க்க நனவுள்ள தொழிலாளர்களும் இளைஞர்களும் முன்வரும்படி சோசலிசத் தொழிலாளர் கழகம் அழைக்கிறது.

நேபாளத்திற்கு எதிரான பொருளாதாரத்தடையை முறியடிக்கவும், உலக முதலாளித்துவ நெருக்கடியையும், ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகளின் பிற்போக்கு தேசியவாத சந்தர்ப்பவாதங்களை அம்பலப்படுத்தி டிராட்ஸ்கிச வேலைத்திட்டத்தை விளக்கி சோசலிசத் தொழிலாளர் கழகம் சென்னையில் ஓட்டேரியில் ஜூன் 4ல் கலைவாணி தர்சிபள்ளியில் பகிரங்கக் கூட்டம் நடத்தியது.

**ஸ்டாலினிச சி. பி. எம். சி. பி. ஐ. தலைமைகளை முதலாளித்துவ கட்சிகளுடனான அவற்றின் உறவுகளைத் துண்டித்து, தொழிலாளர்கள். விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கப் போராடும்படி நிர்ப்பந்தி!**

சோசலிசத் தொழிலாளர் கழகத்திற்காக S. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் கொண்டு S. சுந்தரம் அவர்களால் சுந்தரம் பிரிண்டிங் ஒர்க்ஸில் அச்சிடப்பட்டது.

படிப்பகம்